கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(18.11.2018 - 18 கார்த்திகை 2018 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 09, கதிர் - 196, 20 பக்கங்கள் ரூபா: 30.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /72 / NEWS / 2018



நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து அனைத்துலக ஆண்டவர்

25.11.2018

# ஞான ஒளி

ඥාන ඔලි

GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05

பக்கம் 03



வன்முறை ஒழிப்பு நாள் – 25.11.2018

பக்கம் 05



கலங்காதே

பக்கம் XIX



தெரிவோம் தெளிவோம்

# திருத்தந்தையுடன் இரண்டாவது உலக வறியோர் நாள்



கார்த்திகை 18, வரும் ஞாயிறன்று, சிறப்பிக்கப்படும் உலக வறியோர் நாளையொட்டி, அவர்களுடன் இணைந்து, காலை திருப்பலி நிறைவேற்றும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 6000 ஏழைகளுடன் அமர்ந்து, மதிய உணவருந்துவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2016ம் ஆண்டு கார்த்திகை மாதம் நிறைவுற்ற இரக்கத்தின் யூபிலி ஆண்டின் இறுதியில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் அறிவிக்கப்பட்ட இந்த உலக வறியோர் நாள், கடந்த ஆண்டு முதன் முறையாக சிறப்பிக்கப்பட்டது. புதிய நற்செய்தி அறிவித்தலை ஊக்குவிக்கும் திருப்பீட அவையால் ஏற்பாடுச் செய்யப்பட்டுள்ள இந்த உலக வறியோர் நாள் நடவடிக்கைகள், வரும் ஞாயிறன்று, உரோம் நகர் புனித பேதுரு பேராலயத்தில் மட்டுமல்ல, உலகின் அனைத்து பங்குதளங்களிலும் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. வரும் ஞாயிறன்று காலை, 10 மணிக்கு, உரோம் நகர் புனித பேதுரு பசிலிக்காப் பேராலயத்தில்,...

15

# ஞானார்த்த பிரதீப்பய பத்திரிகை எழுத்தாளர்களுக்கான பாராட்டு வைபவம் – 2018



ஞானார்த்த பிரதீப்பய எழுத்தாளர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட 2018ம் ஆண்டிற்கான பாராட்டு வைபவம் 13.11.2018 அன்று மாலை 6.00 மணிக்கு மருதானை புனித சூசையப்பர் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. அன்றைய நிகழ்வில், வாழ்க்கையில் ஒருமுறை மட்டுமே வழங்கப்படுகின்ற சிறப்பு விருதினை ஓய்வுபெற்ற பேராயர் அதிமேதகு. ஓஸ்வல் கோமிஸ் ஆண்டகை, கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையிடமிருந்து பெற்றுக்கொண்டார். மேற்படி பத்திரிகை ஆசிரியர் கலாநிதி. அருட்பணி. கமிலஸ் பர்னாந்து, திரு சிரான் மைத்திரி, திரு கமிலஸ் குறே ஆகியோரையும் படத்தில் காணலாம்.

## 08.12.2018 மரியின் அமல உற்பவம் [கடன்திருநாள்]



## வாழ்த்துகின்றோம்



தமது பெயர்கொண்ட திருநாளையும் பிறந்த நாளையும் 15.11.2018 அன்று கொண்டாடும் எமது பேராயர் ஆண்டகை உடல் உள நலத்தோடு வாழ ஞான ஒளி செபத்தோடு வாழ்த்துகின்றது.

✿✿✿ ✿✿✿

# அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை வெள்ளவத்தை பங்கு புனித லோரன்ஸ் ஆலயத்தை தரிசித்தார்.



இம்மாதம் 10,11ம் திகதிகளில் எமது கர்தினால் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை வெள்ளவத்தை புனித லோரன்ஸ் பங்கு ஆலய மக்களைச் சந்தித்தார். 10ம் திகதி காலை பங்கு மக்களையும், பங்கில் இயங்கிவரும் பக்திச்சபைகளையும் சந்தித்து தனது கருத்துக்களை பரிமாறிக் கொண்டார்.

அவர்களிடம் உரையாடுகையில் செபமாலை தியானத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். எத்தகைய வேலைகள் இருந்தாலும் குடும்பமாக செபமாலையை சொல்லவேண்டும். ஒருவேளையாவது குடும்பத்தினர் ஒரு காரணிக்கமாவது சொல்லுவதைப் பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். குடும்பங்கள் ஒன்றுகூடி செபிக்கும்போது அங்கு சமாதானம், அன்பு, ஒற்றுமை நிலவுகிறது. குடும்பத்தில் விசுவாசம், பிள்ளைகளிடையே விசுவாசம் வளர செய்ய காரணமாக அமைகிறது என்று கூறினார்...

15

# அரசியலானது சமாதானத்தை நிலைநாட்டவே!



அரசியலானது சமாதானத்தை நிலைநாட்டுவதற்காகவும், பாதுகாப்புக்கும் மற்றும் நிர்வாகத்திற்கும் பொறுப்பானவர்கள் அதற்காக கடமையுணர்வுடன் கட்டாயமாக செயற்பட வேண்டுமெனவும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தெரிவித்தார். உலக சமாதான தின செய்திக்கான கருப்பொருளாக, “சிறந்த அரசியல்” என்பது அமைகிறது. அரசியல் அர்ப்பணிப்பு, இரக்கச் சேவைகளை உயரிய விதத்தில் பரப்புவதற்கு வழிவகுக்கும்..

15

## மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கான நிதியுதவி

கத்தோலிக்க மருத்துவர்களின் கில்ட் அமைப்பின் நிதி உதவித் திட்டத்தின் மூலம் மருத்துவ ஆயுர்வேதக் கல்வி முதலாம் ஆண்டு கற்கைநெறியை ஆரம்பிக்கும் மாணவர்களுக்கு உதவிகள் வழங்க முன்வந்துள்ளனர். ஆர்வமுள்ளவர்கள் நுழைவு ஆவணத்துடனும், பங்குத்-தந்தையின் கடிதத்துடன் மற்றும், தேவைப்பாட்டை உறுதி செய்யும் கல்வியக தலைமை ஆசிரியரை தொடர்பு கொள்ளவும்.

15

## அறிவித்தல்

மார்கழி 16ம் திகதி ஞான ஒளி பத்திரிகையானது 23ம் திகதி நத்தார் பத்திரிகையாக வெளிவரும்

**ஆண்டவர் ஆட்சி செய்கின்றார். மாட்சியை ஆடையாக அணிந்துள்ளார். (தி.பா 93)**

# அன்பு உறவுகளின் நினைவுகளின் நிமித்தம் நன்கொடை வழங்குங்கள்.

கார்த்திகை மாதமானது எம்மை விட்டுச்சென்ற அந்த உறவுகளுக்காக செபிக்கும், அவர்களை நினைவுகூரும் மாதமாகும். இதனூடாக செத்சரண, கரித்தாஸ் கொழும்பு அமைப்பானது எமது சமூக நலத்திட்டங்களுக்கு நன்கொடை வழங்க அன்புடன் அழைத்து நிற்கின்றது. உங்கள் அன்பு உறவுகளின் நினைவின் நிமித்தம் “புதிய வாழ்வினை எம் பிள்ளைகளுக்காக பெற்றுக்கொள்ளுங்கள்”. செத்சரண, கரித்தாஸ் கொழும்பு என்பது இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் உயர்மறைமாவட்டத்தில் அமைந்துள்ள சமூக நலத்திட்டங்களை மேற்கொள்ளும் ஒரு முக்கியமான அமைப்பாகும். இவ்வமைப்பானது அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்களின் வழிகாட்டுதலுடனும், மேற்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவும் குறிப்பாக பிள்ளைகளுக்கு சேவை செய்யவும், இன, மத, பாலின பாகுபாடின்றி செயலாற்றுகின்றது. உங்கள் நன்கொடைகளானது ஏழைகளுக்கு உதவ பயன்படும். காசோலைகள் மற்றும் பணவைப்பின் மூலமாக நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படும். பின்வரும் வங்கிக் கணக்கு இலக்கங்களின் மூலம் நன்கொடைகள் மேற்கொள்ளலாம். மேலும் பணவைப்பின் பற்றுச்சீட்டின் பிரதியானது அமைப்பிற்கு கிடைக்கப்பெறுமாறு செய்யவும்.

| | | |
|---|---|---|
| கணக்கு உரிமையாளர் | : | Seth Sarana CC |
| C/A இலக்கம் | : | 102010111865 |
| M/M | : | 108020241631 |
| Swift Code | : | HBLILKLX |
| Bank | : | Hatton National Bank PLC,<br>No 696, Maradana Road, Colombo - 10. |
| Branch | : | Maradana |

**அருட்பணி. டி.என். லோரன்ஸ் ராமநாயக்க**
**இயக்குனர், செத்சரண கரித்தாஸ் கொழும்பு.**


# முதல் தேவநற்கருணைத் திருப்பலி திரு இருதயநாதர் ஆலயம், கிருலப்பனை



கடந்த ஐப்பசி மாதம் 28ம் திகதி கிருலப்பனை, திரு இருதயநாதர் ஆலயத்தில் முதல் தேவநற்கருணைத் திருப்பலி மிகச் சிறப்பாக அர்த்தமுள்ள முறையில் இடம்பெற்றது. இம்முறை 12 மாணவர்கள் தேவநற்கருணை அருட்சாதனத்தைப் பெற்றுக்கொண்டனர். முதல் தேவநற்கருணைத் திருப்பலியை கார்மேல் சபையின் அருட்தந்தை பிரபு OCD அடிகளாரும், வதிவிடத்தந்தை பிரதீப் குமார் அடிகளாரும் இணைந்து கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர். இவ்வழகிய உன்னத நாளுக்காக சிறப்பான முறையில் உறுதுணையாக இருந்த எல்லாம் வல்ல மூவொரு இறைவனுக்கு கோடான கோடி நன்றிகள் உரித்தாகுக. திருப்பலியின் ஒரு பகுதியையும், மாணவர்களுடன் வழிப்படுத்திய மறையாசிரியர்களையும், அனைத்து மறையாசிரியர்களையும் படங்களில் காணலாம்.

**தகவல் : சகானா, மறைப்பணியாளர்**





கொழும்பு மா நகரில் கொம்பனித்தெருவில் ஒப்பற்ற அழகுடன் அமைத்து இருக்கும் எமது அன்னையாம் செபமாலை மாதாவின் ஆலய திருவிழா ஐப்பசி 14 இனிது நிறைவேறியது திருவிழா திருப்பலியை பங்குத்தந்தை பீட்டர் சுபராஜ் அவர்கள் நிறைவேற்றினார்.

**தகவல் : ஆலய மறை ஆசிரியர்கள்**



பமிலா டி சில்வா பாலர் பாடசாலையில் 20.10.2018 அன்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் இடம்பெற்ற சிறுவர்களின் அழகிய நடனங்களைப் படத்தில் காணலம்.

# கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை வெள்ளவத்தை புனித லோரன்ஸ் ஆலய பங்கு தரிசிப்பின் சில நிகழ்வுகள்




# குருத்துவப் பணி வாழ்வின் 50வது ஆண்டில் நன்றி



மன்னார் மறைமாவட்டத்தின் வங்காலை தூய ஆனாள் ஆலயப் பங்கின் நான்காவதும், அமல மரித் தியாகிகள் சபையின் குருவுமாகிய அருட்பணி. இ.செலஸ்ரின் சூசைதாசன் குரூஸ் (சி.எஸ்.குரூஸ்) அடிகளார் தனது

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# இரத்தினபுரி புனித இராயப்பர் – சின்னப்பர் பேராலய புனித செபமாலை அன்னையின் பேரணி

கடந்த 31ம் திகதியன்று மாலை புனித செபமாலை அன்னையின் பேரணியுடன் திருப்பலி ஆரம்பமாகியது. விசேட திருப்பலியினை பங்குத்தந்தை அருட்பணி. எனஸ்லி சுரங்க அடிகளாரும், உதவி பங்குத்தந்தை அருட்பணி. மரிய ஜோய் அடிகளாரும் இணைந்து ஒப்புக்கொடுத்தனர். அன்றைய தினம் மறையுரையிலே கத்தோலிக்கராகிய நாம் எப்போதும் தேவ அன்னையின் துணையை வேண்டி செபிப்பவர்கள், வாழ்பவர்கள். நமது அன்னைக்கு மங்கள் வார்த்தை கூறப்பட்ட போதே பரிசுத்த ஆவியால் ஆட்கொள்ளப்பட்டார். அதனால் நாம் மாதாவை நோக்கி “எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்” என்கிறோம் என்று அருட்தந்தை என்ஸ்லி கூறினார்.

விசேடமாக அன்றைய தினம் பேராலய பங்கிற்கு சொந்தமான பன்னிரண்டு வட்டாரங்களிலிருந்து ஒரு மாதமாக தமது வீடுகளில் மாதா தங்கியிருந்து தமது இல்லங்களையும், உள்ளங்களையும் ஆசீர்வதித்தார். எமக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தது. மன நிறைவாக இருந்தது. ஒருமாத காலமாக...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

ஞான ஒளி
GNANA OLI
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
18 கார்த்திகை, 2018 ஞாயிற்றுக்கிழமை.

# “இயேசுவே மீட்பராக, அரசராக நிலைகொண்டிருக்கின்றார்.”

**“என் தந்தையிடமிருந்து ஆசி பெற்றவர்களே, வாருங்கள்: உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப்பேறாகப் பெற்றுக்கொள்ளுங்கள்!”**

பொதுக்காலத்தின் இறுதி வாரமான 34வது ஞாயிறு தினமான இன்று திருவழிபாட்டின் இறுதி வாரமாகும் என்பதை கத்தோலிக்கர்களாகிய நாம் அறிந்ததாகும். இன்று நாம் நம் ஆண்டவராம் இயேசுவை நம் அரசராக ஏற்று, கிறிஸ்து அரசர் பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம். கிறிஸ்து அரசர் பெருவிழா பொதுக்காலத்தின் நிறைவாகவும், திருவழிபாட்டு ஆண்டின் கடைசி வாரமாகவும் இருக்கிறது. எதற்காக கிறிஸ்து அரசர் பெருவிழா, திருவழிபாட்டு ஆண்டின் கடைசி வாரத்தில் கொண்டாடப்படுகிறது என்ற எண்ணம் எம் உள்ளத்தில் தோன்றலாம். கிறிஸ்துவின் மகிமை திருவழிபாட்டு ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படவேண்டும் என்ற திருச்சபையின் வழிகாட்டலே இதற்கு காரணமாகும். இதேபோல, திருவருகைக்காலங்களில் சுட்டிக்காட்டப்படும் இயேசுவின் வருகை மற்றும் உலகத்தின் இறுதிநாட்கள் போன்றவற்றையும், இதில் நாம் சிறப்பாக புரிந்து கொள்ள உதவியாக இருக்கும்.

இறைவன்தான் நமக்கு என்றும் அரசர், அவருக்கே என்றென்றும் மகிமையும், ஆராதனையும், புகழ்ச்சியும் உரியது என்பதை உறுதிப்படுத்த வந்த விழாதான், இந்த கிறிஸ்து அரசர் பெருவிழா. இஸ்ரயேல் மக்களுக்கு, யாவே இறைவனைத்தவிர வேறு யாரும் அரசர் கிடையாது. அவர்களை ஏற்றுக்கொள்வதும் இல்லை. இறைவன் ஒருவரே அரசர். அவரைத்தவிர வேறு யாரையும், அந்த இடத்தில் வைப்பது கிடையாது. அதேபோல, விண்ணகம் மற்றும் மண்ணகத்தின் அரசர் நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து. அவர் சாவையே வெற்றி கொண்டு நமக்கெல்லாம் வாழ்வு கொடுத்தவர். அந்த வாழ்வை நமக்குக் கொண்டு வந்து, மீட்பராக, அரசராக இந்த வரலாற்றிலும் அவர் நிலைகொண்டிருக்கிறார்.

நாம் அனைவருமே அவரால் வாழ்வு பெற்றுள்ளோம். அவரது தியாகத்தால் மீட்பு பெற்றுள்ளோம். அந்த வாழ்வுக்கு தன்னையே அவர் தன்னுடைய உடலையும், இரத்தத்தையும் விலையாகக் கொடுத்தார். அத்தகைய அரசரை பெற்றுள்ள நாமும், நமது வாழ்வில், மற்றவர்களுக்காக, நம்மையே இழக்க முன்வருவதற்கு, இந்த விழா நமக்கு அழைப்புவிடுக்கிறது. எனவே இவ் அழைப்பை ஏற்று கிறிஸ்துவை எம் அரசராக வரவேற்கத் தயாராகுவோம்.

மேலும் உயிர் என்பது கடவுள் தந்த கொடை. அதுவும் அவர் சாயலில் கொடுக்கப்பட்டது. எனவே நாம் இவ்வுலகில் வாழும்வரையில் அனைத்து மனிதர்களையும் உண்மையாக அன்புசெய்து அவர்களை மதித்து இறையரசை உரிமையாக்கிக் கொள்வோம். ஏனெனில் இவ்வுலக வாழ்வோடு நமது வாழ்க்கைப் பயணம் முடிந்து விடுவதில்லை. மாறாக மரணத்திற்குப் பின்பும் நமக்கோர் வாழ்வுண்டு. அதனைத்தான் முடிவில்லா வாழ்வு நித்திய வாழ்வு என்று கூறுகின்றோம். எனவே இன்றைய நாளில் எமது மரணத்தையும் நினைவுப்படுத்துவோம். நாமும் ஓர் நாள் இறக்கப்போவது உறுதி. ஆனால் அத்தருணம் எமக்கு ஒரு மனநிறைவை தரும் தருணமாக நாம் நன்றாகவே வாழ்ந்தோம் என்ற திருப்தியை தரும் தருணமாக அமையவேண்டும். அப்போதுதான் நமக்கும் இறையரசில் உரிமைப்பேறு கிடைக்கும். ஆன்மாக்களுக்காக மன்றாட திருச்சபை எமக்குத் தந்த விசேட காலம் இதுவாகும். என்றாலும் எமது ஆன்மாவையும் காத்துக்கொள்ள முயற்சி செய்வோம். உலகம் முழுவதையும் தனதாக்கிக் கொண்டாலும் ஆன்மாவைக் காத்துக் கொள்ளவில்லை என்றால் பயனொன்றுமில்லை என்பதை எப்போதும் எம் உள்ளத்தில் இருத்திக்கொள்வோம்.

**இறையாசீருடன் ஆசிரியர்**

# பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு நாள்



## கார்த்திகை 25

வன்முறை “உலகம் முழுவதும் பரவிவரும் ஓர் உடல்நலப் பிரச்சினையாக” உள்ளது. உலகளவில், நாடுகளில், வீடுகளில் வன்முறையும், பலாத்காரமும், பாலியல் கொடுமைகளும் ஒவ்வொரு நாளும் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றது. ஒரு பெண்ணின் வாழ்க்கையில் அவர் சந்திக்கும் சவால்கள் ஆயிரம் ஆயிரம். ஏதாவது ஒரு காலகட்டத்தில் மூன்றில் ஒரு பெண் நெருக்கமான ஒருவரால் தாக்கப்படுகிறாள். அல்லது ஏமாற்றப்படுகிறாள். பெண்ணடிமை, பெண்கள் காணாமல் போவது, கடத்தப்படுவது, விற்பனை செய்யப்படுவது, கற்பழிக்கப்படுவது இன்றும் தொடர்கதையாகவே நிகழ்ந்துகொண்டிருக்கின்றன.

என்னதான் பெண்கள் எல்லாத் துறைகளிலும் முன்னேறினாலும் பெண்ணின் பெருமைகள் பேசப்பட்டாலும், ஆணைப்போல் பெண்ணுக்கும் சம உரிமை வழங்கப்பட்டாலும் பெண்கள் சந்திக்கும் மேற்கூறப்பட்ட சவால்களுக்கு முகம் கொடுக்கத்தான் வேண்டியுள்ளது. இந்த இழிவான செயல்களிலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ள வேண்டியவளாக பெண் இருக்கின்றாள் இதுதான் இன்றைய நடைமுறை உண்மை.

வன்முறை ஏன் இந்தளவு அதிகமாகி வருகிறது? அதற்கு பல காரணங்கள் சொல்லப்படுகின்றன, அவற்றில் சில: சமுதாய மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வின் காரணமாக வரும் மன அழுத்தம், மற்றவர்களுடைய உயிரைத் துச்சமாக நினைப்பது, மதுபானத்தையும் போதைப்பொருளையும் தவறாகப் பயன்படுத்துவது, பெரியவர்களுடைய வன்முறைப் போக்கை பிள்ளைகள் தங்களுடைய கண்ணால் பார்ப்பது, குற்றவாளிகள் தண்டனை பெறாமல் தப்பித்துக்கொள்வது. மேலை நாட்டு கலாச்சாரம் என்பவைகளும் காரணமாக அமைகின்றது. இதிலிருந்து வெளிவர வேண்டுமென்றால், அவர்களுடைய மனநிலையும் நடத்தையும் மாறுவதில்தான் இருக்கிறது. வன்முறையில் ஊறிப்போனவர்கள் மாற வேண்டுமென்றால்... பெருமை, பேராசை, சுயநலம் போன்ற குணங்களை விட்டுவிட்டு அன்பு, மரியாதை, மற்றவர்கள்மீது அக்கறை போன்ற குணங்களைக் வளர்க்கவேண்டும்.

கல்விக்கூடங்கள் மாணவர்களை பட்டதாரிகளாக, அறிவாளிகளாக, அந்தஸ்தில் மேம்பட்டவராக உருவாக்கி அனுப்புகின்றன. முதலில் நாகரீகமாக நடந்துகொள்ளும் நல்லவர்களாக உருவாகவேண்டும். மாணவப் பருவத்திலேயே குடிப்பவர்களாக, போதைப் பொருட்களுக்கு அடிமைப்பட்டவர்களாக, பைகளிலே அரிவாள், துப்பாக்கியைத் தூக்கிச் செல்லும் பிற்போக்குத் தளங்களில் வளர்ப்பவர்களாகும் போக்கைக் கட்டுப்படுத்த வேண்டும்.

ஐயோ! இவர்களின் எதிர்காலம் பாழாகிப் போகுமே! என்கிற பரிதாப குணங்களால் சமுதாயம் கெடுக்கிறது. சின்னத்திரைகளும், பெரியதிரைகளும் சமுதாயத்தைச் சீரழிப்பதைப் பேசுகிறவர்களும், எழுதுகிறவர்களும் சுட்டிக்காட்டுகின்றனர். இவர்கள் எத்தகைய பத்திரிகைகளில் எழுதுகிறார்கள், எத்தகைய தொடர்புச் சாதனங்களில் பேசுகிறார்கள் என்பதை கவனிக்கும்போது, போதிப்பவர்களின் கருவிகளை அருவருப்புடன்தான் நோக்க வேண்டியதாக இருக்கிறது. திரைப்படங்கள் அவ்வப்போது, போதிப்பவர்களின் கருவிகளை அருவருப்புடன்தான் நோக்க வேண்டியதாக இருக்கிறது. திரைப்படங்கள் அவ்வப்போது பெண்மையின் தியாகத்தை, முன்னேற்றத்தை உயர்த்திக் காட்டினாலும், அவர்களின் வியாபார நோக்கத்திற்காக பெண்மையை கேலி செய்கின்றார்கள் என்பதே உண்மை. அவர்களை அலங்காரப் பதுமைகளாக சிந்தித்து ஆடிப்பாட வைப்பதே திரைப்பட வியாபாரயுக்தி.


பழைய திரைப்படங்களில் கதாநாயகிகளின் ஆடைகளும் திறமைகளும் நாகரீகமாகச் சித்தரிக்கப்பட்டன. ஆடுவதற்கென்றே வரும் நடிகைகள் அரைகுறை ஆடையில் வந்து கிளப்புகளில் ஆடுவார்கள். அந்த நடனத்திற்கு “க்ளப் டான்ஸ்” எனப் பெயர். இப்போது கதாநாயகி பாடல் காட்சிகளில் “க்ளப் டான்ஸ்” உடைகள் உடுத்துகிறார்கள். எந்தக் கதையானாலும் அதில் ஆண் பெண்ணைத் துரத்த வேண்டும். கூட்டணி சேர்த்து கலாட்ட செய்து பாட்டுப்பாடவேண்டும்.

கதாநாயகன் ஒரேயொரு நாள் மட்டும் நாட்டின் முதல் அமைச்சராகப் பணியாற்ற வேண்டும் என்பது..

15

# உண்மை உரைக்கும்

கமிலஸ்



# கிறிஸ்து அனைத்துலக அரசர்

## பெருவிழா

கார்த்திகை 25



கிறிஸ்து அரசர், கிறிஸ்தவர்களின் அரசர்
கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல உலக
அனைத்திற்கும் அரசர்!
கிழக்கிலும் மேற்கிலும், வடக்கிலும் தெற்கிலும்,
கீழுலகோர் மேலுலகோர் மண்டியிட வணங்கும் அரசர்!

மன்னாதி மன்னன், மகிமையின் வேந்தன்
மனித குலத்தை மீட்டிட உதித்த மாமன்னன்
மங்கா மகிமையில், மானிடரை ஆள்கின்ற மாவேந்தன்.
மணிமுடி சூடிட மனித குலத்தை காக்கின்ற இறைவன்.

அனைத்துலக அரசர், அன்பில் ஆளும் வேந்தன்
அமைதியின் தேவன் அன்பே உருவான இறைவன்
அரசர்களுக்கெல்லாம் அரசர், அனைத்தும்
ஆளும் அரசர்
அகிலமெங்கும் அன்பின் அரசாட்சியில் ஆளும் தெய்வம்.

புகழ் வேந்தனைப் போற்றி வணங்கிடுவோம்
புகழ்வாய் ஜெருசலேம் உன் ஆண்டவனை புகழ்வாய்
புகழ்வாய் சீயோனே! புதுப் பொலிவுடன்
புகழ்வாய் பூவுலகமே மூவுலகாளும் மன்னனை

கவினூறு கவிதைகள் புனைந்து கனிந்திடும்
புதுமை உணர்வுடன்
களிகூர்ந்து பாடல் பாடி கானங்கள் இசைத்து
போற்றிடுவோம்.
கண்கவர் வேந்தனை காலமெல்லாம் வணங்கிட
கருணையுடன் எமையாளும் மாவீரன் வேந்தன்
அரசனை வேண்டிடுவோம்.

தெய்வீக வேந்தனே! தேசத்தையாளும் மன்னனே!
தெய்வமாய், தேவனாய் ஆளுமைய்யா எம்
அனைவரையும்,
தெருக்கலெல்லாம் கோலமிட்டு கொண்டாடுவோம்
தெய்வீகப் பிரசன்னம், தேசமெல்லாம் சிறந்திட
ஆனந்தம் அடைவோம்.

கோமகனே! தெய்வப்புதல்வனே! வேண்டுமையா
உன் பிரசன்னம்
கரகோஷமிட்டு ஆர்ப்பரிப்போம் உலகாளும்
எம் வேந்தனை

கோலங்கள் போட்டு, மேளங்கள் இசைத்து
வரவேற்போம் எம் வள்ளலை -ஒரு
கோடிப்பாடல்பாடி கொண்டாடுவோம் எம்
அரசர் புகழை

சமாதானத்தின் அரசனாய் எழுந்தருளுமையா
எம் தேசத்திற்கு
சத்தியவானாய் சாந்தியின் மன்னனாய் சமாதானம்
அருளுமையா,
சகலர்க்கும் சகலதுமாய் சாதி, சமய, மொழி
வேறுபாடுகள் களைய
சக்தியானவாய் சமத்துவம் அருள வேண்டுகின்றோம்
வேந்தனே.

உலகாளும் வேந்தனே! ஆளுவாய் எம் உலகை
உம் அன்பினால்,
உனது அரசு என்றும் நிலைக்க உத்தமனே
உம்மை வேண்டுகின்றோம்.
உயிர் வாழும் இறைவனே! ஊசலாடும் உள்ளங்களுக்கு
உயிரளிப்பாய்.
உனது புகழ் உலகெங்கும் ஒலிக்கட்டும், உன் இராட்சியம்
எங்கும் பரவட்டும்.

இறைவா! உம் அரசு எம்மத்தியில் மலர வேண்டுமையா,
இரக்கம், அன்பு, மன்னிப்பு, மாண்பு,
மலர வேண்டுமையா மனங்களில்,
இன்றும், என்றும் எந்நாளும் எம்முடன் இணைந்து
வழிநடத்துமையா
இதோ! உன் அன்பு மக்கள் இரங்கி
வேண்டுகிறோமையா.

வாழ்க அரசனே! வாழிய உன் அரசு வளர்க உம்
இராட்சியம்
வானமும் பூமியும் வாழ்த்தும் மன்னாதி மன்னனே.
வாருமையா! எம்மைக் காருமையா, கண்பாருமையா,
வாழ்த்துகின்றோம், வந்தனைகள் புரிகின்றோம்,
மாட்சிமையும், மகிமையும் உமக்கே!

பகைமைகள் மறைந்திட, பாரெங்கும் - உன்
பெயர் பறைசாற்றப்பட
பக்தர்கள்  கோடி புடைசூழ, பரமா உன் புகழ் ஓங்கிட,

பதம் பணிந்தோம் நாம் பாருமையா, பகை நீக்குமையா
பரமனே, இறைவா! உன் அரசு ஓங்கிட உலகெல்லாம்
உன் நாமம் ஓதப்படுக.

திக்குத்திசையெல்லாம் இறை உன் அரசு சிறக்க - பல
திருத்தங்கள் உருவாகி, நீதி, நேர்மை, சமத்துவம்
சகலர்க்கும் கிடைக்க,
திக்கற்ற மக்கள் பல திருப்பங்கள் கண்டு
மனித மாண்பு வளரவும்
திருந்திய உள்ளங்கள், தினந்தோறும் தோன்றிட
தேவனே! இறைவா! திருவருள் புரிவாய்

அருட்சகோதரி. டெளாறோஸ் அ.கா

# உண்மையே விடுதலை அளிக்கும்

ஒரு நாட்டைப் பேரரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் வாரிசு இல்லா அரசன்! அவனுக்குப் பிறகு நாட்டை ஆள ஆண் வாரிசு ஒருவனை தேர்ந்தெடுக்க நாட்டிலிருந்த தலைசிறந்த பன்னிரெண்டு இளைஞர்களை அழைத்துவரச் சொன்னான். பன்னிரெண்டு பேரும் வந்து நின்றனர். அரசன் போட்டி ஒன்றை அறிவித்தான்.

விதைகள் நிரம்பிய கூடையைக் காட்டி. "இளைஞர்களே, ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு விதையைப் பொறுக்கி எடுத்துக்கொள்ளுங்கள். நீங்கள் எடுக்கும் விதையைக் கொண்டு செழிப்பான செடியை யார் வளர்த்துக்காட்டுகின்றீர்களோ அவரே அடுத்த அரசர். மூன்று மாதங்கள் கழித்துச் சந்திப்போம்" என்றான்.

மூன்று மாதங்களுக்குப் பிறகு பதினொரு தொட்டிகளில் அழகான செடிகள் காணப்பட்டன. ஒரே ஒரு தொட்டி மட்டும் வெற்றுத் தொட்டியாக இருந்தது! அந்தத் தொட்டிக்குச் சொந்தமான இளைஞனைத் தனது வாரிசாகத் தேர்ந்தெடுத்தான் அரசன். மற்ற பதினோரு பேரும் திகைத்து நின்றார்கள். அவர்களைப் பார்த்து அரசன், "நான் தந்த விதைகள் அனைத்துமே வேகவைத்துக் காயவைத்த விதைகள். பின் எப்படி உங்கள் தொட்டிகளில் செடிகள் முளைத்தன? வாய்மையே வெல்லும். நீங்கள் வீட்டுக்குப்போகலாம்" என்றான்.

இந்தக் கதையில் வந்த அரசனைப் போன்றவர்தான் நமது கிறிஸ்து அரசர். இயேசு, வழியும், உண்மையும், வாழ்வுமாய் இருக்கின்றார். (யோவா. 14:6) ஒரு அரசனுக்கு தேவையானது உண்மை சொல்வதே.

உண்மை
மனிதனை
கடவுளிடம்
நெருங்கிப்போகச்
செய்கின்றது.

பொய்
கடவுளிடமிருந்து
மனிதனைப்
பிரிக்கின்றது.

உண்மை ஒரு
முறைதான்
காயப்படுத்துகிறது.
பொய்கள் எப்போதும்
காயப்படுத்துகின்றன.

உண்மைதான்
சுதந்திரமான
மனிதரின்
கடவுள்.

## கிறிஸ்து அரசர்

கிறிஸ்து அரசர்,
கிருபையின் அரசர்,
கருணையின் அரசர்,
காருண்யத்தின் அரசர்,

வானக அரசர்,
வார்த்தையாய்
வந்த அரசர்,
வாழ்வு தரும் அரசர்,

விண்ணக அரசர்,
மண்ணகம் வந்த,
மனிதரை மன்னித்த
மகிமையின் அரசர்,

ஏழையாய் வந்த
அரசர்,
ஏழையாய் வாழ்ந்த
அரசர்,
ஏழைக்காய் வாழ்ந்த
அரசர்,

ஒளியாய் வந்த அரசர்,
வழியாய் வந்த அரசர்,
வாழ்வாய் வந்த அரசர்,
வாழ்வு தந்த அரசர்


அன்பைப்போதித்த,
அஹிம்சையால்
சாதித்த,
அகிலம் போற்றும்
அருளின் அரசர்,

சிலுவை சுமந்த அரசர்,
சாவை வென்ற அரசர்,
சர்வ உலகிற்கும் அரசர்,
அவரே எங்கள்
கிறிஸ்து அரசர்.

ஆக்கம்:
பென்ஜமின் சோமநாதர்
தெஹிவளை.

## முன்னுரை

இந்நாட்களில் கல்லறைகள் அழகாக, துப்பரவாக காட்சி தரும். கார்த்திகை மாதம் என்றாலே இறந்தோரை சிறப்பாக நினைத்து, அவர்களுக்காக அதிகமாக செபிக்க, அவர்கள் சார்பில் தான, தருமம் செய்ய நம்மை தூண்டிவிடும். உண்மையிலேயே தங்களது மூதாதையரை அவர்களது நினைவுநாளில் நினைவுகூர்ந்து அவர்கள் வழியாக ஆசீர்பெறும் மரபு ஏறக்குறைய எல்லா இனத்தவரிடமும் உண்டு. இருப்பினும் கிறிஸ்தவர்கள் இன்னும் ஓர் படி மேலேபோய், இறந்தவர்களுக்காக தாங்கள் செபிக்கின்றபோது அவர்களின் ஆன்மா இறைவனிடத்தில் நித்திய இளைப்பாறுதல் அடையும், அவர்கள் செய்த பாவங்கள் மன்னிக்கப்படும் என்று நம்பினார்கள். இதற்கான சான்றை நாம் பழைய ஏற்பாட்டிலும் காணக்கூடியதாக உள்ளது. பெந்தக்கோஸ்து திருவிழாவின் பின் யூதர்கள், இதுமேயா நாட்டு ஆளுநனான கோர்கியா மீது போர்தொடுத்து வெற்றி கொண்டனர். இருப்பினும்



அருட்பணி. அந்திரியாஸ் பர்னாந்து அமதி

# கலங்காதே...

யூதர்கள் பலர் இறந்து போயினர். இறந்தோரை அவர்களது மூதாதையரின் கல்லறைகளில் அடக்கம் செய்ய முற்பட்டபோது, இறந்தவர்களின் ஆடைக்குள் யூதர்கள் அணியலாகாது என்று திருச்சட்டம் தடைசெய்திருந்த, சிலைகளின் அடையாளங்கள் தென்பட்டன. இப்பாவத்திலிருந்து முற்றிலும் விடுவிக்க மன்றாட்டில் ஈடுபட்டார்கள். மேலும் பணம் திரட்டி பாவம் போக்கும் பலி ஒப்புக்கொடுக்க எருசலேமுக்கு அனுப்பிவைத்தார். உயிர்த்தெழுதலை மனதில் கொண்டு, நன்முறையில், மேன்மையாக நடந்து கொண்டார் என்கிறது திருவிவிலியம். (அந்தப் பாவத்தை முற்றிலும் துடைத்தழிக்குமாறு வேண்டியவண்ணம் மன்றாட்டில் ஈடுபட்டார்கள். பாவத்தினின்று அகலும்படி பெருமகனார் யூதா மக்களுக்கு அறிவுரை கூறினார்; ஏனெனில் பாவத்தின் விளைவாக மடிந்தவர்களுக்கு நேர்ந்ததை அவர்கள் தங்கள் கண்ணாலேயே பார்த்தார்கள். பின்பு அவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் அவர் பணம் திரட்டி ஆறு கிலோ வெள்ளி சேகரித்து, பாவம் போக்கும் பலி ஒப்புக்கொடுக்கும்படி எருசலேமுக்கு அனுப்பிவைத்தார் இச்செயல்மூலம் உயிர்த்தெழுதலை மனத்தில் கொண்டு நன்முறையில், மேன்மையாக நடந்து கொண்டார். ஏனெனில் வீழ்ந்தோர் மீண்டும் எழுவர் என்பதை எதிர் பார்த்திருக்கவில்லை என்றால், அவர் இறந்தோருக்காக மன்றாடியது தேவையற்றதும் மடமையும் ஆகும். ஆனால் இறைப்பற்றுடன் இறந்தோர் சிறந்த கைம்மாறு பெறுவர் என்று அவர் எதிர்பார்த்திருப்பாரெனில், அது இறைப்பற்றை உணர்த்தும் தூய எண்ணமாகும். ஆகவே இறந்தவர்கள் தங்கள் பாவத்தினின்று விடுதலை பெறும்படி அவர் அவர்களுக்காகப் பாவம் போக்கும் பலி ஒப்புக்கொடுத்தார்.) (2மக்கபேயர் 12:42-46)

மேலும் இரண்டாம் வத்திக்கான் சங்க "திருச்சபை" எனும் கொள்கைதிரட்டு, இவ்வாறு பேசுகிறது : "கிறிஸ்து இயேசுவின் மறையுடல் முழுவதும் கொண்டுள்ள இவ்வொன்றிப்பை விருப்புடன் ஏற்று, கிறிஸ்தவ சமயம் தொடங்கிய காலத்திலிருந்தே, வழிப்போக்கர்களின் திருச்சபை இறந்தவர்களின் நினைவை வணக்கத்தோடு கொண்டாடி வந்துள்ளது" (50)

## வரலாறு

உங்களின் பொறுமையை சோதிக்கின்றேனா? சரி இறந்தோரை நினைவுகூறும் வரலாற்றை சற்று உற்றுநோக்குவோம். கி.பி 3வது நூற்றாண்டின் தொடக்கத்திலேயே, தெர்த்துலியன் கூறியுள்ளதுபோல், ஒருவர் இறந்த நாளன்றும், அதன்பிறகு ஆண்டு நினைவு நாளன்றும் அவருக்காக திருப்பலி நிறைவேற்றப்பட்டது. கி.பி 7வது நூற்றாண்டில் ஸ்பெயின் நாட்டில், இறந்த விசுவாசிகளின் நினைவு தூய ஆவியாரின் திருநாளுக்கு மறுநாள் கொண்டாடப்பட்டதற்கு ஆதாரம் இருக்கிறது. வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு நாட்களில் கொண்டாடப்பட்டு வந்தது. குளுனியைச் (பிரான்ஸ்) சேர்ந்த துறவி, மடாதிபர் புனித ஒடிலோனின் குறிப்பின்படி 998இல் கார்த்திகை 2ம் திகதி, குளுனி துறவற சபையின் எல்லா மடங்களிலும், அனைத்துப் புனிதர்களின் விழாவுக்கு மறுநாளில் இறந்த அனைத்து விசுவாசிகளின் நினைவு இடம்பெறுகிறது என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த காலங்களில் குளுனி துறவு மடங்கள் நிறைய இருந்ததனால் இந்த செபமுறை எல்லா இடங்களுக்கும் அடுத்தடுத்து பரவி ஐரோப்பா முழுமைக்கும் விரிவடைந்தது. பிரான்சில் உள்ள பல மறைமாவட்டங்களும் இறந்த அனைவரையும் இதே நாளில் நினைவுகூர்ந்து செபிக்கத் தொடங்கினார்கள். 14ஆம் நூற்றாண்டு முதல் கத்தோலிக்க திருச்சபை முழுவதும் இந்நாள் கொண்டாடப்படுகிறது. மேலும் இந்நாளில் குருக்கள் மூன்று திருப்பலிகள் நிறைவேற்றும் மரபு வெலன்சியா நகர் டொமினிக்கன் துறவிகளினால் 1500 ஆண்டுக்கு முன்பதாக ஆரம்பிக்கப்பட்டது. இப்பழக்கம் ஸ்பெயின், போர்த்துக்கல், இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்கும் 1748களில் பரவத் தொடங்கியது. கத்தோலிக்க திருச்சபை முழுவதும் இம்மரபை பின்பற்ற 1915ஆம் ஆண்டு 15ம் பெனடிக்ற் திருத்தந்தை பணித்தார். இதற்கு என்ன காரணம்? முதலாம் உலகப் போரில் எண்ணற்றோர் இறந்தனர். இதனை அடுத்து "இறந்த கணக்கற்ற வீரர்களுக்காக, ஏற்கனவே இறந்தவர்களுக்காக, யாரும் நினையாத ஆன்மாக்களுக்காக திருப்பலி ஒப்புக்கொடுங்கள்" என்று அறிவுறுத்தினார். இன்றும் தனிப்பட்ட கருத்திற்காக, இறந்தவர்களுக்காக, திருத்தந்தையின் கருத்துக்களுக்காக என்று குருக்கள் மூன்று திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கின்றார்கள்.

> "பகலுக்கு எல்லை இரவு, அந்த இரவுக்கு முடிவு விடியல். எனவே வாழ்வுக்கு எல்லை இறப்பு என்றாலும், அந்த இறப்புக்கு முடிவு உயிர்த்தெழுதலாகும்."

## சாவே...

"இறந்த விசுவாசிகள் அனைவரின் நினைவு, நிலையான மறையுண்மைகளைப் பற்றிச் சிந்திக்க வைக்கியது. மறைந்துவிடக்கூடியன எவை என்றும் நிலை வெற்றிருக்கக்கூடியன எவை என்றும் நம்மை சீர்தூக்கி பார்க்க வைக்கின்றது" எனச் சொல்கின்றார். புனித 23ம் யோவான் திருத்தந்தை. சாவு ஓர் சிறந்த ஆசான். இந்த உலகில் மனிதனாய் பிறக்கின்ற ஒவ்வொருவரும் சாவை நிச்சயம் சந்தித்தே ஆகவேண்டும். இறைவன் படைப்பின் தொடக்கத்தில் வாழ்வை உண்டு பண்ணினார். ஆனால் பாவத்தின் விளைவாக சாவு நுழைந்தது. புனித பவுலின் வார்த்தைகளில் இவ்வுலக வாழ்வு கூடார வாழ்க்கை போன்றது. நிரந்தரமானது அல்ல, தற்காலிகமானது. சாவு என்பது ஓர் கடத்தல். இவ்வுலக வாழ்விலிருந்து நிலையான, அதாவது இறைவனோடு வாழவேண்டிய நிலைவாழ்வுக்கு இட்டுச் செல்லும் ஓர் கடவையே சாவு. பகலுக்கு எல்லை இரவு, அந்த இரவுக்கு முடிவு விடியல். எனவே வாழ்வுக்கு எல்லை இறப்பு என்றாலும், அந்த இறப்புக்கு முடிவு உயிர்த்தெழுதலாகும். இதனையே இயேசு பின்வருமாறு கூறுவார். "உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார் (யோவா 11:25). இவ்வுலகில் பிறந்த ஒவ்வொருவரும் வாழத் துடிக்கின்றனர். எனவே சாவதற்கு மனிதன் பயப்படுகின்றான். தன் வாழ்வை அது அழித்துவிடும் என்ற பயத்தில் அஞ்சுகின்றான் அதை வெறுக்கின்றான். திருடன் வருவது போல் மரணம் வரும் திடீரென வரும், நிலை வாழ்வில் நம்பிக்கை உள்ளவர்களுக்கு மரணம் பயங்கரம் அல்ல. "நம்பிக்கையாளர்களுக்கு வாழ்வுமாறுபடுகின்றதே அன்றி, அழிக்கப்படுவதில்லை. சாவது திண்ணம் எனும் நியதி எங்களை வருத்தத்தில் ஆழ்த்தினாலும் வரவிருக்கும் அழிவில்லா வாழ்வு இனி உண்டு எனும் வாக்குறுதி எங்களுக்கு ஆறுதல் அளிக்கின்றது. இந்த மண்ணக வாழ்வின் உறைவிடம் அழிந்ததும் விண்ணகத்தில் நிலையான வீடு ஆயத்தமாய் இருக்கின்றது" "ஏனெனில் நாங்கள் அனைவரும் சாகாமலிருக்கக் கிறிஸ்து ஒருவரே சாவை ஏற்றுக்கொண்டார் நாங்கள் அனைவரும் என்றும் உமக்காக வாழ்ந்திட அவர் ஒருவரே சாகத்திருவுளமானார்". "ஏனெனில் கிறிஸ்துவே உலகின் மீட்பு, அவரே மனிதருக்கு வாழ்வு, இறந்தோரின் உயிர்ப்பும் அவரே" "உமது ஆணைப்படி நாங்கள் பிறக்கின்றோம். உமது திருவுளம் எங்களை ஆண்டு நடத்துகின்றது. உமது கட்டளைக்கேற்ப மண்ணிலிருந்து உருவான நாங்கள், பாவத்தின் விளைவாக மண்ணுக்கே திரும்புகின்றோம். எனினும், உம் திருமகனின் சாவால் மீட்கப் பெற்றுள்ள நாங்கள் உமது திருவுளப்படி அவருடைய உயிர்ப்பின் மாட்சிக்கு எழுப்பப்படுகின்றோம்". "ஏனெனில் பாவத்தின் விளைவாக நாங்கள் அழிவுறுகின்றோம், பாவத்தால் சாவுக்கு ஆளாயினும் கிறிஸ்துவின் வெற்றியினால் மீட்கப்பட்டு அவரோடு மீண்டும் வாழ்வுக்கு அழைக்கப்படுவது உமது பரிவிரக்கம் உள்ள அருளினால்தான்" (இறந்தோர் தொடக்கவுரை I,II,III,IV,V)

மேற்கூறிய திருப்பலி தொடக்கவுரைகளின் தொகுப்பு மரணத்தை கண்டு நாம் அஞ்சவேண்டியதில்லை. மாறாக நாம் இறைத்தந்தையின் வீடு நோக்கிப் பயணிக்கும் நேரம். இறைவனின் விருப்பப்படி, தன் இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்டு, தன் தந்தையின் வீடு நோக்கி ஒருவர் மேற்கொள்ளும் ஓர் வெற்றிப் பயணம். ஒரு கிறிஸ்தவர் தன் மரணத்தின் வாயிலாக சிலுவையில் அறையுண்டு இறந்து உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளிலே உறுதியாகவும் நிரந்தரமாகவும் நுழைகின்றார். வாக்களிக்கப்பட்ட கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது நிகழவிருக்கும் தன் உயிர்ப்பை எதிர்பார்த்து அவரில் இளைப்பாறுகிறார். இதுவே நம் கிறிஸ்தவ எதிர்பார்ப்பு, நம்பிக்கை.

"சகோதர சகோதரிகளே! இறந்தோரைப் பற்றி நீங்கள் அறிந்திருக்க வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். எதிர்நோக்கு இல்லாத மற்றவர்களைப் போல் நீங்களும் துயருறக் கூடாது. இயேசு உயிர்த்தெழுந்தார் என நாம் நம்புகிறோம். அப்படியானால், இயேசுவோடு இணைந்த நிலையில் இறந்தோரைக் கடவுள் அவருடன் அழைத்து வருவார்.... இவ்வார்த்தைகளைச் சொல்லி ஒருவரை ஒருவர் தேற்றிக் கொள்ளுங்கள். (1தெச 4:13-18)

**"எனவே சாவு கிறிஸ்துவின் அருங்கொடை ஓர் அற்புதமான மருந்து. உடலின் சாவு என்பது மனித இயல்பு, இதன் பொருட்டு நமது இச்சைகளிலிருந்து நம்மை அகதிகளாக்கிக் கொள்ளவேண்டும். அப்போது இச்சைகளுக்கு நம்பிக்கை அளிக்காமல் இயற்கையின் பசிக்கு அவசியமான உணவு அளித்தாலும், அருள்வாழ்வைப் பெரிதெனப் பேணி வாழவேண்டும்."**

(புனித பெர்நார்து)

இயற்கையிலே இயல்பாகவே புதுப்பிறப்பைக் காண்கின்றோம். இலையுதிர் காலத்தில், இலைகளை இழந்து பட்டமரம்போல் காட்சிதரும் மரம் வசந்த காலத்தில் தளிர்விட்டு முன்னரைவிட அழகாக காட்சி தருகிறது. மண்ணில் புதைக்கப்பட்ட விதை மக்கி, மடிந்து, தன் உருவை இழந்து, மீண்டும் புத்துயிர் பெற்று, புதுச்செடியாக உருவாகி, வளர்ந்து, பூத்து, குலுங்கி, கனி கொடுக்கிறது. உலர்ந்த எலும்புகள் புத்துயிர் பெற்று எழுவதை எசேக்கியேல் இறைவாக்கினர் தருகிறார். மனிதன் பிறப்பது இறப்பதற்காக அல்ல. மாறாக இறப்பின் வழியாக அவன் இறைவனின் புதுப்பிறப்பும் அடைகின்றான். புது உயிர் பெறுகின்றான். புது வாழ்வுக்குள் காலடி பதிக்கின்றான். புது வாழ்வு என்பது இருள் நிறைந்த வாழ்வில் இருந்து ஒளி நிறைந்த வாழ்விற்கும், பொய்மையிலிருந்து மெய்மைக்கும், துன்பம் நிறைந்த வாழ்விலிருந்து மகிழ்ச்சி நிறைந்த வாழ்விற்கும், சாவிலிருந்து வாழ்விற்கும் கடந்து செல்வதாகும். இதுதான் கிறிஸ்தவ நம்பிக்கை. ஏனெனில் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் இறந்து, அடக்கம் செய்யப்பட்டு, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். ஆகவே அவரில் நம்பிக்கை கொண்டு வாழ்வோர் அனைவர்க்கும் அவ்வாழ்வில் பங்குண்டு....

தொடர்ச்சி 15ம் பக்கம்..



# குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

165

# பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கிடையிலும் உள்ள உறவு.



குழந்தை பிறந்த பின்பு தாய் தனது பிள்ளை மீது அதிக கவனம் செலுத்துவது இயற்கை. ஆனால் அவள் தனது கணவன் மீது உள்ள அக்கறை தொடர்பைக் குறைக்கக்கூடாது. குறைத்தால் தந்தைக்குத் தனது பிள்ளையின் மீது பொறாமை, ஆத்திர உணர்வு ஏற்பட வழிவகுக்கும்.

பிள்ளை முதன்முதலில் புரளுகின்றது. அப்போது அருகிலிருப்பவர் பிள்ளைக்கு நோகும் என எண்ணி அதைப் புரட்டி விடுவது தவறு. தானாகப் புரளும் போது அதன் ஆளுமை வளர்ச்சி பெறுகிறது. நாம் உதவி செய்து புரட்டிவிடும் போது சுயமாகச் சிந்திக்கும் ஆற்றல் குறைகிறது. இது தவளுதல், நடத்தலிலும் பொருந்தும். பெற்றோர் அருகில் இருந்து பிள்ளை விழாது பார்த்துக்கொள்ள வேண்டுமே தவிர தாம் செய்வது தவறு.

பிள்ளை பெற்றோரை எல்லா விதத்திலும் பின்பற்றுகின்றது. பொய் சொல்லும் பெற்றோரானால் பிள்ளையும் பொய் சொல்லப்பழகும். சண்டை போடும் பெற்றோரானால் பிள்ளையும் சண்டை போடப் பழகும். கூடாத வார்த்தைகளைப் பெற்றோர் பேசினால் பிள்ளையும் அதனைப் பேசப்பழகும். ஆகவே பெற்றோரின் முன்மாதிரிகை பிள்ளையின் ஆளுமையில் தாக்கத்தை ஏற்படுத்தும். கணவனுக்கும் மனைவிக்குமிடையில் சண்டை ஏற்பட்டு இருவரும் கதைக்காதிருந்தால் பிள்ளையிடம் கூறியே இருவரும் தொடர்பு கொள்வர். உதாரணமாக "மகன் அப்பாவைச் சாப்பிடச் சொல்லு" என்கிறாள் தாய். அதற்குப் பதிலைத் தந்தை மகனிடம் "அப்பாவுக்குச் சாப்பாடு தேவையில்லையெண்டு சொல்லு" எனக் கூறுகின்றார். இவை பிள்ளையின் ஆளுமை வளர்ச்சிக்கு உகந்ததல்ல.

கணவனும் மனைவியும் ஒரேவிதமாகத் தீர்மானம் எடுப்பதைப் பிள்ளை காணுதல் வேண்டும். உதாரணமாகப் பிள்ளையை "விளையாடப்போக வேண்டாம்" என்று தாய் கூறுகின்றாள். தந்தை பிள்ளையைப் பார்த்து "நீ போய் விளையாடு" எனத் தந்தை கூறுகிறார். இதுவும் முன்மாதிரிகையான நடத்தையல்ல.

கணவனுக்கும் மனைவிக்குமிடையில் சந்தேகம் ஏற்பட்டு கணவனின் தவறை மனைவி தனது பிள்ளையிடம் சொல்லிப் பேசுகிறாள். அதேபோன்று கணவனும் பிள்ளையிடம் மனைவியின் தவறுகளைச் சொல்லிக்காட்டிப் பேசுகின்றனர். இது தவறான ஒன்றாகும். இப்படி நடப்பது பெற்றோரில் பிள்ளைக்குத் தவறான எண்ணத்தை உருவாக்கிவிடும்.

பெற்றோர் பிள்ளைக்குப் பொருத்தமில்லாத வயதில் தேவைகளை உருவாக்குகின்றனர். உதாரணமாக ஒரு தாய் தனது பிள்ளைக்கு இரண்டு வயதில் ஓடாத விளையாட்டுக் கை மணிக்கூடு ஒன்று வாங்கிப் பிள்ளையின் கையில் கட்டிவிட்டாள். அது காலப்போக்கில் வெளியில் போகும் போதெல்லாம் மணிக்கூட்டைக் கட்டிக் கொண்டு செல்லப் பழகியது. சில காலத்தின் பின் தனது மணிக்கூடு ஓடவில்லை அப்பாவின் கையிலுள்ள மணிக்கூடு ஓடுகிறது. எனக்கு ஓடுகின்ற மணிக்கூடு வாங்கித் தாருங்கள் என அழத் தொடங்கியது. ஐந்து வயதில் ஓடுகின்ற மணிக்கூடு கட்டப் பழகியது. இது பொருத்தமற்ற வயதில் நாமே தேவையை உருவாக்குகின்றோம். அது வளர்ந்ததும் ஆடம்பரமான வாழ்க்கை வாழப் பழகும். அவசியமானதை மட்டும் பாவிக்கின்ற பழக்கத்தைக் கைவிடும். இது பெற்றோரின் தவறான பழக்கத்தால் ஏற்பட்ட விளைவாகும்.

கணவன் மனைவியை மதித்து அன்பு செய்யும் போது பிள்ளையும் மற்றவர்களை மதித்து அன்பு செய்யப்பழகும். மனைவி கணவனுக்குக் கீழ்படியும் போது பிள்ளையும் பெற்றோருக்குக் கீழ்ப்படியப் பழகும். கணவன் மனைவிக்கிடையில் நல்ல தொடர்பு இல்லையேல் ஒருவர் மற்றவரின் குறைகளையே பிள்ளைக்குச் சொல்லிப் பழக்கினால் பிள்ளை பெற்றோருக்குக் கீழ்ப்படியப்பழகாது.

பெற்றோர் சிறுவயதிலிருந்து பிள்ளைக்கு இறை நம்பிக்கையை ஏற்படுத்தித் தமது வாழ்வில் கடைப்பிடித்தால் பிள்ளை சிறுவயதிலிருந்தே கடவுள் நம்பிக்கையுள்ள பிள்ளையாக வளரும்.

பெற்றோர் பிள்ளைகளைச் செய்யக்கூடாது என்று கட்டளையிட்ட செயல்களைத் தாம் பிள்ளைகளின் முன்பு அதனை மீறிச் செய்யும்போது பிள்ளைகளுக்குப் பிரச்சினையை ஏற்படுத்தலாம். உதாரணமாக பிள்ளையைப் பொய் சொல்லக்கூடாது எனக் கூறிவிட்டுப் பெற்றோர் பொய் சொல்வதைக் கண்ட பிள்ளைக்குப் பிரச்சினை ஏற்படுகின்றது. பிள்ளையைப் புகைபிடிக்காதே என்று கூறிவிட்டுத் தந்தை புகைபிடிக்கும் போது பிள்ளைக்குப் பிரச்சினை ஏற்படலாம்.

பெற்றோர் பிள்ளைகளுடன் கலந்துரையாட வேண்டும். வளர்ந்த பிள்ளையானால் தாய் மகளுடனும் தந்தை மகனுடனும் ஆழமாகக் கலந்துரையாட வேண்டும். அவர்களுடைய தேவைகளைக் கேட்டறிந்து புரிந்துணர்வுடன் நடப்பது முக்கியம். அளவுக்கதிகமான கண்டிப்பு பிள்ளையின் மனநிலையைப் பாதிக்கும். பிள்ளைக்கு அன்பு காட்டாமை, பயமுறுத்துதல், நிபந்தனை போட்டு அன்பு செய்தல் எல்லாமே பிள்ளையின் மனதில் பாதிப்பை ஏற்படுத்தும்.

பிள்ளைகளைக் கண்டிக்கும்போது தனது கோபத்தைத் தீர்த்துக்கட்டும் விதத்தில், நரம்புத்தளர்ச்சியான நேரத்தில் நிதானத்தை இழந்து தண்டிப்பது தவறு. தண்டனை எதற்கு என்பதைத் தெளிவாக்கிய பின்பே தண்டனை கொடுக்க வேண்டும். தண்டனை நியாயமானதாக இருக்க வேண்டும். சிறிய குற்றத்துக்கும் பெரிய குற்றத்துக்கும் ஒரே தண்டனையாக இல்லாமல் குற்றத்துக்கேற்ற தண்டனை கொடுக்க வேண்டும். மற்றவர்கள் முன்னிலையில் தண்டிப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

ஆகவே மேற்கூறியவைகளை நோக்கும் பொழுது தான் தன்னுடன் நல்ல உறவை ஏற்படுத்த வேண்டும். அதற்கு இறைவனோடு நல்ல தொடர்பை ஏற்படுத்துவது நன்று. அதன் மூலம் கணவன் மனைவி தமக்கிடையில் நல்ல தொடர்பை ஏற்படுத்துவது நன்று. அதன் மூலம் பெற்றோர் பிள்ளைகளுக்கிடையில் நல்ல உறவு ஏற்படும். நல்ல குடும்பம் உருவாகினால் நல்ல சமுதாயம் உருவாகும்.

பிள்ளைகள் மேல் குறை கூறாது பெற்றோர் முதலில் முன்மாதிரிகையாக வாழப்பழகினால் பிள்ளைகள் தானாகவே நன்றாக வளருவர். எமது நாட்டில் நல்ல உறவை வளர்ப்போம். அதன் மூலம் நல்ல சமுதாயத்தைக் கட்டியெழுப்புவோம்.


தொடரும்

**பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா**
**உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.**

# கிளறீசியன் சபைக்கு மூன்று புதிய குருக்கள் 24.10.2018 அன்று திருநிலைப்படுத்தப்பட்டார்கள்.

## "இதோ நான் இருக்கின்றேன் அடியேனை அனுப்பும்"


**எசா 5:8**




கிளறீசியன் சபை துறவற குழுமத்தினைச் சேர்ந்தவர்களான சில்லாலை புனித கதிரை மாதா ஆலய பங்கு திருச்சபையைச் சேர்ந்த திரு. திருமதி. எட்வேட் கிறிஸ்ரி மேரி றோஸ் மலர் தம்பதிகளின் ஐந்தாவது மகனான அருட்பணி. எ.கி. பரிங்கரன் லீனஸ் (C.M.F) அடிகளாருக்கும், மன்னார் முத்திரிப்பு துறை செங்கோல் மாதா ஆலய பங்கு திருச்சபையைச் சேர்ந்த காலம்சென்ற திரு. யோசப் சேவியர், திருமதி. சூசையப்பு இருதய ராணி லெம்பட் தம்பதிகளின் இரண்டாவது மகனான அருட்பணி. சே. திபூசியஸ் (C.M.F) அடிகளாருக்கும், நெடுந்தீவு புனித பற்றிமா ஆலய பங்கு திருச்சபையைச் சேர்ந்த திரு. திருமதி. அன்ரனி மதுரநாயகம் அமலோற்பவ மல்லிகா தம்பதியினரின் மூன்றாவது மகனான அருட்பணி. அ. அபிலஸ் (C.M.F) அடிகளாருக்கும் அமலமரியின் மறைபோதக (கிளறீசியன் சபை) துறவற குழுமத்தின் ஸ்தாபகர் புனித அந்தோனி மரிய கிளாரட்ரின் திருவிழா தினமான ஐப்பசி மாதம் 24.10.2018 அன்று காலை 10.00 மணியளவில் யாழ் ஆயர் தேமகு. யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் அருட்பொழிவு செய்து திருநிலைப்படுத்தப்பட்டனர்.

இந்நிகழ்வுக்கு அகில உலக கிளறீசியன் சபை முதல்வர் யோசேப் (C.M.F) அடிகளாரும், அகில இலங்கை கிளறீசியன் சபை மாகாண அதிபர் அருட்பணி. றெக்ஸ் கொன்சன்ரயின் (C.M.F) அடிகளாரும் மற்றும் ஏனைய கிளறீசியன் சபை குருக்களும் ஏனைய மறைமாவட்டக் குருக்கள் துறவிகளும், யாழ் மறைமாவட்ட குருக்களும், துறவிகளும், பொதுநிலையினர் யாவரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்வுக்கு யாழ் கிளறீசியன் சபை மாவட்ட அதிபர் அருட்பணி. ஸ்ரீபன் (C.M.F) அடிகளாரின் தலைமையில் யாழ் கிளறீசியன் பொருநிலையினரும் இணைந்து சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டது. மேலும் யாழ் கிளரட்டின் இல்லத்தில் ஐப்பசி 15ம் திகதி தொடங்கி மாலை நேர நவநாட் வழிபாடுகளும் நடத்தப்பட்டு ஐப்பசி 23ம் திகதி நற்கருணை பெருவிழாவும் இடம்பெற்றது என்பது மிகவும் குறிப்பித்தக்க விடயமாகும். தொடர்ந்து அருட்பொழிவு பெற்ற புதிய குருக்கள் ஐப்பசி 26ம், 27ம், 28ம் திகதிகளில் தங்கள் உரிய பங்குகளில் வரவேற்கப்பட்டு முதல் திருப்பலிகளை நிறைவேற்றினர் என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். மேலும் புதிய குருக்களின் பணி சிறப்புடன் தொடர இறை ஆசீர் வேண்டி நிற்கின்றேன்.

**தகவல் : ய. தேவதாஸ் (I.V.D),**
**கோப்பாய்**



## இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

### பொதுக்காலத்தின் 33வது ஞாயிறு (18.11.2018)

**▶▶ பேதுரு ◀◀**

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் இறுதி வாரத்தைக் கடக்கும் நமக்கு இன்றைய இறைவார்த்தைகள் எச்சரிக்கை மணி அடிப்பதாக அமைந்துள்ளன. "விண்ணும் மண்ணும் ஒழிந்துபோகும், ஆனால் என் வார்த்தைகள் ஒழியவேமாட்டா" என்ற ஆண்டவர் இயேசுவின் வார்த்தைகள் நிறைவேறிக்கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எது நடந்தால் நமக்கென்ன என்ற ஒரு அசமந்தப்போக்கில் எமது செயல்பாடுகள் இருக்கின்றன. ஆண்டவரின் இரண்டாம் வருகை அவருக்கு உரியவர்களுக்கு பயங்கரமாக இருக்காது. ஆனால் நம்பிக்கையற்றோருக்கு அது பேரலையாக இருக்கும். இரண்டாம் வாசகம் கூறுவதுபோல கிறிஸ்து நமக்காக பலியாக்கப்பட்டுள்ளார். அவரது ஒரே பலி எப்போதும் மீட்புக்கு வழியாய் உள்ளது. ஆண்டவரின் இரண்டாம் வருகையின் போது துன்புறும் உலகம் முடிவுறும்போது புதுமனிதர்களாக புதுப்படைப்பாக நாம் மாறவேண்டும். அதற்கு எம்மிடம் மனமாற்றம் இருக்கவேண்டும். எப்பொழுதும் விழிப்பாயிருந்து செயல்பட முனைவோமாக.

**முதல் வாசகம் : தானி 12:1-3**
உம் இனத்தார் விடுவிக்கப்படுவர்.

**பதிலுரைப் பாடல் :**
இறைவா என்னைக் காத்தருளும்; உம்மிடம் அடைக்கலம் புகுந்துள்ளேன்.

**இரண்டாம் வாசகம் : எபி 10:11-14,18**
ஒரே பலியினால் என்றென்றைக்கும் நிறைவுள்ளவர் ஆக்கினார்.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா! மானிடமகன் முன்னிலையில் நிற்க வல்லவராவதற்கு எப்பொழுதும் விழிப்பாயிருந்து மன்றாடுங்கள். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : மாற் 13:24-32**

**விசுவாசிகளின் மன்றாட்டு**
ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இயேசுவின் நற்செய்திப் பணியை ஆற்றுவதே திருஅவையின் தலையான பணி என்பதை சிரமேற்கொண்டு பணியாற்றும் திருத்தந்தை ஆயர்கள் குருக்கள் துறவியர் இறைமக்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதித்து அவர்களுக்கு வேண்டிய உடல் உள ஆன்ம நலத்தை தந்தருள வேண்டுமென்று...

நாம் கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள். அவரது அன்புக்குரிய இறைமக்கள். எனவே அதற்குரிய இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை ஆகிய பண்புகளை அணிந்து கொண்டவர்களாக இறை இயேசுவை வரவேற்க விழிப்புடன் காத்திருக்க வேண்டிய மனதை தந்தருள வேண்டுமென்று...

விண்ணும் மண்ணும் ஒழிந்துபோகும், ஆனால் என் வார்த்தைகள் ஒழியவேமாட்டா என்ற இயேசுவின் வார்த்தைகளை நினைவிற்கொண்டு இறை வார்த்தையை ஏற்று அதன்படி வாழவும், இயேசுவின் வருகையின்போது அவரது நம்பிக்கைக்குரியவர்களாக இருக்கவும் மனமாற்றம் பெறவும் செபத்தில் நிலைத்திருக்கவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

### கிறிஸ்து அரசர் பெருவிழா (25.11.2018)

**வாசக விளக்கம்:** திருஅவையினரான நாம் இன்று கிறிஸ்து அரசர் பெருவிழாவை கொண்டாடுகின்றோம். உலக மக்கள் கிறிஸ்துவை நம்பவேண்டும் அவருக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்பதற்காக 1925ம் ஆண்டில் திருத்தந்தை 11ம் பத்திநாதர் கிறிஸ்து அரசர் பெருவிழாவை ஏற்படுத்தினார். கிறிஸ்துவே உண்மையான அரசர். அவர் மானிடத்தின் மீது மிகுந்த அன்பு கொண்டவர், பாவ வாழ்க்கையில் புரண்டுகொண்டிருந்த மக்களை மீட்க தெய்வ நிலையிலிருந்து மனித நிலைக்கு வந்து நம்மையெல்லாம் கடவுளின் பிள்ளைகளாக மாற்றிய அரசர். உண்மையை எடுத்துரைப்பதே எனது பணி, உண்மையை எடுத்துரைக்கவே உலகிற்கு வந்தேன் எனக்கூறும் இயேசு இறுதிவரை அப்படியே வாழ்ந்தார். சுயநல நாட்டம் கொண்ட இவ்வுலக அரசர்களை நாள்தோறும் சந்திக்கும் நமக்கு இவர் ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றார் உண்மையை சார்ந்த எவரும் என் குரலுக்கு செவிகொடுக்கின்றார் என்ற அவரது வார்த்தையை ஏற்று அதன்படி வாழவும் இயேசுவையும் அவரது அரசை வழிநடத்தும் திருஅவையினரையும் ஏற்று மதித்து கீழ்ப்படிந்து வாழ இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் : தானி 7:13-14**
மானிடமகனின் ஆட்சியுரிமை என்றும் உள்ளதாகும்.

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவர் ஆட்சி செய்கின்றார் மாட்சியை ஆடையாக அணிந்துள்ளார்.

**இரண்டாம் வாசகம் : தி.வெ 1:5-8**
மண்ணுலக அரசர்களுக்குத் தலைவர் நம்மைக் குருக்களாக ஏற்படுத்தினார்.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா ஆண்டவர் பெயரால் வருகிறவர் போற்றப்பெறுக. வரவிருக்கும் நம் தந்தை தாவீதின் அரசு போற்றப்பெறுக அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : யோவா 18:33-37**

**விசுவாசிகளின் மன்றாட்டு**
ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

கிறிஸ்து இயேசுவின் உண்மையின் அரசை இவ்வுலகில் நிலைநாட்ட அயராது உழைத்துவரும் திருஅவையையும், அதன் தலைவரான திருத்தந்தை ஆயர்கள், அருட்பணியாளர், துறவியர், பொதுநிலையினர் அனைவரும் எப்பொழுதும் உண்மையும் நீதியும் அன்பும் கொண்டவர்களாகத் திகழ்ந்திட வரமருள வேண்டுமென்று...

நாடுகளின் தலைவர்களும் சமூகங்களின் அதிகாரிகளும் இயேசு அரசரைப் போல் மானுடத்தின் மீது மிகுந்த அன்பு கொண்டவர்களாகத் திகழ்ந்து மக்களின் உண்மையான தேவைகளை அறிந்து சுயநலன்கள் இல்லாமல் பொதுநலத்துடன் சேவையாற்ற முன்வர வரமருள வேண்டுமென்று...

கிறிஸ்து ஆண்டவரை அரசராக ஏற்றுக்கொண்டுள்ள நாம் உண்மையின் சாட்சிகளாக மற்றவர்களுடைய உண்மையான உணர்வுகளைப் புரிந்துகொண்டு, எதுவித எதிர்பார்ப்பும் இல்லாமல் உதவி செய்யவும், அன்புசெய்யவும் கடவுளுக்கும் மக்களுக்கும் உண்மையுள்ளவர்களாகத் திகழவும் அருள்புரிய வேண்டுமென்று...



# அன்னையிடம் பக்தி! மனதிலே நிம்மதி!



நாம் பல நேரங்களிலே பசாசின் கட்டுக்களால் கட்டப்படுகின்றோம். இந்தக் கட்டுகளை அவிழ்க்கும் தாயாக இருக்கின்ற முடிச்சுக்களை அவிழ்க்கும் அன்னை மரியாவின் பக்தி முயற்சியை தன்னுடைய வாழ்விலே பின்பற்றுகின்ற திருத்தந்தையாக இருக்கின்றார் நம்முடைய திருத்தந்தை பிரான்சிஸ்

1980ஆம் ஆண்டு இவர் ஜெர்மனி நாட்டிலே படித்துக்கொண்டிருந்த நேரத்தில் இந்தப் பக்தி முயற்சியைப் பின்பற்றத் தொடங்கினார். அங்கிருந்த பேராலயத்தில் முடிச்சுக்களை அவிழ்க்கும் அன்னை மரியாவின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. அதிலே அன்னை மரியா விண்ணுலகிலே வானதூதர்கள் சுற்றி நிற்க, அரை வடிவ நிலவிலே நின்று கொண்டு தன்னுடைய பாதத்தினால் பாம்பினை மிதித்துக் கொண்டு, தன்னுடைய கையிலே இருக்கின்ற சிக்கல் நிறைந்த கயிற்றினை அவிழ்ந்துக் கொண்டிருக்கும் காட்சியினைக் காண்கிறார். அன்று முதல் நம்முடைய திருத்தந்தை இந்தப் பக்தி முயற்சியைப் பின்பற்றுகின்றார்.

பல வகையான பிரச்சினைகள், குழப்பங்கள், கவலைகள், பாரங்கள் நம்மை சூழ்ந்து கொள்கின்றன. இதிலிருந்து நம்மைப் பாதுகாத்திட, திடம் தந்திட நமக்குத் தாயாக இருந்து நம்மை இயேசுவிடம் அழைத்துச் சென்றிட உதவியாக இருக்கின்றவர்தான் அன்னை மரியா!

இதோ, இந்த அன்னை நம்முடைய துன்ப முடிச்சுக்களை அவிழ்க்கும் அன்னையாக இருக்கின்றார். இந்த அன்னையிடம் நம்முடைய குடும்பப் பிரச்சினைகள் அனைத்தையும் ஒப்புக்கொடுப்போம்.

நாமும் நம்முடைய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பக்தி முயற்சியான "முடிச்சுக்களை அவிழ்க்கும் அன்னை மரியாவின்" பக்தி முயற்சியை நம்முடைய வாழ்விலே பின்பற்றுவோம். அன்னையின் அரவணைப்பையும், பரிந்துரையையும் பெற்றுக்கொள்வோம்.



# “இயேசு கிறிஸ்துவே உண்மையான அரசர். அனைத்து அரசர்களுக்கும் முன்மாதிரியான அரசர்”

# இவரல்லவோ சிறந்த அ

கிறிஸ்து அரசர் பெ

முதல் நூற்றாண்டில் உரோமைப் படைவீரர் ஒருவர் கிறிஸ்தவர் என்ற குற்றத்திற்காக உரோமை நீதிமன்றத்தில் விசாரணைக்காக நிறுத்தப்பட்டார். நீதிபதி, **“நீ ஒரு கிறிஸ்தவனா?”** என்று கேட்டார். படைவீரர், **“ஆம்”** என்றார். **“அப்படியானால் நீ சீசருக்கு எதிரியா?”** என்று நீதிபதி கேட்க, படைவீரர் **“இல்லை”** என்றார். நீதிபதி **“நீ சீசருக்கு எதிரி இல்லை என்றால், சீசருக்குத் தூபமும், ஆராதனையும் காட்டு”** என்றார். படைவீரர் **“சீசருக்குத் தூப ஆராதனை காட்ட முடியாது. கடவுளுக்கு மட்டுமே ஆராதனையும், மகிமையும்! இயேசுவே என் கடவுள்! அவரையே நான் அன்பு செய்கிறேன், வழிபடுகிறேன்”** என்று உறுதியுடன் பயமின்றி கூறினான். நீதிபதி **“நான் சொல்வதைச் செய்யாவிட்டால் நீ தலை வெட்டுண்டு கொல்லப்படுவாய். அது உனக்குத் தெரியுமா?”** என்று கூற, படைவீரர் **“நீதிபதி அவர்களே, உங்களால் என் தலையை உடலிலிருந்து மட்டுமே நீக்கமுடியும். ஆனால் என் இதயத்திலிருந்து கடவுளும், அரசருமான இயேசுவை உங்களால் பிரிக்க முடியாது”** என்று பதிலளித்தான். அதன்பின் அந்தக் கிறிஸ்தவப் படைவீரர் தலைவெட்டப்பட்டு கொல்லப்பட்டார்.

இரண்டாம் ஆண்டின் பொதுக்காலம் 34வது வாரத்தை திருச்சபை கிறிஸ்து அரசர் பெருவிழாவாகக் கொண்டாடி திருவருகைக் காலத்தை வரவேற்க அழைக்கிறது. **“வாயில்களே, உங்கள் நிலைகளை உயர்த்துங்கள், தொன்மைமிகு கதவுகளே, உயர்ந்து நில்லுங்கள், மாட்சிமிகு மன்னர் உள்ளே நுழையட்டும்”** (தி.பா 24:7) என்று பாடி, புதிய திருவழிபாட்டு ஆண்டைத் தொடர கிறிஸ்து அரசரின் பிறப்புக்குத் தயாராகின்றோம்.

கிறிஸ்து அரசர் திருநாள் நமக்குக் கூறும் பாடம் என்ன? கிறிஸ்து அரசர் என்றால், நாம் அவரது அரசின் மக்கள் இறையரசு என்பது என்ன? நாம் இறையரசுக்கு உரியவர்களாவது எப்படி? இன்றைய உலக அரசுகளிடமிருந்து இறையரசு எப்படி மாறுபட்டது? இயேசு உண்மையிலேயே அரசர் தாமோ? போன்ற கேள்விகளைக் கேட்டு, அந்த உண்மையான அரசர் போன்ற மனநிலையை வளர்த்துக்கொள்ளவும், அவரது பரிவு மிக்கச் செயல்களைச் செய்து இறையரசுப் பணியில் இயேசுவுக்குத் துணை நிற்கவும் கிறிஸ்து அரசர் பெருவிழா அழைக்கிறது.

## அரசர் என்பவர் யார்? கிறிஸ்து எப்படி ஓர் அரசர்?

அரசர் என்றால் அதிகாரம், ஆணவம், மகிமை, புகழ், அரண்மனை, ஆடம்பரம் இவைகள் தாம் நம் நினைவுக்கு வருகின்றன. மாட்டுத் தொழுவத்தில் பிறந்து, கல்வாரியில் சிலுவையில் உயிர்விட்ட இயேசுவிடம் ஓர் அரசருக்கான எந்த வாசனையும் இல்லை. உலக அரசர்கள் பற்றிய நமது எண்ணங்கள் வெறும் புகை. அவையல்ல ஓர் அரசருக்குரிய அடையாளங்கள் என்று மாற்றிக் காட்டிய மன்னர் இயேசு.

முதல் உலகப்போர் முடிவுற்ற தருணத்தில் 1925, மார்கழி 11ம் திகதி கிறிஸ்து அரசர் பெருவிழாவை திருத்தந்தை 11ம் பத்திநாதர் ஏற்படுத்தினார். மேற்கூறப்பட்ட தவறான அதிகாரச் சக்திகளுக்கு மத்தியில் அனைத்துலகிற்கும், எல்லாக் காலத்துக்கும், எப்போதும் அன்பும் அக்கறையுமுள்ள, சக்திமிக்க தலைவரும், நல்லாயனுமாக இயேசுவே உலக அரசர்கள், அரசுகளுக்கு சிறந்த மாதிரி என்பதை நிலை நாட்டுவதே இவ்விழாவின் நோக்கமாகும்.

## கிறிஸ்து அரசர் தோன்றிய பின்னணி

20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உலகத் தலைவர்கள், அரசர்களுக்கிடையே அதிகாரப்போட்டி எழுந்தது. விளைவு - போர்கள் உருவாகும் சூழல் ஏற்பட்டன. உலக நாடுகள் இரண்டாகப் பிளவுபட்டன. முதல் உலகப் போரால் மக்கள் கடும் துயருக்குள்ளாகினர். உயிர்ச்சேதம் பெரிது. முதல் உலகப் போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பணியாற்ற திரு. அம்புரோஸ் ராட்டி திருத்தந்தையால் நியமிக்கப்பட்டு அனுப்பப்பட்டார். இவர் பின்நாளகளில் ஆயராகி, கர்தினாலாகி, திருத்தந்தை 11ம் பத்திநாதர் ஆகிறார். போரின் கொடுமைகளை, மக்களின் துயரங்களை நேரில் கண்ட இந்தத் திருத்தந்தை, உலகத் தலைவர்களின் அதிகாரப் போதைப் போட்டிக்கு முடிவு கட்ட விரும்பியும், உண்மையான அரசருக்கான சிறந்த மாதிரி இயேசுகிறிஸ்து ஒருவரே என்பதையும் விளக்கி அறிவிக்க விரும்பி 1925இல் “குவாஸ் பிரிமாஸ்” என்னும் சுற்றுமடலை உலக மக்களுக்கு எழுதினார்.

இந்தச் சுற்றுமடல் “இயேசு கிறிஸ்துவே உண்மையான அரசர். அனைத்து அரசர்களுக்கும் முன்மாதிரியான அரசர்” என்று அறிவித்ததுடன், அதே ஆண்டில் கிறிஸ்து அரசர் பெருவிழாவையும் திருத்தந்தை தொடங்கக் காரணமானது. ஐப்பசி கடைசி ஞாயிறு கிறிஸ்து அரசர் திருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வந்தது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பின் 1970இல் வழிபாட்டு ஆண்டின் நிறைவாக கார்த்திகை 20லிருந்து 26க்குள் இவ்விழா கொண்டாடப்படும் என்று திருச்சபையால் முடிவு செய்யப்பட்டது. இன்றுவரை ஆண்டின் பொதுக்காலம் இறுதி வார ஞாயிறு கிறிஸ்து அரசர் ஞாயிறு என்றே கொண்டாடப்பட்டு வருகிறது.

## இயேசு உண்மையான அரசர்!

கிறிஸ்து உலகின் அரசர் என்பது கிறிஸ்துவுக்கு நாம் அளிக்கும் மகிமை! கிறிஸ்து அரசர் என்பது கடவுளையும், அவரது செயல்களையும் விளக்கும் பட்டயம். இயேசு அரசர் என்ற முறையில் தற்புகழ்ச்சி பற்றி கவலைப்படவோ, தேடவோ இல்லை. மாறாக, விளிம்பு நிலை மக்களையும், இழந்து போனவர்களையும் பற்றியே கவலைப்பட்டார். கடவுள் மகிமைப்படுத்துவது என்பது அழகான செபங்களோ, நீண்ட செபங்களோ அல்ல, மாறாக, அன்றைய நற்செய்தியில் இயேசு குறிப்பிடும் “மிகச் சிறியோராகிய என் சகோதரர், சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்” (மத் 25:40) என்பதே “வாய்ச் சொல்லால் இம்மக்கள் என்னை அணுகுகின்றனர். உதட்டினால் என்னைப் போற்றுகின்றனர். அவர்கள் உள்ளமோ என்னை விட்டுத் தொலைவில் இருக்கிறது. அவர்களது இறையச்சம் மனனம் செய்த வெறும் மனிதக் கட்டளைகளைச் சார்ந்ததே” (எசா 29:13) என்பதும், “என்னை நோக்கி, ஆண்டவரே ஆண்டவரே எனச் சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை” (மத் 7:21) என்பதும் ஒன்றுபட்டுச் செல்கின்றன.

கிறிஸ்து அரசர் என்பது திருச்சபையின் கற்பனையோ, கண்டுபிடிப்போ அல்ல, விவிலியப்பூர்வமான ஒன்று. குழந்தை இயேசுவின் பிறப்புச் செய்தி கேட்டு காண வந்த ஞானிகள், ஏரோது அரசனிடம் “யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே? அவரது விண்மீன் எழக் கண்டோம். அவரை வணங்க வந்திருக்கிறோம்” (மத் 2:2) என்றனர். இயேசு கல்வாரியில் இரண்டு கள்வர்களுடன் சிலுவையில் அறையப்பட்டு தொங்குகையில், நல்ல கள்வன் “இயேசுவே, நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவிற்கொள்ளும்” (லூக் 23:42) என்று வேண்டினான். மேலும் இயேசு அறையப்பட்ட சிலுவையில் பொருத்தப்பட்ட வாசகம் “நாசரேத்து இயேசு யூதர்களின் அரசன்” (யோவா 19:19) (INRI) என்பதும் இயேசு கிறிஸ்து ஓர் அரசர் என்பதை அறிவிக்கின்றன. கபிரியேல் தூதர் மங்கள வார்த்தையில் “அவருடைய தந்தையான தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தின்மீது என்றென்றும் ஆட்சி செலுத்துவார். அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது” (லூக் 1:32-33) என்றது மேலும் ஒரு சாட்சி.

ஆளுநர் பிலாத்து “நீ யூதரின் அரசனா?” என்று இயேசுவிடம் கேட்டபோது “நான் அரசன் இல்லை” என்றோ, “நான் அரசன்தான்” என்றோ பதிலளிக்கவில்லை. மாறாக, “எனது ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல” (யோவா 18:33,36) என்று கூறி “நான் ஓர் அரசன்தான். ஆனால் என் அரசு இவ்வுலக அரசு போன்று செயல்படுவதில்லை. அது இறையரசு என்ற பொருளில் பதிலளித்தார். இதன் மூலம் கிறிஸ்தவர்கள் இரட்டைக் குடியுரிமையுடைய மக்களாகிவிடுகிறோம்.

அதிகாரம், ஆயுதம், ஆட்சி பலத்துடன் ஆட்சி செய்த அரசர்கள் அழிந்துவிட்டனர். அன்பால் ஆட்சி புரிந்து, தீமையை மட்டும் அழித்து, தீயவர்களை மீட்ட இயேசு கிறிஸ்து மனித இதயங்களை ஆளும் உண்மையான அரசர் என்றால் அது மிகையல்ல! பதவி, பணம், புகழ் அல்ல, பரிவும், இரக்கமுமே இயேசுவுக்கு முக்கியம். அதனால்தான் பொன் முடியைவிட, முள் முடியையும், சிம்மாசனத்தைவிட சிலுவையையும் விரும்பினார்.

## கடவுளே உலகின் அரசர்!

இஸ்ரயேல் மக்கள் நீதிபதிகள் காலம்வரை கடவுளையே உலகின் அரசராக நம்பி வந்தனர். இறைவாக்கினர் சாமுவேல் காலத்தில் தங்களுக்கென்று தனி அரசர் வேண்டும் என்று முணுமுணுத்தனர். கடவுளும் இறைவாக்கினர் சாமுவேல் வழியாக சவுலை இஸ்ரயேல் மக்களின் முதல் அரசனாக திருப்பொழிவுச் செய்தார். சவுல் தொடங்கி அனைத்து அரசர்களும், இஸ்ராயேல் மக்களும் கடவுளின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழாததால் வீழ்ச்சியுற்றார்கள். இப்போது மக்கள் மீண்டும் கடவுளின் அரசு வரவேண்டும் என்று எதிர்பார்த்தனர். இம்மக்களின் எதிர்பார்ப்பையும், இறைவாக்கினர் எசேக்கியேல் வழியாகக் கூறிய “நானே என் மந்தையைத் தேடிச்சென்று பேணிக் காப்பேன்...” (எசே 34:11) என்ற கடவுளின் வாக்குறுதியும் இயேசு கிறிஸ்து வழியாக நிறைவேறிற்று என்கிறார் புனித பவுலடியார். இரண்டாம் வாசகத்தில் “கிறிஸ்து ஆட்சியாளர், அதிகாரம் செலுத்துவோர், வலிமையுடையோர் ஆகிய அனைவரையும் அழித்துவிட்டு தந்தையாகிய கடவுளிடம் ஆட்சியை ஒப்படைப்பார்” (1கொரி 15:24) என்கிறார்.

கடவுள் தமது மகன் இயேசு வழியாக இறையரசை நிறுவ விரும்பினார். இயேசு அரசரைப் போல வாழவும் இல்லை, அது அவரது நோக்கமும் இல்லை. மக்கள் அவரை அரசராக்க முயன்றபோதும் அங்கிருந்து விலகிச் சென்றுவிட்டார் (யோவா 6:15). ஏனெனில் இயேசு இறையரசு பற்றிப் போதித்து, இறையரசின் விழுமியங்களை மக்களுக்குக் கற்பித்தார். இறையாட்சி என்பது நாம் உண்பதையும், குடிப்பதையும் அடிப்படையாகக் கொண்டதல்ல, மாறாக, தூய ஆவி அருளும் நீதி, அமைதி, மகிழ்ச்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது (உரோ 14:17) என்கிறார் புனித பவுலடியார். இறையாட்சியின் மதிப்பீடுகளின்படி வாழும்போது மட்டுமே நம்மால் கடவுளுக்கும், இயேசுவுக்கும் உகந்தவர்களாக வாழ முடியும்.

ரசர்!

ருவிழா 25.11.2018

**“அன்பால் ஆட்சி புரிந்து, தீமையை மட்டும் அழித்து, தீயவர்களை மீட்ட இயேசு கிறிஸ்து மனித இதயங்களை ஆளும் உண்மையான அரசர் என்றால் அது மிகையாகாது”**

## இறையரசு எங்குள்ளது?

ஒரு கஸ்தூரி மான் தன்னிடமிருந்தே நறுமணம் வருகிறது என்பதை உணராமல், அந்த நறுமணம் எங்கிருந்து வருகிறது என்று அறிய காடு முழுவதும் தேடியதாம். அதுபோல, கிறிஸ்துவர்களாகிய நாம் கடவுளையும், கடவுளின் அரசையும் நம் மத்தியில் தேடாமல் வரப்போகும் ஒன்றாகத் தேடிக்கொண்டிருக்கின்றோம். “இறையாட்சி மனிதர் நடுவே உள்ளது” என்று லூக்கா நற்செய்தியில் வாசிக்கின்றோம். நம்மிடையே நம் செயல்கள் வழியாகவே இறையாட்சி நிறுவப்படுகிறது என்பதை உணர்ந்து, ஆண்டவரையும் அடுத்தவரையும், நம்மை வெறுப்பவர்களையும் அன்பு செய்யும் மனநிலையை வளர்த்துக் கொள்வதன் மூலமே இறையாட்சிக்கு நாம் உரியவர்களாகின்றோம். இறைவார்த்தையின்படி வாழ்பவர்களே இறையாட்சிக்கு உரியவர் என்பதை இயேசு “விண்ணுலகிலுள்ள என் தந்தையின் திருவுளத்தின்படி செயல்படுபவரே விண்ணரசுக்குள் செல்வர்” (மத் 7:21) என்று கூறி விளக்கினார்.

## குடிமக்களும், குடிமக்களின் கடமைகளும்

ஓர் அரசும், அதன் குடிமக்களும் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். உண்மையுள்ள அரசே நிலையான அரசாய் அமைந்து மக்களுக்கு நற்பணியாற்ற முடியும். இன்றைய ஆட்சியாளர்களும், அரசியல்வாதிகளும் “உண்மையா? அது என்ன?” என்றும், “யார்தான் ஊழல் செய்யவில்லை?” என்றும் பேசி உண்மைக்குப் புறம்பானவர்களாய் வாழ்கின்றனர். இதனால் உண்மையை, நன்மையைச் சுட்டிக்காட்ட அவர்களால் முடியவில்லை. உண்மையுள்ளவர்கள் இல்லாத குறையே இன்றைய சமூக அநீதிகளுக்குக் காரணம். அரசியல் - ஆன்மீக - சமூகத் தளங்களில் உண்மை உரைக்கப்படவும், வாழப்படவும் கிறிஸ்து அரசர் விழா நம்மை அழைக்கிறது.

இறையாட்சியின் குடிமக்களுக்கான கடமைகள் சில உள்ளன. அவைகளாவன

1. பசிக்கிறவர்களுக்கு உணவளித்தல்
2. தாகமுள்ளவர்களுக்குத் தண்ணீர் வழங்குதல்
3. வெளியூர்வாசிகளை வரவேற்று ஏற்றல்
4. ஆடையற்றவர்களை உடுத்துதல்
5. நோயாளிகளைச் சந்தித்தல்.
6. சிறைவாசிகளைச் சந்தித்தல்


இவை அனைத்தையும் இயேசு தமது பணி வாழ்வில் நிறைவேற்றினார். பசியோடிருந்த மக்கள் மீது பரிவுகொண்டு அப்பங்களைப் பலுகி உணவளித்தார். தாகமுள்ளவர்களுக்கு தாகம் தராத தண்ணீரை வழங்கினார். சமாரியர்களையும், கானானியர்களையும் வரவேற்று ஏற்றுக்கொண்டார். பாவிகள், விபச்சாரிகள், ஆயக்காரர்கள் புறக்கணிக்கப்பட்டு வாழ்ந்தனர். அவர்களை மனிதநேயத்துடன் மன்னித்து விடுவித்தார். இப்படி அன்பும், இரக்கமும், பரிவும் நிறைந்த அரசராகத் தம்மை வெளிப்படுத்திய கிறிஸ்து அரசரைப் போன்று அவரது குடிமக்களாகிய நாமும் அன்புடனும், இரக்கத்துடனும் செயல்படக் கடமைப்பட்டுள்ளோம்.

கடந்த ஆண்டுகளாய் உலக மக்களின் மனங்களில் அரசாட்சி செலுத்தி வரும் மனிதநேயமிக்க இயேசு நம்மை அன்பால் ஆண்டு, அருளால் நிரப்பி, இருளில் வழிகாட்டி நம்முடன் உடன் நடக்கிறார். நம்முடன் பேசும், உரையாடும், நம்மால் தொட்டு உணரக்கூடிய தாழ்ச்சிமிக்க கிறிஸ்து அரசர் ஓர் இறை-மனித நபர் என்பதை உணர்ந்து, அவரது ஆளுமைக்கு நம்மை உட்படுத்துவோம். கிறிஸ்து அரசர் நம்மை அரசாள அனுமதிப்போம். அவரது அன்புக் குடிமக்களாக வாழ்வோம்.

இறையரசுக்கு கோட்டையோ, அரண்மனையோ, அரணோ இல்லை. இறையரசு உலக வரைபடத்திலேயே இடம்பெறுவதில்லை. மனித இதயங்களில் குடிகொண்டுள்ள இறையரசை வளர்ப்போம். இறையரசைக் குறிக்கும் சின்னம் சிலுவையே.

இயேசுவே, நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவிற்கொள்ளும் (லூக் 23:42) என்று செபிப்போம். இறையரசுக்குரியவர்களாக மாற வானகக் குடிமக்களுக்குரிய கடமைகளை நிறைவேற்றுவோம்.

நன்றி: நம்வாழ்வு






# 4. தனிச் செபப் பழக்கம்

## 4. மகிமையின் மறைநிகழ்வுகள்

### 1. இயேசு உயிர்த்தெழுகிறார்

வானகத் தந்தையே அப்பா!

உம் மகன் இறந்தோரிடம் இருந்து மகிமையடைந்த உடலோடு உயிர்தெழுந்தார். அன்னை மரியாவின் பரிந்துரையால் அன்புப் பணிகளுக்கு உயிர்த்தெழ எனக்கு உதவிசெய்யும்.

**பரலோகத்தில் இருக்கின்ற....**

கல்லறையைக் காவல் செய்கிறார்கள். **அருள் நிறை**
மகதல மரியா கல்லறைக்கு வருகிறார். **அருள் நிறை**
கல்லறை வெறுமையாக இருக்கிறது. **அருள் நிறை**
மகதல மரியா கதிகலங்கி நிற்கிறார். **அருள் நிறை**
வானதூதர் மகதல மரியாவுக்குத் தோன்றுகிறார். **அருள் நிறை**
இயேசு உயிர்த்துவிட்டார் என்கிறார். **அருள் நிறை**
இயேசு தன்னை மகதல மரியாவுக்குக் காண்பிக்கிறார். **அருள் நிறை**
தன்னைத் தன் தயாருக்குக் காண்பிக்கிறார். **அருள் நிறை**
தன்னைத் தோமாவுக்குக் காண்பிக்கிறார். **அருள் நிறை**
தன்னைச் சீடருக்குக் காண்பிக்கிறார். **அருள் நிறை**

ஓ என் இயேசுவே! எங்கள் பாவங்களை மன்னியும். நாங்கள் நரக நெருப்புக்குள் செல்லாதவாறு எங்களைக் காப்பாற்றும். எல்லா மக்களையும் விண்ணகப் பாதையிலே வழிநடத்தும். உம் இரக்கம் அதிகம் தேவைப்படுவோருக்கு சிறப்பாக உதவி செய்யும்.

### 2. இயேசு விண்ணகம் செல்கிறார்

வானகத் தந்தையே அப்பா!

உயர்ந்த மலை ஒன்றின் உச்சியில் இருந்து உம் மகன் விண்ணகம் சென்றார். அன்னை மரியாவின் பரிந்துரையால் விண்ணக வாழ்வில் விருப்பம்கொள்ள எனக்கு உதவிசெய்யும்.

**பரலோகத்தில் இருக்கின்ற....**

இயேசு தாழிட்ட வீட்டுக்குள்ளே வருகிறார். **அருள் நிறை**
சீடருக்குச் சமாதானம் சொல்கிறார். **அருள் நிறை**
மன்னிக்கும் அதிகாரம் வழங்குகிறார். **அருள் நிறை**
விண்ணகம் போக மலைமேலே ஏறுகிறார். **அருள் நிறை**
அவர் அங்கே சீடரோடு பேசுகிறார். **அருள் நிறை**
போதிக்க அதிகாரம் கொடுக்கிறார். **அருள் நிறை**
உலகெங்கும் செல்லுமாறு பணிக்கிறார். **அருள் நிறை**
திருமுழுக்கு வழங்குமாறு பணிக்கிறார். **அருள் நிறை**
சீடருக்கு ஆசிர் வழங்குகிறார். **அருள் நிறை**
விடைபெற்று விண்ணேறிச் செல்கிறார். **அருள் நிறை**

ஓ என் இயேசுவே! எங்கள் பாவங்களை மன்னியும். நாங்கள் நரக நெருப்புக்குள் செல்லாதவாறு எங்களைக் காப்பாற்றும். எல்லா மக்களையும் விண்ணகப் பாதையிலே வழிநடத்தும். உம் இரக்கம் அதிகம் தேவைப்படுவோருக்கு சிறப்பாக உதவி செய்யும்.

**தொடரும்**

**அருட்தந்தை அ. பிலிப் அடிகளார் (ivDei)**

# ஆபத்தில் உதவும் நல்ல நண்பர்



**ஆபத்தில் உதவும் நல்ல நண்பர்களாக - சமாரியர்களாக மாறுவோம்.**

ஒரு காட்டில் காகம், ஆமை, எலி ஆகியவை நண்பர்களாக வாழ்ந்து வந்தன. ஒரு முறை மூன்று நண்பர்களும் பேசிக்கொண்டிருக்கும்போது ஒரு மான் தூரத்திலிருந்து வேகமாக ஓடிவந்தது. திடுக்கிட்ட ஆமை அருகில் உள்ள குளத்தில் மூழ்கிவிட்டது. எலி தன் பொந்தில் நுழைந்துகொண்டது. காகமோ யாரேனும் வேடன் வந்துள்ளானா என வானில் வட்டமடித்துப் பறந்து பார்த்தது. வேடன் வந்ததற்கான அடையாளம் எதுவும் அருகில் இல்லாததால் காகம், எலியையும் ஆமையையும் அழைத்தது. அவை இரண்டும் வெளியே வந்தன.

களைத்துப் போயிருந்த மான் பயத்துடன் குளத்தில் தண்ணீரை குடிக்க நினைத்தது. ஆமை மானிடம் “பயப்படாதே! இங்கு உனக்கு ஆபத்து இல்லை” எனக் கூறிய பிறகு “எங்கிருந்து வருகிறாய்?” என விசாரித்தது. “இந்தக் காட்டில்தான் எனக்கான இரையைத் தேடிக் கொள்கிறேன். ஒவ்வொரு இடத்திலிருந்தும் வேடனின் அம்புகள் என்னை மற்றொரு இடத்திற்கு துரத்திக்கொண்டே இருக்கின்றன. இன்று தூரத்தில் ஒரு உருவம் தெரிந்தது. அது வேடனோ என பயந்து நான் ஓடி வந்தேன்” எனக் கூறியது மான். அதற்கு ஆமை, “பயப்படாதே! இங்கு இதுவரை நாங்கள் வேடனைப் பார்த்ததே இல்லை. இது இயற்கை வளமும் உனக்கான இரையும் நிறைந்த பகுதி. எனவே எங்களுடனேயே நீ தங்க வேண்டும் என்று ஆசைப்படுகிறோம்” என்றது. மானும் அவைகளுடன் தங்க சம்மதித்தது.

மூவருடனும் மான் நண்பனாக ஆனது. நால்வரும் ஒன்று கூடிப் பேச அங்கு கூடாரம் ஒன்று இருந்தது. ஒருநாள் அந்தக் கூடாரத்தில் காகம், எலி மற்றும் ஆமை ஒன்றாய் பேசிக் கொண்டிருந்தன. மானை மட்டும் காணவில்லை. சிறிது நேரம் இவை எதிர்பார்த்த பிறகும் வரவில்லை. எனவே மிகவும் தாமதமானதால் மானிற்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டிருக்குமோ என அவை பயந்தன. காகத்திடம் எலியும், ஆமையும் “நீ சென்று என்ன நடந்தது என்று பார்த்து வா” எனக் கூறின. காகம் வானத்தில் வட்டமடித்துப் பார்த்தபோது மான் ஒரு வலையில் மாட்டிக் கொண்டிருப்பது தெரிய வந்தது.

உடனே அதை காகம் மற்ற இருவரிடமும் கூறியது. அவை மிகவும் கவலைப்பட்டன. ஆமையும் காகமும் எலியிடம் “இந்த ஆபத்திலிருந்து காப்பாற்ற உன்னால்தான் முடியும். எனவே உன் நண்பனுக்காக உதவி செய்” எனக் கூறின. எலி வேகமாக, மான் வலையில் மாட்டிக்கொண்டிருந்த இடத்திற்குச் சென்றது. மானிடம் “நீ தான் புத்திசாலியாயிற்றே! பிறகு எப்படி இந்த வலையில் வீழ்ந்தாய்?” எனக் கேட்டது. அதற்கு மான் “ஏதோ கவனக்குறைவால் நேர்ந்துவிட்டது” என்றது. இரண்டும் பேசிக்கொண்டிருக்கும்போதே ஆமையும் அங்கு வந்தது. இதனைப் பார்த்த மான், “நீ ஏன் இங்கு வந்தாய்? உனக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது. எங்கள் பக்கத்தில் வேடன் வந்துவிட்டால் எலி என் வலையை துண்டித்துவிடும். நான் ஓடிவிடுவேன். எலி தன்னைக் காப்பாற்றிக்கொள்ள ஏராளமான பொந்துகள் உள்ளன. காகமும் வானில் பறந்துவிடும். ஆனால், உன்னாலோ வேகமாகக் கூட செல்ல முடியாது. உன்னைப் பற்றித்தான் எனக்கு பயமாக உள்ளது” என்றது. இதைக் கேட்ட ஆமை, “நண்பர்களைப் பிரிந்து வாழ்கிற வாழ்வு வாழ்வே இல்லை. ஒரு நண்பனை விட்டு மற்றொரு நண்பன் பிரிந்துவிட்டால் உள்ளத்திலிருந்து நிம்மதி பறந்துவிடும். சந்தோஷம் என்பதே இருக்காது” என்று கூறி முடிப்பதற்குள் வேடன் வந்துவிட்டான்.

வேடன் வந்த மறுகணம் வலையை எலி துண்டித்தது. மான் தப்பியோடியது. காகம் பறந்துவிட்டது. எலி ஒரு பொந்தில் நுழைந்து விட்டது. ஆமையைத் தவிர வேறொன்றும் அங்கு இல்லை. வேடன் வலையின் பக்கத்தில் வந்து அது துண்டிக்கப்பட்டு இருப்பதை உணர்ந்தான். சுற்றும் முற்றும் பார்த்தான். ஆமையைத் தவிர வேறொன்றும் அங்கு கண்ணுக்கு தெரியவில்லை. எனவே அதனைக் கட்டி எடுத்துச் சென்றான். வேடனின் கைகளில் ஆமை பிடிபட்டதைப் பார்த்த எலி, மான் மற்றும் காகம் மிகவும் கவலைப்பட்டன. எலி, “ஒரு ஆபத்திலிருந்து தப்பிப்பதற்குள் அதனை விட பெரிய ஆபத்தில் நாம் மாட்டிக்கொள்கிறோமே. இதனைத்தான், “ஒருவன் தடுமாறுகிற வரை முன்னேறிச்சென்று கொண்டேயிருப்பான். ஒருமுறை தடுமாறி விழுந்துவிட்டால் அவன் கட்டாந்தரையில் நடந்து சென்றாலும் தடுக்கி விழுந்துகொண்டே இருப்பான்” என்று கூறுவார்கள் போலும். பிரதிபலன் எதிர்பார்க்காமல் தூய நட்பு கொண்ட ஆமையை எப்படிக் காப்பாற்றுவது?” என்று புலம்பியது.

மானும், காகமும் எலியிடம், “இப்படிப் புலம்புவதால் ஆமையை காப்பாற்றி விட முடியாது. ஆபத்தில் உதவுபவன்தான் அருமை நண்பன் என்பார்கள். அதுபோல் ஆபத்தில் சிக்கியிருக்கும் ஆமையை எப்படியாவது காப்பாற்ற வேண்டும். அதற்கு ஒரு வழி சொல்” என்றது. சிறிது நேரம் யோசித்த எலி, “மானே! நீ ஒரு தந்திரத்தை கையாள வேண்டும். நீ சென்று காயமுற்றதைப் போல் வேடன் கண்ணுக்கு தெரியும் தூரத்தில் படுத்துக்கொள். காகம் உன்னை உண்ண முயல்வது போல் உன் மீதுஅமர்ந்து கொள்ளும். நான் வேடனை கண்காணித்துக் கொள்கிறேன். அவன் ஆமையைகீழே வைத்துவிட்டு உன்னை அடைய அம்புடன் தயாராவான். உன் அருகில் அவன் வந்தால் நீ எழுந்து கொஞ்ச தூரம் ஓடு. பிறகு மீண்டும் இயலாததைப் போன்று படுத்துக்கொள். இவ்வாறே அவனை எங்களை விட்டும் தூரமாக அழைத்துச் சென்றுவிடு. அவன் திரும்பி வருவதற்குள் நான் ஆமையைக் காப்பாற்றி விடுகிறேன்” எனக் கூறியது.

காகமும், மானும் எலி கூறியதைப் போன்றே செய்தன. அவை இரண்டின் பின்னாலேயே வேடனும் சென்றான். ஆமையை விட்டு விலகி தூரத்திற்கு அவனை மான் இழுத்துச் சென்றது. எலி, ஆமையைக் காப்பாற்றியது. களைப்படைந்த வேடன் நிராசையாகி திரும்பினான். ஆமை இருந்த வலை துண்டிக்கப்பட்டதை பார்த்தான். நடந்த நிகழ்வுகளை எல்லாம் வைத்து “இது ஏதோ மாய மந்திரங்கள் நிறைந்த காடு” என எண்ணினான். “இனி இங்கு வரமாட்டேன்” என தனக்குத் தானே கூறிக்கொண்டு ஓடிவிட்டான்.

**நமக்குத் துன்பம் வந்தாலும் பரவாயில்லை, தேவையில், கஷ்டத்தில் இருக்கும் ஒருவருக்கு உதவவேண்டும் என்பதை கதையில் வரும் நான்கு நண்பர்களும், குறிப்பாக ஆமை நமக்கு எடுத்துக்கூறுகிறது.**

நம்முடைய அன்றாட வாழ்க்கையில் தேவையில் இருக்கின்ற, கஷ்டத்தில் இருக்கின்ற எத்தனையோ மனிதர்களைப் பார்க்கின்றோம். ஆனால் நாம் அவர்களைக் கண்டும் காணாமல்தான் போகின்றோம். இத்தகைய ஒரு நிலையை நம்முடைய வாழ்விலிருந்து மாற்றிக்கொள்வோம். ஆபத்தில் இருக்கின்றவர்களுக்கு உதவிடுவோம், தேவையில் இருப்போருக்கு உறுதுணையாக இருப்போம். நல்ல சமாரியர்களாக விளங்கிடுவோம். அதன்வழியாக இறையருள் நிறைவாய் பெறுவோம்..



# க. பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான முன்னோடி வினாத்தாள் – 2018




**மிகவும் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1) கத்தோலிக்க திருச்சபையின் இலட்சனங்கள் எத்தனை?
அ) 6 ஆ) 4 இ) 3 ஈ) 7

2) பழைய ஏற்பாட்டின் நூல்கள் எத்தனை?
அ) 45 ஆ) 27 இ) 46 ஈ) 35

3) திருவிவிலியத்தின் பிரதான, துணை ஆசிரியர்கள் யார்?
அ) இறைவாக்கினர் / இறைவன்
ஆ) இறைவன் மனிதர்
இ) மனிதர் திருத்தூதர்
ஈ) மனிதன் வானதூதர்

4) புனித லூக்கா நற்செய்தியின் வேறு பெயர்களில் ஒன்று.
அ) இரக்கத்தின் நற்செய்தி
ஆ) ஞானத்தின் நற்செய்தி
இ) ஊதாரி மகனின் நற்செய்தி
ஈ) நன்மையின் நற்செய்தி

5) இயேசுவைக் காட்டி கொடுத்தவர் யார்?
அ) பேதுரு ஆ) பவுல்
இ) யூதாஸ் ஈ) யாக்கோபு

6) பாஸ்கா என்றால் என்ன?
அ) இயேசுவின் இறப்பு
ஆ) பாடுகள், மரணம், உயிர்ப்பு
இ) இயேசுவை சிலுவையில் அறைதல்
ஈ) இயேசுவின் உயிர்ப்பு

7) இயேசுவின் உயிர்ப்புக்கு முதல் சாட்சியாக விளங்கியவர் யார்?
அ) புனித பேதுரு ஆ) தோமா
இ) மரியாள் ஈ) மரிய மதலேனாள்

8) திருத்தொண்டர்கள் எத்தனை பேர்
அ) 12 ஆ) 21 இ) 72 ஈ) 112

9) இயேசு தூய ஆவியை அனுப்புவதாக எப்போது வாக்களித்தார்?
அ) சிலுவையில் மரிக்கும் முன்
ஆ) மலை பொழிவில்
இ) இயேசு விண்ணேற்றம் அடையும் முன்
ஈ) புனித பேதுருவின் வீட்டில்

10) லூக்கா நற்செய்தியின் இரண்டாம் பாகமாகக் கருதப்படும் நூல் எது?
அ) யோவான் ஆ) திருத்தூதர் பணி
இ) திருவெளிப்பாடு ஈ) கொரிந்தியர்

11) தனக்கு ஞானத்தை தரும்படி இறைவனிடம் மன்றாடிய அரசன்.
அ) தாவீது ஆ) சவுல்
இ) சாலமோன் ஈ) ஏரோது

12) மோயீசனுக்கு இறைவன் தன்னை எப்படி வெளிப்படுத்தினார்.
அ) எரியும் முட்செடியின் மூலம்
ஆ) பத்துக்கட்டளைகளை கொடுத்தல் மூலம்
இ) செங்கடலைக் கடத்தல் மூலம்
ஈ) யோர்தான் ஆற்றங்கரையில்

13) இயேசு செபக்கூடத்தில் எந்த இறைவாக்கினரின் ஏட்டுச்சுருளை எடுத்து வாசித்தார்?
அ) எசேக்கியேல் ஆ) அபக்கூக்
இ) எசாயா ஈ) எரேமியா

14) யோவான் நற்செய்தியாளரின் சின்னமாக அமைந்தது?
அ) மனிதன் ஆ) மான்
இ) சிங்கம் ஈ) கழுகு

15) திருவிவிலியம் எழுதப்பட்ட காலப்பகுதி எது?
அ) கி.மு 950-கி.பி 100 இற்கிடையில்
ஆ) கி.மு 1000-கி.பி 100 இற்கிடையில்
இ) கி.மு 950-கி.பி 1000 இற்கிடையில்
ஈ) கி.மு 1000-கி.பி 100 இற்கிடையில்

16) இயேசுவின் இறை மனித சுபாவத்தை கூறும் நற்செய்தி எது?
அ) லூக்கா ஆ) மாற்கு
இ) மத்தேயு ஈ) யோவான்

17) "தெயோபில்" என்ற பெயரின் பொருள் என்ன?
அ) கடவுள் நம்மோடு ஆ) திறக்கப்படு
இ) ஆண்டவரின் ஊழியன் ஈ) அன்பானவர்

18) சவுல் யாருடைய மரணத்துக்கு உடந்தையாக இருந்தார்?
அ) யூதாசின் ஆ) ஸ்தேவான்
இ) பேதுரு ஈ) யோவான்

19) பிற இனத்தவரின் திருத்தூதர் என அழைக்கப்படுபவர் யார்?
அ) புனித லூக்காஸ் ஆ) புனித பார்த்தமேயு
இ) புனித பவுல் ஈ) திருமுழுக்கு யோவான்

20) புனித லூக்கா மட்டும் தனது நற்செய்தியில் குறிப்பிடும் நிகழ்வு எது?
அ) பேருவானவரின் மாமியாரை குணமாக்கிய நிகழ்வு
ஆ) கானாவூரில் தண்ணீரை இரசமாக்கியது
இ) 12 திருத்தூதர்களை தேர்ந்தெடுத்தது.
ஈ) இயேசுவின் உயிர்ப்பு

21) மரியாளுக்கு மங்கள வார்த்தை கூறிய வானதூதர்
அ) மிக்கேல் ஆ) கபிரியேல்
இ) ரபேல் ஈ) வானதூதர்

22) பேதுரு என்பதன் பொருள் என்ன?
அ) பாறை ஆ) பாலைவனம்
இ) மலை ஈ) வீடு

23) என் அன்பார்ந்த மகன் இவருக்கு செவி சாயுங்கள் என்ற குரலொலி எச்சந்தர்ப்பத்தில் வானிலிருந்து கேட்டது.
அ) இயேசு சிலுவையில் உயிர் விடும் போது.
ஆ) இயேசுவின் திருமுழுக்கின் போது
இ) இயேசு தோற்றம் மாறும்போது
ஈ) இயேசு பாலைவனத்தில் சோதிக்கப்படும் போது

24) கத்தோலிக்க திருமணத்தின் முக்கிய நோக்கம் என்ன?
அ) குடும்பத்தில் மகிழ்ச்சி
ஆ) அன்பு, பிள்ளைப்பேறு
இ) வேலை செய்து குடும்பத்தை கட்டியெழுப்புதல்.
ஈ) திருச்சபையின் கடமைகளை நிறைவேற்றுதல்.

25) ஒரு பங்கு தந்தையின் முக்கிய பணியாக அமைவது எது?
அ) வீடுகளை கட்டிக் கொடுத்தல்
ஆ) திருப்பலி நிறைவேற்றுதல்.
இ) திருமணம் முடித்து வைத்தல்.
ஈ) ஏழைகளுக்கு உதவி செய்தல்

26) நற்செய்தியை எடுத்துரைக்கும் பணிக்குரியவர்கள் யார்?
அ) திருத்தையர்களும் ஆயர்களும்
ஆ) அருட்சகோதரர்களும், அருட்சகோதரிகளும்.
இ) திருமுழுக்கு பெற்ற அனைவருக்கும் பொறுப்பாகும்.
ஈ) பங்கு தந்தையர்களின் பொறுப்பாகும்.

27) கிறிஸ்துவின் உன்னத குருத்துவ செபம் எந்த நற்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது?
அ) மத்தேயு ஆ) மாற்கு
இ) லூக்கா ஈ) யோவான்

28) திருப்புகழ்மாலை செபத்தை யார் செபிக்கலாம்?
அ) குருக்கள் மட்டும்
ஆ) துறவியர்கள் மட்டும்
இ) பொதுநிலையினர் மட்டும்
ஈ) இவையாவும் சரி

29) திருப்புகழ்மாலை பாரம்பரியம், எருசலேமில் இருந்ததாக தனது நாட்குறிப்பேட்டில் குறிப்பிட்டுள்ளவர் யார்?
அ) புனித அன்னை திரேசா
ஆ) புனித அந்தோனியார்
இ) பெண் துறவியான எஜேரியா என்பவர்
ஈ) திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர்

30) குளோரியா என்ற வாழ்த்துச் செபத்தை நாம் எந்த வழிபாட்டில் பாடுகின்றோம்.
அ) செபமாலையில் ஆ) திருப்பலியில்
இ) நவநாட்களில் ஈ) தியான வழிபாட்டில்

**2. ஒரு சொல்லில் விடை தருக.**

1) முதல் முதலில் எழுதப்பட்ட நூல் எது
2) திருவிவிலியத்தின் பிரிவுகள் என்ன?
3) புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலப்பகுதி என்ன?
4) திருவிவிலியத்தின் ஆசிரியர்.
5) பெரிய இறைவாக்கினர்கள் இருவரை குறிப்பிடுக.
6) லூக்கா நற்செய்தியின் இரண்டாம் பாகமாகக் கருதப்படும் நூல் எது?
7) புனித பவுலின் திருமுகங்கள் எத்தனை?
8) இறைவன் மோயீசனுக்கு காட்சி கொடுத்த மலை எது?
9) தூய ஆவியின் கொடைகள் எத்தனை?
10) இயேசுவை இறைமகன் என்று அறிவித்த திருத்தூதர் யார்?

**03.பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக?**

1) புனித பேதுரு இயேவை ............ மறுதலித்தார்.
2) நீ பாறை இந்த பாறையின் மீது என்......... கட்டுவேன்.
3) திருச்சபை ............... நிறுவப்பட்டது.
4) ................. இலங்கையின் அப்போஸ்தலர் என்று அழைக்கப்படுகிறார்.
5) 2015 தை 13 அன்று திருத்தந்தை அவர்களால் ........ இலங்கையில் புனிதப் பட்டம் வழங்கப்பட்டது.
6) நற்கருணையில் நாம் .............................. உட்கொள்கிறோம்.
7) யூதர்கள் வருடந்தோறும் .............. விழாவை வெகு விமரிசையாகக் கொண்டாடுவார்கள்.
8) பழைய ஏற்பாட்டு பலிகள் எல்லாவற்றிலும் பார்க்க சிறந்த பலி ...................... ஆகும்.
9) புனித அன்னை திரேசா முதல் முதலில் .............. பணியாற்றினார்.
10) புதிய ஏற்பாட்டில் அதிகமான நூல்களை எழுதிய எழுத்தாளர் ......................... ஆவார்.

**04.பின்வரும் வினாக்களுக்கு விரிவாக விடைகளை எழுதுக.**

1) விவிலியத்திலுள்ள மொத்த நூல்கள் எத்தனை, அவற்றின் பிரிவுகளைக் குறிப்பிடுக.
2) பத்து கட்டளையின் சுருக்கத்தை குறிப்பிட்டு விளக்குக.
3) இயேசுவின் தலைமுறையை கூறும் நற்செய்தியாளர்கள் யாவர்? அவற்றை எழுதுக?
4) புனித பவுலின் திருமுகங்கள் எத்தனை? அவற்றில் ஐந்தைக் குறிப்பிடுக.
5) இறுதி காலம் எவற்றை குறித்து நிற்கின்றது?
6) ஞானம் என்றால் என்ன? இறைவனிடம் ஞானத்தை வேண்டி ஒரு செபம் எழுதுக.
7) புனித பேதுருவின் இயேசு பற்றிய விசுவாச அறிக்கையை குறிப்பிடுக.
8) இயேசுவை சிலுவையில் அறைய யூதர்கள் அவர் மேல் சுமத்திய குற்றச்சாட்டுகள் என்ன?
9) இயேசு உயிர்விடும் போது கூறிய 7 வார்த்தைகள் என்ன?
10) பெந்தகோஸ்து நிகழ்வை விரிவாக தருக?

**ஆக்கம்: பெர்னத்**



# உலக சமூக மாநாட்டிற்கு திருத்தந்தையின் செய்தி

**மௌனம் காத்தல் என்ற சமுதாய நோயால் பலரும் பீடிக்கப்பட்டுள்ளதால், தங்களுக்காக குரல் எழுப்ப இயலாத புலம்பெயர்ந்தோர் மீது குற்றங்கள் அதிகரிக்கின்றன.**

தேவையற்ற மக்களைப் புறந்தள்ளும் கலாச்சாரத்தை நியாயப்படுத்துவதற்கென, அநீதிகளை மறுத்து ஒதுக்கவேண்டும் என்ற கொள்கையை சுட்டிக்காட்டும் சமூகப் போக்கு, இன்றைய உலகில் வளர்ந்துவருவதைக் குறித்து, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கவலையை வெளியிட்டுள்ளார்.

புலம்பெயர்தல் என்ற மையக்கருத்துடன் மெக்சிகோ நகரில் இடம்பெறும் எட்டாவது உலகக் கருத்தரங்கிற்கு திருத்தந்தை அனுப்பியுள்ள செய்தியில், புலம்பெயர்ந்தோர், மற்றும் குடியேற்றதாரர் சந்திக்கும் அநீதிகளைக் குறித்து கருத்துக்களைப் பகிர்ந்துள்ளார்.

மௌனம் காத்தல் என்ற சமுதாய நோயால் பலரும் பீடிக்கப்பட்டுள்ளதால், தங்களுக்காக குரல் எழுப்ப இயலாத புலம்பெயர்ந்தோர் மற்றும் குடியேற்றத்தாரர் அனைவர் மீதும், புறக்கணிக்கப்படுவது, சுரண்டப்படுவது, பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாவது, உரிமைகளை இழப்பது போன்ற குற்றங்கள் இழைக்கப்படுகின்றன என்று திருத்தந்தை தன் செய்தியில் கூறியுள்ளார்.

அநீதிகளைக் கண்டித்தால் மட்டும் போதாது, மாறாக, நியாயமான தீர்வு காண்பதற்குத் தேவையான ஒவ்வொருவரின் கடமையும் வலியுறுத்தப்பட்ட வேண்டும் என்ற அழைப்பையும் தன் செய்தியில் முன்வைத்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மனித உரிமைகள், நாட்டு எல்லைகள், அரசியல் கொள்கைகள், காலநிலை மாற்றம் என்ற பல தொடர்புடைய கருத்துக்களை இம்மாநாடு விவாதிக்க உள்ளது குறித்து தன் பாராட்டுக்களை வெளியிட்டுள்ளார்.

புலம்பெயர்வோருக்கும், அடைக்கலம் தேடுவோ-ருக்கும் தேவையான உதவிகளை வழங்குவதில், பொறுப்புணர்வுகளை அனைவரும் பகிர்ந்து செயல்பட வேண்டும் என்ற அழைப்பையும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இச்செய்தியில் முன்வைத்துள்ளார்.

# தனித்துவமான அடையாளங்களை விற்பனை செய்யக்கூடாது

## - திருத்தந்தை

**இளையோர் ஒவ்வொருவரும் நான் யார் என்ற கேள்வியை, தனக்குள், அடுத்தவருக்கு முன், கடவுளுக்கு முன், வரலாற்றுக்கு முன் எழுப்பி, தெளிவான விடைகள் தேடினால், வாழ்வின் பொருளை கண்டடைய முடியும்**

இளையோர் ஒவ்வொருவரும் தங்கள் தனிப்பட்ட அடையாளங்களை பாதுகாத்து, அதே வேளையில் அடுத்தவரின் வேறுபட்ட அடையாளங்களை ஏற்றுக்கொள்ளும் வண்ணம் அவர்களைச் சந்திப்பது, சவாலான ஒரு விடயம் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இளையோருக்கு அனுப்பிய ஒரு காணொளிச் செய்தியில் கூறியுள்ளார்.

ஐப்பசி 29, கார்திதகை 1, முடிய, ஆர்ஜென்டினா நாட்டின் தலைநகர் புவனஸ் அயிரஸ் நகரில், Scholas Occurrentes மற்றும் World Ort என்ற இரு அமைப்பினர் இணைந்து ஏற்பாடு செய்திருந்த மூன்றாவது இளையோர் மாநாட்டிற்கு திருத்தந்தை அனுப்பிய காணொளிச் செய்தியில் இவ்வாறு கூறியிருந்தார்.

நான் யார் என்ற கேள்வியை, இளையோர் ஒவ்வொருவரும் எழுப்பவேண்டும் என்று தன் காணொளிச் செய்தியில் கூறியுள்ள திருத்தந்தை, இந்தக் கேள்வியை, தனக்குள், அடுத்தவருக்கு முன், கடவுளுக்கு முன், வரலாற்றுக்கு முன் எழுப்பி, தெளிவான விடைகள் தேடினால், வாழ்வின் பொருளை கண்டடைய முடியும் என்று கூறியுள்ளார்.

நாம் ஒவ்வொருவரும் பெற்றுள்ள தனித்துவமான அடையாளம், தொழிற்சாலையில் உருவாக்கப்பட்ட ஓர் எண்ணிக்கையோ, குறியீடோ அல்ல என்றும், நமது அடையாளங்கள், ஒரு குடும்பத்தில் ஒரு சமுதாயத்தில், ஒரு நாட்டில் உருவாக்கப்படுகின்றன என்றும் திருத்தந்தை இச்செய்தியில் வலியுறுத்திக் கூறினார்.




இந்த அடிப்படை உண்மைகளை மறக்கும்போது, அடுத்தவரைக் குறித்த அச்சங்கள் நமக்குள் எழுகின்றன என்றும், இதனால், வன்முறைகள் பெருகி, சிறிதும், பெரிதுமாக, உலகெங்கும் போர்கள் உருவாகியுள்ளன என்றும், திருத்தந்தை, தன் செய்தியில், கவலையுடன் எடுத்துரைத்துள்ளார்.

ஒவ்வொருவருக்கும் பிறப்பில் உருவாகும் தனித்துவமான அடையாளங்களை, எக்காரணம் கொண்டும், விற்பனை செய்யக்கூடாது என்ற வேண்டுகோளை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இக்காணொளிச் செய்தியில், ஒரு விண்ணப்பமாக வெளியிட்டார்.

கார்த்திகை 1ம் திகதி நிறைவுற்ற இந்தக் கூட்டத்தில், 30 நாடுகளைச் சேர்ந்த 400க்கும் அதிகமான இளையோர் பங்கேற்றனர் என்று, Scholas Occurrentes அமைப்பைச் சார்ந்தவர்கள் கூறியுள்ளனர்.

# புத்த ஆலயத்தின் 230வது ஆண்டு நிறைவு விழாவுக்கு வாழ்த்து



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் சார்பாகவும், பல்சமய உரையாடல் திருப்பீட அவையின் சார்பாகவும் Wat Phra Chetuphon புத்த ஆலயத்தின் 230வது ஆண்டு நிறைவு விழாவுக்கு, வாழ்த்துக்களை அனுப்புவதாக, ஆயர் Miguel Ángel Ayuso Guixot அவர்கள் ஒரு செய்தியில் கூறியுள்ளார்.

தாய்லாந்து நாட்டின் தலைநகர் பாங்காக்கில் அமைந்துள்ள Wat Phra Chetuphon புத்த ஆலயத்தின் 230ம் ஆண்டு நிறைவு கொண்டாட்டங்கள், கார்த்திகை 1ம் திகதி முதல் 11ம் திகதி முடிய நடைபெறுவதையொட்டி, பல்சமய உரையாடல் திருப்பீட அவையின் செயலர், ஆயர் Ayuso Guixot அவர்கள் இச்செய்தியை அனுப்பியுள்ளார்.

Wat Pho என்று மக்களால் பொதுவாக அழைக்கப்படும் இந்த புத்த ஆலயத்திற்கும், கத்தோலிக்க திருஅவைக்கும், 1972ம் ஆண்டு முதல், நல்லுறவுகள் உருவாகியுள்ளன என்றும், இவ்வாலயத்தின் புத்த துறவிகள் 1972ம் ஆண்டு 5 திகதி புனிதத் திருத்தந்தை 6ம் பவுல் அவர்களை திருப்பீடத்தில் முதல் முறையாக சந்தித்தனர் என்றும் ஆயர் Ayuso Guixot அவர்கள் இச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

புத்த துறவிகளும், கத்தோலிக்கத் திருஅவையும் மேற்கொண்டுள்ள இணைந்த பயணம், தாராள மனதுடன் நடைபெற்று வருகிறது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறிய சொற்களை, ஆயர் Ayuso Guixot அவர்கள் இச்செய்தியில் நினைவு கூர்ந்துள்ளார்.




# CHARIS - கத்தோலிக்க அருங்கொடை இயக்கத்தின் புதிய பணிக்குழு

**கத்தோலிக்க அருங்கொடை இயக்கத்தின் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்யும் வண்ணம், CHARIS என்ற பெயருடன், ஒரு புதிய, பன்னாட்டு பணிக்குழு உருவாக்கப்பட்டது.**
**- திருப்பீடம்**




கத்தோலிக்க அருங்கொடை இயக்கத்தின் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்யும் வண்ணம் ஒரு புதிய, பன்னாட்டு பணிக்குழு, இவ்வாண்டு மார்கழி 8ம் திகதி உருவாக்கப்படும்.

இத்தகைய ஒரு பணிக்குழு உருவாக்க-ப்படுவதன் அவசியத்தை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பலமுறை கூறியுள்ளதையடுத்து, பொதுநிலையினர், குடும்பம் மற்றும் வாழ்வு திருப்பீட அவையின் கண்காணிப்பின் கீழ் இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

CHARIS என்ற பெயருடன் நிறுவப்படும் இந்தப் பணிக்குழுவின் ஒருங்கிணைப்பாளராக, பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த Jean-Luc Moens என்ற பொதுநிலையினர் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதும், இப்பணிக்குழுவில் உலகின் ஐந்து கண்டங்களைச் சேர்ந்த 18 பேர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கன.

வத்திக்கான் பாப்பிறை இல்லத்தின் ஆன்மீக வழிகாட்டியாகப் பணியாற்றும், அருள்பணி Raniero Cantalamessa அவர்கள், CHARIS பணிக்குழுவுக்கு, வழிகாட்டியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

CHARIS பணிக்குழு, 2019ம் ஆண்டு, தூய ஆவியாரின் வருகைப் பெருவிழாவன்று தன் செயல்பாடுகளைத் தொடக்கும் என்று, பொதுநிலையினர், குடும்பம் மற்றும் வாழ்வு திருப்பீட அவை அறிவித்துள்ளது.



# இதழியல் பயிலும் ஜெர்மன் மாணவர்களைச் சந்தித்த திருத்தந்தை

கிறிஸ்தவ செய்தியாளர்கள் ஒரு வேலையையோ, கடமையையோ மட்டும் நிறைவேற்று-வதில்லை மாறாக, மனித மாண்பையும், தொழில் தர்மத்தையும் நிலைநாட்ட அவர்கள் உழைக்கின்றனர் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன்னைச் சந்திக்க வந்திருந்த இதழியல் பட்டப்படிப்பு மாணவர்களிடம் கூறினார்.

செய்தித்துறையில் கத்தோலிக்கர்களை உருவாக்கும் நோக்கத்துடன், ஜெர்மன் கத்தோலிக்கத் தலத்திருஅவை நடத்திவரும் இதழியல் பட்டப்படிப்பில் ஈடுபட்டுள்ள 340 மாணவர்களை கார்த்திகை 9, திருப்பீடத்தில் சந்தித்த திருத்தந்தை, செய்தித்துறையில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய கிறிஸ்தவ பண்புகளைக் குறித்துப் பேசினார்.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் முடிவுற்ற வேளையில், தொடர்புத் துறையில் பணியாற்ற விழைவோருக்கு தகுந்த வழிகளைக் காட்டுவதற்கென்று, ஜெர்மன் தலத்திருஅவை இதழியல் பட்டப்படிப்பைத் தொடங்கியது என்பதையும், தற்போது, இந்த பள்ளி, 50 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது என்பதையும் திருத்தந்தை தன் உரையின் தொடக்கத்தில் குறிப்பிட்டார்.

உலக ஊடகங்கள், இவ்வுலகைக் குறித்து எதிர்மறையான கருத்துக்களை பரப்பிவரும் வேளையில், கிறிஸ்தவ செய்தியாளர்கள் நம்பிக்கை தரும் நல்ல செய்திகளை மக்களுக்கு வழங்குவது முக்கியம் என்பதை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் உரையில் வலியுறுத்தினார்.

மக்களை மையப்படுத்தி எழுதப்படும் உண்மைச் செய்திகள், முதல் பக்கத்தில் இடம்பெறவில்லை-யென்றாலும், உண்மைகளை மறைக்காமல், மக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில், செய்தித்-துறையில் பணியாற்ற விழையும் கிறிஸ்தவர்கள் செயலாற்ற வேண்டும் என்ற வேண்டுகோளுடன், திருத்தந்தை தன் உரையை நிறைவு செய்தார்.



# இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள் (மத் 6:9)

பகுதி – 8

## பாடல்களால் வேண்டுவோம்

செப முறைகளிலே மிக எளிதானதும், இனிமையானதும் பாடிச் செபிப்பதுதான். பாடலின் குணசிறப்புக்களை நாம் நன்கு அறிவோம். விலங்குகளிலிருந்து மனிதர்வரை இசைக்கு மயங்காதவர் எவரும் இலர். இறைவன்கூட இசையை விரும்புகிறார் என அனைத்துச் சமயங்களும் நம்புகின்றன. எல்லாச் சமய வழிபாடுகளிலும் பாடல்கள் இடம்பெறுவது அதை உணர்த்துகிறது.

கிறிஸ்தவ சமய இறையியலிலும், வழிபாட்டிலும் பாடலுக்குச் சிறப்பிடம் இருக்கிறது. திருவிவிலியம் பாடலின் பெருமைகளை பல இடங்களில் பறைசாற்றுகின்றது. நாம் பாடவேண்டும் என்பது இறைவனின் விருப்பம் என்கிறார் பவுலடியார். எபேசியருக்கு எழுதிய திருமடலில் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை வைத்த நாங்கள் கடவுளது மாட்சியைப் புகழ்ந்து பாடவேண்டுமென அவர் விரும்பினார். (எபே 1:12) என்னும் செய்தியை வாசித்து நாம் வியக்கின்றோம்.

இதைவிட வியப்பான செய்தி இயேசுவும் பாடினார் என ஒரே ஒருமுறை நற்செய்தி நூல்களில் பதிவு செய்யப்பட்டிருப்பது. புனித வியாழன் அன்று இறுதி இராவுணவுக்குப் பிறகு இயேசுவும் அவரது சீடர்களும் புகழ்ப்பாடல் பாடிவிட்டு ஒலிவ மலைக்குச் சென்றனர் (மாற் 14:26, மத் 26:30) என்று வாசிக்கின்றோம். இப்புகழ்ப்பாடல் திருப்பாடல் 136 என்கின்றனர் விவிலிய அறிஞர்கள். இயேசுவைத் "திருப்பாடல்களின் இனிமைமிகு பாடகர்" என்று புனித அகுஸ்தினார் அழைப்பது இங்கு நினைவுகூரத்தக்கது. தம் வாழ்நாளின் ஒவ்வொரு நாளுமே இயேசு புகழ்ப்பாடல்கள் பாடியிருப்பது என நம்பலாம்.

இயேசுவின் தாய் அன்னை மரியாவும் பாடல்களால் இறைவனைப் போற்றினார். இறைவனைப் புகழ்ந்து அவர் பாடிய ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது. (லூக் 1:47) என்னும் புகழ்பெற்ற வரிகளுடன் தொடங்கும் இறைப்புகழ்ச்சிப் பாடலை நாம் மரியாவின் பாடல் என்றுதானே அழைக்கின்றோம்.

இவர்களைத் தொடர்ந்து, திருத்தூதர்களும், சீடர்களும் பாடல்கள் பாடி இறைவேண்டல் செய்தனர் என்பது மரபு. பவுலடியார் பாடிச் செபித்தார் என்பதற்கு நல்ல சான்றுகள் இருக்கின்றன. பிலிப்பு நகரில் சிறைப்பட்டிருந்தபோது, நள்ளிரவில் பவுலும் சீலாவும் கடவுளுக்குப் புகழ்ப்பா பாடி இறைவனிடம் வேண்டினர். மற்ற கைதிகளோ இதனைக் கேட்டுக்கொண்டிருந்தனர். (தி.ப 16:25) என்று வாசிக்கின்றோம். சிறையிலும்கூட இறைப்புகழ் பாடும் நல்ல மனநிலை பவுலிடம் இருந்தது என்பது நமக்கெல்லாம் ஒரு பாடம்தான்.

பவுலடியாரின் இந்த அனுபவத்திலிருந்து இறைமக்களுக்குப் பாடலின் சிறப்பை எடுத்துரைக்க அவரால் முடிந்தது. எனவேதான், கொலோசு நகரத்துக் கிறிஸ்தவர்களுக்கு அவர் திருப்பாடல்களையும், புகழ்பாக்களையும், ஆவிக்குரிய பாடல்களையும் நன்றியோடு உளமாரப் பாடிக் கடவுளைப் போற்றுங்கள் (கொலோ 3:16) என அறிவுரை பகரமுடிந்தது. அதுமட்டுமல்ல, எபேசியருக்கு எழுதிய மடலில் உங்கள் உரையாடல்களில் பாடல்கள் இடம்பெறட்டும் (எபே 5:19) என்றும் அறிவுறுத்தினார்.

திருத்தூதர் யாக்கோபு தமது திருமடலில் உங்களுள் யாரேனும் துன்புற்றால் இறைவேண்டல் செய்யட்டும் மகிழ்ச்சியாயிருந்தால் திருப்பாடல்களை இசைக்கட்டும் (யாக் 5:13) என்று எழுதியிருப்பதும் நம் கவனத்தை ஈர்க்கிறது.

எனவே, தொடக்ககாலத் திருச்சபையின் வாழ்விலும், வழிபாடுகளிலும், உரையாடல்களிலும் கூட பாடல்கள் இடம்பெற்றன என நம்பலாம். மேலும், பாடுவது ஒரு விண்ணகச் செயல்பாடு என்னும் செய்தியை திருவெளிப்பாடு நூலில் காண்கின்றோம். விண்ணகத்தின் உயிர்கள் அல்லும் பகலும் இடையறாது பாடிக்கொண்டிருந்தன. (திவெ 4:8) என்றும், இருபத்து நான்கு மூப்பர்கள் இறைவனை வணங்கி, பாடினார்கள் (தி.வெ 4:11), அவர்கள் புதியதொரு பாடலைப் பாடிக்கொண்டிருந்தார்கள் (தி.வெ 5:9) என்றும் வாசிக்கின்றோம். கோடிக்கணக்கான வானதூதர்களும் உரத்த குரலில் பாடிக்கொண்டிருந்தார்கள் (தி.வெ 5:12-13), ஓர் இலட்சத்து நாற்பத்து நான்காயிரம் பேரும் அரியணை முன்னிலையில் புதியதொரு பாடலைப் பாடிக்கொண்டிருந்தார்கள் (தி.வெ 14:3) என்றும் பார்க்கின்றோம்.

திருப்பாடல் 92, "உன்னதரே உமது பெயரைப் புகழ்ந்து பாடுவது நன்று" (தி.பா 92:1) என்று பாடலின் சிறப்பை எடுத்துரைக்கிறது. வாருங்கள், "ஆண்டவரைப் புகழ்ந்து பாடுங்கள்" (தி.பா 95:1) என அழைப்பு விடுக்கிறது. இன்னொரு திருப்பாடல் "ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள்" (தி.பா 96:1, 98:1) எனத் தொடங்குகின்றன. மற்றுமொரு திருப்பாடல்கள்.

திருச்சபையின் வரலாற்றில் கடந்த 21 நூற்றாண்டுகளாகப் பாடல்கள் திருவழிபாட்டில் சிறப்பிடம் பெற்றிருக்கின்றன. திருத்தந்தை கிரகோரியாரின் காலத்தில் திருவழிபாட்டு இசை மிக முக்கியத்துவம் பெற்று, கிரகோரியன் இசை என்னும் புதிய இசை மரபே



தோன்றியது. பாடகர்களின் பாதுகாவலியாக புனித சிசிலியம்மாளின் விழாவை கார்த்திகை 22 அன்று ஆண்டுதோறும் கொண்டாடுகின்றோம். பங்குகளில் பங்கு மேய்ப்புப் பணிக்குழுவோ, நிதிக்குழுவோ, அன்பியங்களோ இல்லாமல் இருக்கலாம். ஆனால் பாடகர் குழு இல்லாமல் இருக்காது. எனவே பாடல்களின் முதன்மைத்துவத்தை நாம் நன்கு அறிவோம். ஆனால் அனைவரும் பாடவேண்டும், பாடிச் செபிக்க வேண்டும் என்னும் உணர்வில் நாம் இன்னும் வளரவேண்டும்.

### பாடல்வழி இறைவனை வழிபட இதோ சில பரிந்துரைகள்:

- ❖ வழிபாட்டில் அனைவரும் இணைந்து பாடவேண்டும்.
- ❖ குடும்பச் செபத்திலும், தனிச் செபத்திலும் பாடல்கள் இடம்பெறவேண்டும்.
- ❖ ஒவ்வொருவருக்கும் பிடித்தமான பாடல்கள் என சில தேர்வுசெய்யப்பட்டு, மனப்பாடம் செய்து அடிக்கடி பாடவேண்டும்.
- ❖ நம் வாழ்வே ஒரு பாடலாக மாறவேண்டும்.

தொடரும்

## செபமாலையின் வல்லமை

ஒரு காலத்தில் அரசன் ஒருவன் அன்னை மரியின் மேல் உள்ள பக்தியினால் தன் இடுப்பில் எப்பொழுதும் ஒரு செபமாலையை அணிந்திருப்பான். ஒரு நாள் நோய்வாய்ப்பட்டு இறந்துபோகும் தறுவாயில் அவன் ஒரு காட்சி கண்டான். அதாவது அவன் இறந்து அவனது ஆன்மா கடவுளிடம் தீர்ப்பிற்கு நிற்கிறது. அவன் செய்த பாவ புண்ணியங்களின் பட்டியல் அவனுக்கு காட்டப்படுகிறது. தேவதூதர் ஒருவர் ஒரு தராசுத் தட்டைக் கொண்டுவந்து பாவ புண்ணியங்களை எடை போடுகிறார். அரசன் செய்த புண்ணியங்களைவிட, பாவங்களே அதிகமாய் இருந்ததால் அவன் நித்திய நரகத்திற்கு தீர்ப்பிடப்படுகிறான். அப்பொழுது அன்னை மரி ஓடோடி வந்து அவனது இடுப்பில் வைத்திருந்த செபமாலையைக் கொண்டு வந்து புண்ணியங்கள் உள்ள தட்டில் வைக்கிறார். இப்பொழுது புண்ணியங்கள் உள்ள தராசு தட்டு, பாவங்கள் வைக்கப்பட்ட தட்டைவிட எடை கூடுதலாகக் காட்டியது. அன்னை மரி தன் அருமை மகனிடம் பரிந்துபேசி, அந்த அரசனுக்கு விண்ணகம் செல்ல அனுமதி வாங்கித் தருகிறார்.

"திடுக்" என்று அவன் தன் காட்சியிலிருந்து விடுபட்டு "ஐயோ, இடுப்பில் சும்மா வைத்திருந்ததற்கே எனக்கு விண்ணகம் கிடைக்கிறது! இத்தனை அருமையான ஒன்றை இனி நான் உபயோகித்து இதில் உள்ள செபங்களைச் சொல்வேன்" என்று கூறி , அன்றிலிருந்து நாள்தோறும் செபமாலை சொல்லத் தொடங்கினான். மேலும் தன் அரண்மனையில், தன் நாட்டில் உள்ள அனைவரும் கட்டாயம் செபமாலை சொல்ல வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பித்து, செபமாலைப் பக்தியை வளர்த்தான். அதனால் அவன் தன் நோயினின்று நலமாகி, நீண்ட நாள் அன்னை மரியாவுக்கு உகந்தவனாக வாழ்ந்து மரித்தான்.

கார்த்திகை மாதத்தில் மரித்த ஆன்மாக்களை நினைவுகூர்கிறோம். அந்த ஆன்மாக்களுக்காக தினமும் செபமாலை செபித்து அவர்கள் ஆன்மா விண்ணகம் சேர செபிப்போம்.



# புனித இராயப்பர் சின்னப்பர் பேராலய அபிசேகம்



## கார்த்திகை 18

80ஆம் ஆண்டில் அனக்ளேத்துஸ் என்னும் திருத்தந்தை. புனித இராயப்பரது கல்லறை மீது சலவைக் கற்களால் ஒரு சிற்றாலயத்தை அமைத்தார். பின்னர் அது ஒரு பெரிய ஆலயமாகக் கட்டப்பட்டது. அது 326ல் அபிஷேகம் செய்யப்பட்டது. திருத்தந்தை திருப்பலி நிறைவேற்ற ஒரு பீடம் இருந்தது. அது இன்னும் அங்கு இருக்கிறது. 16ஆம் நூற்றாண்டில் ஜூலியஸ் என்னும் திருத்தந்தை அதில் ஒரு பேராலயத்தை அமைக்க எண்ணினார். அது அகில திருச்சபைக்கும் ஓர் ஆபரணமாக இருக்க அவர் விரும்பினார். பிரசித்திபெற்ற சிற்பிகள் அதில் வேலை செய்தார்கள். 120 ஆண்டுகளாக வேலை நடந்தது. 1514 ஆம் ஆண்டில் இறந்த பிரமாந்தா, 1520ஆம் ஆண்டில் இறந்த இரப்பேல், 1564ஆம் ஆண்டில் இறந்த மைக்கேல் ஆஞ்சலோ இம்மூவரும் உலகப் பிரசித்தி பெற்ற சிற்பிகள். இவர்களும் அக்கோயிலை அலங்கரித்து 1626ஆம் ஆண்டில் அபிஷேகம் பண்ணப்பட்டது.

புனித சின்னப்பரின் பேராலயம் கொன்ஸ்தாந்தின் பேரரசரால் கட்டப்பட்டது. சின்னப்பரது உடலை, அவர் கொலை செய்யப்பட்ட இடத்திலிருந்து கொண்டு வந்து அடக்கம் செய்த கல்லறைமீது ஆலயம் கட்டப்பட்டு இருந்தது. பின்னர் வந்த பேரரசர்கள் ஆலயத்தைப் பெரிதாக்கினர். கிறிஸ்தவ மக்கள் அதை அழகுபடுத்தினர். எனவே சித்திரம், கலை சம்பந்தப்பட்டமட்டில் உரோமையிலேயே மிக அழகு வாய்ந்த ஆலயமாயிற்று. 15.7.1823 இரவில் ஒரு வேலைக்காரனின் கவனமின்மையால் ஏற்பட்ட நெருப்பு ஆலயத்தில் பெரும் பகுதியை அழித்துவட்டது. 12ஆம் சிங்கராயர் திருத்தந்தை இதை திரும்பக் கட்டத் தீர்மானித்து ஒன்பதாம் பத்திநாதர் பாப்பானவர் 1854ஆம் ஆண்டில் தேவதாய் அமலோற்பவி என்ற உண்மையை வேதசத்தியமாக பிரகடனம் செய்யப்பட்டதையொட்டி, அபிசேகம் செய்யப்பட்டது.

கோவிலானது கடவுளின் வீடு. மிக உன்னதரின் வாசஸ்தலம் என்ற நினைவு கோவிலுக்குச் செல்பவர்களது உள்ளங்களில் நம்பிக்கையையும் ஆசாரத்தையும் எழுப்ப வேண்டும். கடவுளது இரக்கத்தின் சிம்மாசனம் கோவில். அவரது எல்லையற்ற அன்பின் அரியணை. கடவுளுடன் பேசி அவரை ஆராதிக்கும் இடம். இயேசுவை தன் இல்லத்தில் என்றும் நம் மத்தியில் கொண்டிருக்கும் நாமும் பேறுபெற்றவர்கள். சாலமோன் தான் கட்டிய ஆலயத்தில் உயர்ந்த திரவியங்களைக் காணிக்கையாகக் கொடுத்தார். நாமோ நமது கோவில்களில் இயேசு கிறிஸ்துவையே கடவுளுக்கு ஒப்புக் கொடுக்கிறோம்.

**சிந்தனை:- நம் கோவில்கள் கடவுளது இரக்கத்தின் அரியணைகள் ஆகும்.**

## கன்னிமரியாள் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டது

பழைய ஏற்பாட்டில் யூதமக்கள் தங்களுக்கு பிறக்க இருக்கும் குழந்தைகளை தேவாலயத்தில் கடவுளின் சேவைக்கு கையளிப்பதாக வாக்குறுதி செய்வார்கள். சிறுபெண்களும் தங்களைக் கடவுளுக்கு அர்ப்பணித்து தேவாலயத்தில் வாழ்ந்து கடவுளுக்குச் சேவை செய்யலாம். பரிசுத்த பெண்கள் இச்சிறுமியரைப் பராமரித்து ஐந்து வயது முடியும் முன்னரே சிறுவர் சிறுமியரை தேவாலயத்திற்கு எடுத்துச் சென்று குருவிடம் அவர்களைக் கையளிப்பார்கள். குரு அவர்களை கடவுளுக்கு ஒப்புக் கொடுப்பார். சிறுமிகள் விரும்பினால் அங்கேயே தங்கலாம். திருவுடைகள் தயாரித்தும் திருவழிபாட்டு நேரத்தில் துணை புரிந்தும் வேறு பல ஆராதனைச் சடங்குகளில் பங்கு பற்றும் அவர்கள் தேவாலயத்தில் நேரத்தைக் கழிப்பார்கள். இதற்கான பயிற்சிகள் அவர்களுக்கு அளிக்கப்படும்.




சிறுமி மரியாளுக்கு மூன்று வயதானதும் அவள் தேவாலயத்துக்குச் செல்ல விரும்பினாள். அவளை விட்டுப் பிரிவது பெற்றோருக்கு கடினமாக இருந்தது என்றாலும் கடவுளது சித்தத்தை அவர்கள் எதிர்க்க-வில்லை. அவர்களே குழந்தையை ஆலயத்துக்கு எடுத்துச் சென்று கடவுளுக்கு அவளை ஒப்புக்கொடுத்தனர். புனித மரியாள் தன் கன்னிமையையும் தன்னை முழுமையுமே இறைவனுக்கு அர்ப்பணம் செய்தாள். கிரேக்க மக்கள் இவ்விழாவை "இறைவனின் அன்னை ஆலயத்தில் நுழைந்த விழா" என்று கொண்டாடுகின்றனர்.

ஆதியிலிருந்தே இவ்விழா திருச்சபையில் கொண்டாடப்படுகிறது.

**சிந்தனை: மரியாள் தன் பெற்றோரை நேசித்தாள். கடவுளை அதிகமாக நேசித்தாள். அதனால் தான் பெற்றோரை விட்டுப் பிரிந்து இளம் வயதிலிருந்தே தேவாலயத்தில் வாழ்ந்து பிள்ளைகளுக்கு இவள் ஒரு சிறந்த எடுத்துக்காட்டானாள்.**

## புனித சிசிலியா



### கார்த்திகை 22

இவள் உரோமையில் பிறந்தாள். இளம் வயதிலேயே தன் கன்னிமையை கடவுளுக்கு அர்ப்பணம் செய்ததால் மணமுடிக்க விரும்பவில்லை. என்றாலும் வலேரியன் என்ற வாலிபனை மணமுடிக்க வற்புறுத்தப்பட்டாள். மணமுடித்த அன்று அவள் தன் கணவனை நோக்கி, "கடவுளின் தூதர் ஒருவர் என் கற்புக்கு காவலராய் இருக்கிறார். எனவே கடவுளது கோபத்தை உம்மீது வரச்செய்யும் எதையும் செய்ய நீர் முயற்சிக்கலாகாது" என்றாள். வலேரியன் அவளைப் பார்த்து "கடவுளின் அந்தத் தூதரை நான் பார்ப்பேனானால் இயேசு கிறிஸ்துவை விசுவசிப்பேன்" என்றார். அப்பொழுது சிசிலியா, "ஞானஸ்நானம் பெற்றால் ஒழிய அவரைப் பார்க்க முடியாது" என்றாள்.

சுரங்கங்களில் வசித்த உர்பன் என்னும் திருத்தந்தையிடம் வலேரியன் போய் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டான். வீட்டிற்குத் திரும்பியதும் தன் மனைவியின் அருகில் ஒரு அழகிய வானதூதர் இருப்பதைக் கண்டார். வலேரியனுடைய சகோதரர் திபூர்சியுஸையும் சிசிலியா மனந்திருப்பினாள். அல்மாகுஸ் என்னும் உரோம அதிகாரி இரு சகோதரர்களையும் பிடித்து வேதத்துக்காக அவர்களை கொன்றான். சில நாட்களுக்குப்பின் சிசிலியம்மாளையும் தேசத்துக்காக கொன்றார்கள். இவர்கள் கொல்லப்பட்டது மார்குஸ் என்பவனது ஆட்சியில், 161ஆம் ஆண்டுக்கும் 190ஆம் ஆண்டுக்கும் மத்தியில் இது நடந்தது.

புனித சிசிலியம்மாளின் பெயர் திருச்சபையில் எப்பொழுதும் பிரசித்தி பெற்று வந்திருக்கிறது. திருப்பலி செபங்களின் போது ஆதிகாலத்திலிருந்தே அவளது பெயரைக் காண்கிறோம். கோவில் பாடகரின் பாதுகாவலியாக இவள் வந்திக்கப்படுகிறாள்.

**சிந்தனை: இவளது முயற்சியால் இருவர் மெய்யான கடவுளை அறிய வந்தனர். இதுவரை எனது முயற்சியால் யாராவது அவரை அறிய வந்திருக்கிறாரா? நல்ல நூல்களின் வழியாகவும் அவரை பிறர் அறியச் செய்யலாம்.**

## 'பு' எழுத்தின் பெருமை



அனைவரையும் மகிழ்விக்கும் "பு" அன்பு

பெற்றோரை மகிழ்விக்கும் "பு" சிறப்பு

வாழ்க்கையில் உயர உதவும் "பு" பொறுப்பு

மனிதனை உருவாக்கும் "பு" பண்பு

பிரிந்தவர்கள் கூடினால் பிறக்கும் "பு" சந்திப்பு

வெண்மை குறைந்தால் தோன்றும் "பு" பழுப்பு

காவல் துறையினர் கைதிகளும் அளிக்கும் "பு" காப்பு

மக்கள் தன்னைத்தானே காக்கும் "பு" தற்காப்பு

தூக்க மயக்கத்திலிருந்து எழும்பும் "பு" விழிப்பு

வறுமையின் நிறத்தை குறிக்கும் "பு" சிவப்பு

பதவி வந்தால் உதவும் "பு" பளபளப்பு

வருங்காலத்தில் உதவும் "பு" சேமிப்பு

மனிதன் ஒதுக்க வேண்டிய "பு" வெறுப்பு

## தாய்மை



உயிரும் கருவறையும்
கலந்தது தான் தாய்மை

பெண்மையில்லாமல் உயிரில்லை.
உயிரில்லாமல் பெண்மையில்லை.

கல்லில் செதுக்கிய சிற்பத்தை விட
கருவில் சுமந்த தாயே சிறந்தவள்

## 01 திருத்தந்தையுடன்...

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நிறைவேற்றும் திருப்பலியில், ஏறத்தாழ 6000 வறியோரும், அவர்களுடன் பணிபுரியும் தன்னார்வத் தொண்டர்களும் கலந்து கொள்வதுடன், திருப்பலியைத் தொடர்ந்து, புனிதத் திருத்தந்தை 6ம் பவுல் மண்டபத்தில் திருத்தந்தையுடன் இடம்பெறும் மதிய விருந்திலும் கலந்து கொள்வர்.
இதற்கிடையே, உலக வறியோர் நாளை முன்னிட்டு, இத்திங்கள் முதல், இவ்வாரம் முழுவதும், இலவச மருத்துவ முகாமை புனித பேதுரு வளாகத்தில் நிறுவி, மருத்துவ உதவிகளை வறியோருக்கு தினமும் காலை 10 மணி முதல் இரவு 10 மணிவரை வழங்கி வருகிறது, திருப்பீடம்.

## 01 அதிமேதகு...

அடுத்தநாள் 11ம் திகதி ஞாயிற்றுக்கிமை காலை 8.30 மணிக்கு மும்மொழிகளிலும் திருப்பலி கர்தினால் ஆண்டகையினால் நிறைவேற்றப்பட்டது. அன்றைய திருப்பலியின் மறையுரையில் கர்தினால் அவர்கள் குடும்பங்கள் ஒன்றாக சேர்ந்து செபிப்பது நல்லது, அதற்கு ஒரு குறிப்பிட்ட நேரத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். நம் குடும்பங்களில் இருந்து புனிதர்கள் உருவாக வேண்டும். அதற்கு குடும்ப செபம் மிக மிக முக்கியமாக அமைகிறது.

மேலும் வீடுகளில் நிறைய குழந்தைகள் இருந்தால் அங்கே சத்தம், சந்தோஷம், மகிழ்ச்சி, சண்டை, ஒற்றுமை என்பன அக்குடும்பத்தில் இருக்கும். ஆகவே, குழந்தைகளை பெற்றெடுங்கள், குழந்தைகள் தான் ஒரு குடும்பத்தின் செல்வங்கள். இறைவன் தரும் கொடை. குழந்தை வேண்டாம் என்று இராதீர்கள். அநேக குழந்தைகள் அநேக மகிழ்ச்சியை தருவார்கள் என்று கூறினார்.

திருப்பலிக்குப் பின் மறைக்கல்வி மாணவர்களையும் மறையாசிரியர்களையும் சந்தித்து உரையாற்றினார். அதில் மறையாசிரியர்கள் குழந்தைகளுக்கு செபிக்க கற்றுக்கொடுக்க வேண்டும். செபத்தின் முக்கியத்துவத்தை சொல்லிக் கொடுக்கவேண்டும், அவர்களிடையே இருந்து குருக்கள், துறவிகள் உருவாக அவர்களுக்கு ஆசையை வளர்க்க வேண்டும். அதற்காக மாணவர்களை தெரிவுசெய்து பயிற்சி மற்றும் நல்ல அறிவுரைகளை கூறவேண்டும். ஆயத்தப்படுத்த வேண்டும், வழிநடத்த வேண்டும். மற்றும் முக்கியமாக எமது கத்தோலிக்க தனியார் பாடங்களைப் பற்றி கர்தினால் அவர்கள் கூறினார்.

கத்தோலிக்க தனியார் பாடசாலைகளில் பிள்ளைகளை சேர்ப்பதற்கு முன்பணமாக 4 இலட்சம் அறிவிடப்பட வேண்டும். அத்தோடு ஒரு குடும்பத்தில் முதல் இரண்டு குழந்தைகளுக்கு பணம் அறவிடப்பட-வேண்டும், என்றும் மூன்றாவது குழந்தை அதே பாடசாலையில் கல்வி கற்க நேர்ந்தால் அப்பிள்ளைக்கு பணம் அறவிடத் தேவையில்லை. இக்கருத்துக்களை மக்களுக்கு அறியப்படுத்தினார். வெள்ளவத்தை மயூரா பிரதேசத்தில் உள்ள மக்களையும் பார்வையிட்டு தனது வெள்ளவத்தை பங்கு தரிசிப்பை நிறைவுசெய்தார்.

**தகவல்: மைக்கல் பர்னாந்து புள்ளே.**

## 01 அரசியலானது...

என்று திருத்தந்தையின் கருத்தாக அமைகிறது என திருத்தந்தையின் செய்தி காரியாலயம் தெரிவிக்கிறது. வருடாந்தம் தை மாதம் 1ம் திகதி உலக சமாதான தினம் எனக் கொண்டாடப்படுவதோடு இம்முறை 52வது சமாதான தினம் கொண்டாடப்படும்.

## 01 மருத்துவக் கல்லூரி...

**Dr. மெக்சி பெர்னான்டோபிள்ளை**
**33, பொலிஸ் பார்க் அவெனியூ, கொழும்பு – 05**
**தொலை.பே 011 2501217 / 0718433038**

## 05 கலங்காதே!

ஈற்றிலே இறந்தவர்களை நினைத்து, அவர்களுக்காக மன்றாடும் பொழுதெல்லாம், நாம் நமக்காகவும் மன்றாடுகின்றோம். காரணம் நமக்கும் மரணம் உண்டு. அவ்வேளையில் நான் இறைவனுக்கு உகந்தவராக இருக்கும் வண்ணம், அன்றாடம் என் வாழ்வு இறைவனுக்குரிய வாழ்வாக அமைய, எப்பொழுதும் ஆயத்தமாய் இருக்கும் விதத்தில் அமைய வேண்டும்.

மன்றாடுவோமாக.

இறைவா, நீர் ஒருவரே சாவுக்குப்பின் வாழ்வு அளிக்கும் ஆற்றல் பெற்றவர். அதனால் உம் திருமகன் கிறிஸ்துவின் உயிர்ப்பில் நம்பிக்கை கொண்டிருந்த உம் அடியார்களைப் பாவம் அனைத்திலிருந்து விடுவித்து, உயிர்ப்பின் நாளில் இவர்கள் மாட்சி பெற்று உம்மோடு ஒன்றித்திருக்கச் செய்வீராக! எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெயரால் மன்றாடுகின்றோம்.

## 02 குருத்துவப் பணி

குருத்துவப் பணி வாழ்வின் 50வது ஆண்டின் நன்றித் திருப்பலியை 20.10.2018 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு வங்காலை தூய ஆனாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுத்தார். அருட்பணி.சி.எஸ்.குரூஸ் அடிகளார் மன்னார் மறைமாவட்டத்தில் வவுனியா தூய அந்தோனியார் ஆலயப் பங்குத்தந்தையாகவும், பேசாலை தூய வெற்றி அன்னை ஆலயப் பங்குத்தந்தையாகவும், பள்ளிமுனை தூய லூசியா ஆலயப் பங்குத் தந்தையாகவும், மடுத் திருப்பதிப் பரிபாலகராகவும், மன்னார் மறைமாவட்ட நிதியாளராகவும் பல ஆணடுகள் அருட்பணி ஆற்றியவர். தற்போது யாழ்ப்பாணம் அமல மரித் தியாகிகள் சபையின் குருக்கள் இல்லத்தில் பணியாற்றி வருகின்றார்.

**நன்றி. தமிழ் ஆன்மீகப் பணியகம்**

## 02 இரத்தினபுரி...

தினமும் காரணிக்கங்களை உச்சரித்து செபமாலை சொல்வதற்கு உறுதுணையாக இருந்தார். எம் பிள்ளைகளுக்கும் இது ஒரு பெரும் பயனாக இருந்தது. இன்று மாதாவை பேராலயத்தில் ஒப்படைத்து விட்டுச் செல்கின்றோம் என வேதனையுடனும், துக்கத்துடனும் கூறினார். மீண்டும் அடுத்த வருடம் எப்போது ஐப்பசி மாதம் வரும் என ஏக்கத்தோடு இருக்கின்றோம். சிலரின் கண்களில் கண்ணீர் நிறைந்து இருப்பதையும் காணக்கூடியதாக இருந்தது.

செபமாலை துணைகொண்டு ஜெகத்தினை வெல்வோம். மரியே வாழ்க

**தொகுப்பு : மேரி இருதயநாதன், மறையாசிரியர்,**
**பேராலயம், இரத்தினபுரி.**



# மணமகள் தேவை

றோமன் கத்தோலிக்கம், வத்தளை பெற்றோர்கள் தமது 81 கார்த்திகை பிறந்த, 5'3", அன்பான, அழகான, அளவிலான, சர்வேயராக (QS) வேலை செய்யும் (Executive Level) மகனுக்காக அன்பான, அழகான மகளை எதிர்பார்க்கின்றார்கள்
தொடர்புக்கு : 0775997746, mproposals914@gmail.com
(N4209)

## 03 பெண்களுக்கெதிரான...

திரைக்கதை அந்த முதல் வரும் நேரம் ஒதுக்கி கதாநாயகியுடன் பாட்டுப்பாடி டான்ஸ் ஆடுகிறார். பெரும்பாலான படங்களுக்கு இதுதான் இலக்கணம். ஜப்பான் நாட்டில் வேளாண்மை உற்பத்திக்கும், பொருள்கள் உற்பத்திக்கும் விற்பனை விளம்பர முயற்சிகளுக்கும் பத்திரிகைகள் முக்கியத்துவம் தருகின்றன. பொது இடங்களில் ஒழுக்கமாக, நாகரீகமாக நடந்துகொள்வது எப்படி? இல்லத்தையும், பொது இடங்களையும், சுற்றுச்சூழல்களையும் சுத்தமாக வைத்துக்கொள்வது எப்படி? என்கிற நோக்கில் செய்திகள் வெளியிடப்படுகின்றன. ஆனால் இங்கோ, நற்பழக்கத்தை போதிக்க வேண்டிய சமுதாயம், மக்களைப் பிஞ்சுப் பருவத்திலேயே திசைமாற்றி விடுகின்றன. பள்ளி விழாக்களிலும், சின்னத்திரை நிகழ்ச்சிகளிலும் குழந்தைகளுக்கு அணிவிக்கும் ஆடைகள் திரைப்பாடல்களுக்கு அவர்கள் ஆடும் நடனங்கள் எப்படி இருக்கின்றன? குழந்தைகளை சீரழித்துக் கொள்வது பத்திரிகைகளில் தொடர்ந்து வெளிவருகிறது.

**சமுதாயப் பொறுப்புள்ளோர் சிந்திக்க வேண்டும்.**

# மரித்தோர் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடுவோம்

இன்று அனைத்து மரித்தோர் மீட்புக்காக திருச்சபைத் தயானவள் எங்களோடு சேர்ந்து நினைவு கூறும் கத்தோலிக்கத் திருச்சபையின் மரபின்படி, மரித்தோர்களுக்குக் காட்டும் மரியாதையும், ஞான உறவுமாகும். ஆகையால் விண்ணுலகின் மகிமையில் பங்குபெறும் வரப்பிரசாதத்தினைப் பெற்றுக்கொள்ள எல்லாம் வல்ல இறைவனை நோக்கி கையேந்தி மன்றாடுவதோடு, திருச்சபையோடும் சேர்ந்து, இறந்த விசுவாசிகளின் நினைவு நாளைக் கொண்டாடும் இந்நாட்களில் வாழுகின்ற நாம் போராடுகின்ற திருச்சபையாக இருக்கின்றோம். நாம் துயருறும் திருச்சபையை நினைவுகூறும் இந்நாட்களில் எங்களோடு எங்களுக்கு முன் இந்த உலகில் வாழ்ந்து, அறிந்தோ, அறியாமலோ செய்த எல்லா பாவங்கள் காரணமாக பேரின்ப வாழ்வை அடைய முடியாமல், உத்தரிப்பு ஸ்தலத்தில் நித்திய இளைப்பாற்றியை இவர்கள் பெறும் பொருட்டு எல்லாம் வல்ல இறைவனை நோக்கி மன்றாடுவோம்.

இந்த மண்ணில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் ஒருநாள் கண்டிப்பாக இறக்க வேண்டும் என்பது நமக்கு எல்லாருக்கும் தெரியும். இருந்த பொழுதும் கூட ஒருவர் ஒருவர் குறிப்பாக நம்முடைய பெற்றோர், சகோதர, சகோதரிகள், உற்றார், உறவினர், நம் நண்பர்கள் தீடீர் என்று அல்லது நோயினால் பாதிக்கப்பட்டு இறக்கும்போதும் அதை நம்மால் முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. துக்கம் நம்மை அதிகமாக ஆட்கொண்டு வருகின்றது, மேலும் இறப்பின் பிரிவால் வருந்துபவர்களுக்கு எப்படி ஆறுதல் சொல்லுவது என்று தெரியாமல் நாம் பல நேரங்களில் அமைதியாககி விடுகின்றோம். திரு ஜோன் கிறஸ்சோஸ்தோம் என்பவர் இறந்தவர்களை எண்ணி ஏன் கண்ணீர் வடிக்கின்றீர்கள். வருத்தம் கொள்கின்றீர்கள்? நாம் எல்லோரும் ஒரே உடலாய் இருப்பதினால் நம் செபங்களினால், காணிக்கைகளினால், அவர்களின் பாவங்களுக்கு முழு மன்னிப்புப் பெற வாய்ப்பு இருக்கின்றது என்று கூறி நாம் அவர்களுக்காக செபிக்க அழைப்பு விடுக்கின்றார். தொடக்க காலத்திருச்சபையிலிருந்தே கடவுள் முன்னிலையில் மிகவும் சக்தி வாய்ந்த பரிந்துரையாளர்கள் என்ற முறையில் இறந்தவர்களிடம் செபிப்பது அதே நேரத்தில் அவர்களுக்காகவும் செபிப்பது என்ற பழக்கம் இருந்தது. உயிர்த்தெழச் செய்பவனும், வாழ்வு தருபவனும் வாழ்வார். எனவே உயிர்த்தெழுதலும், வாழ்வுமாக இருக்கும் இயேசு உடல் இறப்பின்மீது இருக்க வேண்டிய நம்பிக்கை அவனை முடிவில்லா வாழ்விற்கு இட்டுச் செல்கின்றது. ஆகவே நம்பிக்கையோடு இறந்தவர்களுக்காக மன்றாடுவோம். மரித்த விசுவாசிகளுக்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும். முடிவில்லாத பிரகாசம் அவர்களுக்கு பிரகாசிக்கக் கடவது.

**சந்தியாகு ஞானப்பிரகாசம், இராஜகிரிய**



கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் ஒரே தமிழ் பத்திரிகையாகிய "ஞான ஒளி" தனது சிறந்த கட்டுரைகளாலும், ஆக்கங்களாலும் சிறுவர் முதல் முதியோர் வரை நல்ல கத்தோலிக்க சமூக, மருத்துவ நிகழ்வுகளை படைத்து வருகின்றது.கொழும்பில் மட்டுமல்ல ஏனைய மறைமாவட்டங்கள், பங்குகள் பாடசாலைகள், கன்னியர் இல்லங்கள் என்று பல தளங்களில் ஞான ஒளி சென்றடைகின்றது.

ஆன்மீகம், சமூக கட்டுரைகள், சிறுவர் ஆக்கங்கள், மாணவர் உளவியல், வத்திக்கான் செய்திகள், கொழும்பு மறைமாவட்ட பங்கு செய்திகள், ஏனைய மறைமாவட்ட செய்திகள் ஞாயிறு மறையுரை போன்ற விடயங்களை உள்ளடக்கிய ஞானஒளி பத்திரிகை, தமிழ் மக்கள் அனைவருக்கும் கிடைக்கும் ஒரு வரப்பிரசாதமே இந் ஞான ஒளி பத்திரிகை.

உலகமே கொண்டாடும், கிறிஸ்மஸ் பெருவிழாவில் உங்கள் விளம்பரங்களைத் தந்து இப்பத்திரிகையை முன்னேற்றவும், அத்தோடு கிறிஸ்மஸ் ஆக்கங்கள் அதாவது கட்டுரை, கதைகள், கவிதைகள், சிறுகதைகள், சித்திரங்கள் என்பவற்றை எமக்கு நேரகாலத்தோடு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். சிறப்பாக கிறிஸ்மஸ் பிறப்பு பத்திரிகையாக வெளிவர எமக்கு உதவுங்கள். கார்த்திகை இறுதிக்குள் அல்லது மார்கழி முதல் வாரத்திற்குள் உங்கள் ஆக்கங்கள் எமக்கு கிடைக்கும்படியாக அனுப்புங்கள்.

**உங்களது ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்ப வேண்டிய முகவரி**

**இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08.**

**மின்னஞ்சல் :**
**cgnanaoli@yahoo.com**




# காலை உணவுக்கு முன் சாப்பிட கூடாத உணவு பொருள்கள்!

காலை உணவு என்பது ஒருநாளின் ஆரோக்கியமான தொடக்கத்துக்கு மிகவும் அவசியமான ஒன்று. ஏனெனில் அந்த நாள் முழுவதும் சுறுசுறுப்பாக செயல்பட தேவையான ஆற்றலை வழங்குவது காலை உணவுதான்.

எனவே எக்காரணத்தை முன்னிட்டும் காலை உணவைத் தவிர்ப்பது என்பது கூடாது. காலை உணவு எந்த அளவுக்கு முக்கியமோ அதே அளவு என்ன உணவை காலை உணவாக எடுத்துக்கொள்கிறோம் என்பதும் முக்கியம்.

ஆரோக்கியமற்ற காலை உணவை உண்பதைப் போலவே சரியான காலை உணவை உண்ணாததும் உங்களின் ஆரோக்கியத்தைப் பாதிக்கும். அதேசமயம் காலை உணவுக்கு முன்னர் நீங்கள் என்ன சாப்பிட வேண்டும் என்பதிலும் கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில் காலை உணவுக்கு முன்னர் நீங்கள் எடுத்துக்கொள்ளும் சில உணவுகள் உங்கள் ஆரோக்கியத்தை வெகுவாக பாதிக்கும்.

## சிட்ரஸ் பழங்கள்

காலை உணவுக்கு முன் சிட்ரஸ் பழங்களை ஒருபோதும் சாப்பிடக்கூடாது, ஏனெனில் இதில் உள்ள அமிலத்தன்மை உங்கள் வயிற்றில் அமிலத்தன்மை மற்றும் வாயுக்கோளாறை உண்டாக்கும். இவற்றில் உள்ள பைபர் மற்றும் ப்ரெக்டொஸ் வெறும்வயிற்றில் எடுத்துக்கொள்ளும்போது செரிமானத்தின் வேகத்தை குறைக்கிறது. ஆரஞ்சு மற்றும் திராட்சை போன்ற பழங்களை காலை உணவுக்கு முன் எடுத்துக்கொள்ள கூடாது.



## வாழைப்பழம்

வாழைப்பழத்தில் அதிகளவு பொட்டாசியம், பைபர் மற்றும் மக்னீசியம் உள்ளன, எனவே இதனை காலை உணவுக்கு முன் சாப்பிடக்கூடாது. அதிகளவு மக்னீசியம் கோளாறுகளை உண்டாக்கக்கூடும்.

## பேரிக்காய்

காலை உணவுக்கு முன் பேரிக்காய் சாப்பிடுவது உங்கள் வயிற்றின் உள்புற சதைகளை பாதிக்கக்கூடும், அதற்கு காரணம் அதிலுள்ள அதிகளவு பைபர். வயிற்றின் உள்புற சவ்வானது மிகவும் மென்மையானது. இதனால் அதிகளவு பைபரை தாங்க இயலாது. காலை உணவுக்கு முன் பேரிக்காய் சாப்பிடுவது அல்சரை உருவாக்கும்.

## கார்பனேற்றப்பட்ட பானங்கள்

பொதுவாக கார்பனேற்றப்பட்ட பானங்களில் அதிகளவு சர்க்கரையும், கார்பன்-டை-ஆக்சைடும் உள்ளது. இந்த கார்பன்-டை-ஆக்சைடு உங்கள் வயிற்றில் வாயுவை அதிகரிக்கும், மேலும் வயிற்றுக்குள் வீக்கத்தை உருவாக்கும். இந்த அதிகளவு சர்க்கரை பசியின்மையை ஏற்படுத்தும், எனவே இதனை காலை உணவுக்கு முன் சாப்பிடக் கூடாது.

## வெள்ளரிக்காய் காய்கறிகள்

எந்த நேரம் வேண்டுமென்றாலும் சாலட் சாப்பிடுவது ஆரோக்கியமானது என்ற ஒரு கருத்து நிலவுகிறது, இது தவறானது. நார்ச்சத்துக்கள் நிறைந்த வெள்ளரிக்காய் மற்றும் காய்கறிகளை காலை உணவுக்கு முன் எடுத்துக்கொள்வது நல்லதல்ல. இது செரிமானத்தை தாமதமாக்குவதுடன் அடிவயிற்றில் வலியையும் ஏற்படுத்துகிறது.



## தக்காளி

தக்காளியில் அதிகளவு டானிக் அமிலம் உள்ளது இது வயிற்றில் உள்ள அமிலத்தின் அளவை அதிகரிக்கிறது. மேலும் இதில் அதிகளவு விட்டமின் சி உள்ளது இது நெஞ்செரிச்சல் மற்றும் வாயுக்கோளாறை உண்டாக்கும். எனவே காலை உணவுக்கு முன் தக்காளி சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

## கேக்

கேக்குகளில் செறிவூட்டப்பட்ட ஈஸ்ட் இருப்பதால் இதனை காலை உணவுக்கு முன் சாப்பிடுவது நல்லதல்ல. இது வயிற்றின் உள்புற சதைகளில் பாதிப்பை ஏற்படுத்தும். மேலும் இதில் உள்ள அதிகளவு சர்க்கரை காலை உணவுக்கு முன் வெறும் வயிற்றில் எடுத்துக்கொள்ளப்படும்போது அது கல்லீரலில் பாதிப்பை ஏற்படுத்தும்.

## தயிர்



தயிரில் உள்ள லெக்டோபேசிலஸ் உறையவைக்கும் பண்பு கொண்டது. இதில் உள்ள லாக்டிக் அமிலம் வயிற்றுக்கு நன்மைகளை வழங்கக்கூடியது. காலை உணவுக்கு முன் தயிர் சாப்பிடும்போது இதில் உள்ள பாக்டீரியாக்கள் வயிற்றில் உள்ள ஹைட்ரோகுளோரிக் அமிலத்தை அழிக்கக்கூடும். மேலும் இதனால் உடலுக்கு தேவையான பல ஊட்டச்சத்துக்களும் கிடைக்காமல் போகலாம்.

## ஜாம்

ஜாமில் உள்ள சர்க்கரை மற்றும் டிரான்ஸ் கொழுப்புகள் உங்கள் ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் சமநிலையை பாதிக்கும். எனவே காலை உணவுக்கு முன் ஜாம் சாப்பிடுவது நல்லதல்ல. காலை உணவாக பிரட் மற்றும் ஜாம் சாப்பிடுவது பலருக்கும் வழக்கமாக இருக்கிறது. அதனை முற்றிலும் தவிர்ப்பது நல்லது.



## அடைக்கப்பட்ட பழச்சாறுகள்

செயற்கை இனிப்புகள் சேர்க்கப்பட்ட அடைக்கப்பட்ட பழச்சாறுகளை காலை உணவுக்கு முன் சாப்பிடும்போது அது பல பக்கவிளைவுகளை ஏற்படுத்தும். இதனை காலை உணவுக்கு முன் குடித்தால் அது உங்களுக்கு பசியின்மையை ஏற்படுத்தும் மேலும் நாள் முழுவதும் அயர்வை உணரவைக்கும்.

# சாப்பிட்டுக் கொண்டே டிவி பார்க்காதீர்கள்...!

நோயின்றி வாழ யாருக்குத்தான் ஆசை இருக்காது. ஆனால் அதனை பெறாமல் தடுப்பதே நமது உணவுமுறையும், வாழ்க்கைமுறையும்தான். நம் எடை அதிகரிக்கவும், ஆரோக்கியம் பாதிக்கவும் முக்கிய காரணம் நம்முடைய அலட்சியம்தான்.

நாம் தினசரி செய்யும் சில செயல்கள்தான் நம் ஆரோக்கியத்தைப் பாதிக்கிறது. அதில் முக்கியமான ஒன்று சாப்பிடும்போது டிவி பார்ப்பது. மாறிவரும் நமது வாழ்க்கை முறையில் சாப்பிடும் போதெல்லாம் தொலைக்காட்சியோ அல்லது கணிப்பொறியையோ பார்ப்பதை வழக்கமாக கொண்டிருக்கிறோம். இதனால் நமது உடலில் பல மாற்றங்களும், பக்கவிளைவுகளும் ஏற்படும்.

அதிகமாக சாப்பிட வழிவகுக்கும் பல்வேறு சோதனைகளின் மூலம், சாப்பிடும்போது அதிகமாக சாப்பிடத் தூண்டுகிறது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இனிப்புகள் மற்றும் தின்பண்டங்கள் அதிகம் சாப்பிடுவதைத் தூண்டுகிறது. இதனால் உடலில் கலோரிகளின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

மற்ற நேரத்துடன் ஒப்பிடும்போது தொலைக்காட்சி பார்த்துக்கொண்டே சாப்பிடுவது அதிகம் சாப்பிட தூண்டுவதுடன் பக்க விளைவுகளையும் ஏற்படுத்தும். கவன சிதறல் மருத்துவத்தின் படி நீங்கள் சாப்பிடும்போது உங்கள் மூளை அதைக் கண்காணித்து அதன் சுவை மற்றும் அளவை பற்றிய சிக்னல்களை அனுப்பும். ஆனால் டிவி பார்த்துக்கொண்டு நீங்கள் சாப்பிடும்போது உங்கள் மூளை எதில் கவனம் செலுத்த வேண்டும் என்பதில் குழம்பி கவன சிதறல் ஏற்படும், இதனால் மூளை தவறான சிக்னல்களை அனுப்பத் தொடங்கும். நீங்கள் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இது சாப்பிட தூண்டும்.



வளர்ச்சிதை மாற்றம் ஆய்வுகளின் படி தொலைக்காட்சி பார்ப்பது கலோரிகளைக் குறைக்க உதவாது, அதேசமயம் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டே சாப்பிடுவது வளர்ச்சிதை மாற்றத்தை குறைக்கும் எனவும் கண்டறியப்பட்டுள்ளது. இதனால் செரிமான கோளாறு மற்றும் ஆற்றல் இழப்பு ஏற்படலாம். அதிக உணவு நுகர்வுகள் அறிக்கைகளின் படி தொலைக்காட்சி பார்த்து கொண்டே மதிய உணவு சாப்பிடுவது அதிக தின்பண்டம் சாப்பிடும் உங்கள் ஆசையை அதிகரிக்கும்.

நிபுணர்களின் கருத்துப்படி சாப்பிடும்போது கவனச்சிதறல் ஏற்படுவது உங்கள் மூளை சாப்பிடும் உணவை பதிவு செய்யாது, அதனால் உங்களுக்கு பசி விரைவில் ஏற்பட வாய்ப்பு அதிகம். திருப்தியில்லா உணர்வு ஒருவேளை உங்களுக்கு இது சந்தோஷமான செய்தியாக இருக்கலாம், மருத்துவ அறிவியலின் படி ஒரே நேரத்தில் இரண்டு வேலை செய்யும்போது ஒரு செயலில்தான் மூளை ஈடுபடும், அதனால் மற்றொரு செயல் முழுவதும் வீணாகத்தான் ஆகும்.

சாப்பிடும் நேரத்தில் டிவி பார்க்கும்போது மூளை டிவியில் தான் கவனம் செலுத்தும், இதனால் உங்களுக்கு உணவில் இருந்து கிடைக்கும் சத்துகள் கிடைக்காது.

தொலைக்காட்சியின் முன் அமர்ந்து கொண்டு சாப்பிடுவது பார்ப்பதற்கு ஸ்டைலாக இருக்கலாம் ஆனால் இதனை ஒருபோதும் மருத்துவர்கள் ஊக்குவிக்கமாட்டார்கள். டிவி பார்த்துக்கொண்டே ஆரோக்கியமற்ற உணவுகளை சாப்பிடுவது இப்பொழுது வழக்கமான ஒன்றாகிவிட்டது. இப்படி தொடர்ந்து ஆரோக்கியமற்ற நொறுக்குத்தீனிகளை சாப்பிடுவது உங்கள் உடல் எடையை அதிகரிக்கும்.

இன்றைய தலைமுறை குழந்தைகள் உடல் எடை அதிகரிக்க இதுதான் முக்கிய காரணம். உறவு பிரச்சினைகள் நாள் முழுவதும் வெவ்வேறு இடங்களில் வேலை செய்யும்போது குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாக இருக்கும் ஒரே நேரம் இரவு மட்டும்தான். அந்த நேரமும் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டு சாப்பிடுவது குடும்பத்தினருக்கு இடையேயான விவாதங்களை குறைக்கும். அதிலும் நம்மில் பலரும் இப்பொழுது போனை பார்த்து கொண்டே சாப்பிடுவதை வழக்கமாக கொண்டிருக்கிறோம்.

பேச்சுக்கள்தான் குடும்பத்தில் இருக்கும் பாசத்தையும், உறவையும் உயிர்ப்புடன் வைத்திற்கும். அது குறையும்போது உறவுகளில் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது.

# மிளகு



மிளகுடன் மஞ்சள் சேர்த்தால் புற்றுநோய் எதிர்ப்புப் பலன்கள் அதிகரிப்பதாக ஓர் ஆய்வு தெரிவித்துள்ளது. சருமப் புற்றுநோய், வயிற்றுப் புற்றுநோய் மற்றும் குடல் கேன்சர் நோய்களையும் மிளகு தடுத்து வருவதையும் பல ஆய்வுகள் கூறியுள்ளன.

நமது சமையலில் தினமும் ஒரேயொரு தேக்கரண்டி மிளகுத் தூளை சேர்ப்பது மிகவும் ஆரோக்கியமானதாகும். ஜீரண சக்தியை அதிகரிக்கிறது. நாக்கின் ருசி ஆதாரங்களைத் தூண்டிவிட்டு வயிறு ஜட்ரோ குளோரிக் அமிலத்தை சுரக்கச் செய்ய மிளகு சிக்னல் கொடுக்கிறது. இந்த அமிலம்தான் ஜீரணமாவதற்கு மிகவும் முக்கியமானதாக இருந்து வருகிறது. அஜீரணம், வயிற்றுப்போக்கு, மலச்சிக்கல், அமிலச் சுரப்பு போன்றவற்றை மிளகு தடுக்கிறது. உடல் எடையைக் குறைக்க உதவுவது: நாம் எந்த உணவை எடுத்துக் கொண்டாலும் கரு மிளகு அதன் ஊட்டச்சத்துக்களை உறிஞ்சும் தன்மை கொண்டது. மேலும் மிளகின் புற அமைப்பு கொழுப்பு செல்களை சிதைக்கிறது. இதனால் உடல் பருமனாவதையும் தடுக்கிறது. மேலும் உடல் வியர்வையை அதிகரிக்கிறது. சிறுநீர் சீராக வெளியேற உதவி புரிகிறது. இதனால் உடலில் உள்ள கூடுதல் நீர் மற்றும் நச்சுப் பொருட்களை அது வெளியேற்றுகிறது. இவைதான் உடல் எடையைக் குறைக்கும் நடவடிக்கைகளாகும்.

**தலைப்பொடுகை ஒழிக்கும் மிளகு:**

கருப்பு மிளகை நன்றாக பொடி செய்து ஒரு கப் தயிருடன் கலக்கவும். இந்தக் கலவையை தலையில் நன்றாக பரவலாகத் தடவவும். அரை மணி நேரம் கழித்து தலை முடியை நன்றாக அலசவும். இப்போது ஷாம்பு பயன்படுத்தக்கூடாது. மறுநாள் ஷாம்பு போட்டு குளிக்கவும்.

# பல்சமய உரையாடல் திருப்பீட அவையின் தீபாவளி வாழ்த்துக்கள்



வலுவிழந்தோரின் எண்ணிக்கை பெருகிவரும் இன்றையச் சூழலில், கிறிஸ்தவர்களும், இந்துக்களும் இணைந்து ஆற்றும் நற்பணி முயற்சிகள் தீவிரமடைய வேண்டும்

தீபாவளித் திருநாளை கொண்டாடப்படும் குடும்பங்களிலும் அமைதியும், மகிழ்வும் பெருகவேண்டும் என்றும், திருப்பீடம் தன் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றது.

“கிறிஸ்தவர்களும், இந்துக்களும்: காயப்படக்கூடிய சமுதாயத்தைப் பாதுகாக்க” என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள இச்செய்தியில், வறியோர், வியாதியுற்றோர், வயதில் முதிர்ந்தோர், மாற்றுத்திறனாளிகள், புலம் பெயர்ந்தோர் என்று, இன்றைய உலகில் காயப்படக்கூடிய மக்களின் எண்ணிக்கை கூடி வருகிறது என்று கூறப்பட்டுள்ளது.

வலுவிழந்த இம்மக்களுக்கென கிறிஸ்தவர்களும், இந்துக்களும் பல்வேறு நற்பணிகளை ஆற்றிவருகின்றனர் என்பதில் ஐயம் ஏதுமில்லை என்றாலும், வலுவிழந்தோர், எண்ணிக்கையில் பெருகி வரும் இன்றையச் சூழலில், நமது நற்பணி முயற்சிகளும் தீவிரமடைய வேண்டும் என்று, இச்செய்தியில் அழைப்பு விடப்பட்டுள்ளது.

வறியோரின் இரண்டாவது உலக நாள், கார்த்திகை 18ம் திகதி சிறப்பிக்கப்படவிருப்பதையொட்டி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்டுள்ள செய்தியில், காயமடையக்கூடிய இச்சமுதாயத்தைச் சார்ந்தவர்கள், தங்களை வரவேற்க இதயங்களை திறக்கும் மக்களைக் காணும்போது, நிம்மதியும், மகிழ்வும் அடைகின்றனர் என்று கூறியுள்ள சொற்கள், இச்செய்தியில் இடம்பெற்றுள்ளன.

சமுதாயத்தில் யாரும் வெறுத்து, ஒதுக்கப்படக் கூடாது என்று சிந்திக்கும் வேளையில், நம் குடும்பங்களிலும், உறவுகளிலும் யாரும் இவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ளனரா என்பதையும் நாம் கருத்தில் கொள்ளவேண்டும் என்று இச்செய்தி அழைப்பு விடுக்கிறது.

அவரவர் தங்கள் சமயங்கள் காட்டும் ஆன்மீக பாரம்பரியங்களில் ஊன்றி நின்று, நல்மனம் கொண்ட அனைத்து மக்களோடும் இணைந்து, நாம் வாழும் இன்றைய உலகையும், வருங்காலத்தையும் மகிழ்விலும், நம்பிக்கையிலும் நிறைப்போம்.

# ஏழைக் கைம்பெண், கிறிஸ்தவ வாழ்வுக்கு ஓர் எடுத்துக்காட்டு



***இறைவன், அளவுகளையும், எண்ணிக்கைகளையும் கருதுபவர் அல்ல, மாறாக, தரமான வாழ்வைக் கருதுபவர் – திருத்தந்தை பிரான்சிஸ்***

அனைத்தையும் ஆண்டவனுக்கு வழங்கிய ஏழைக் கைம்பெண், கிறிஸ்தவ வாழ்வுக்கு ஓர் எடுத்துக்காட்டு என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கார்த்திக்கை 11, புனித பேதுரு பசிலிக்கா வளாகத்தில் கூடியிருந்த மக்களிடம் கூறினார். திருப்பலியில் வாசிக்கப்பட்ட நற்செய்தியை மையப்படுத்தி, நண்பகல் மூவேளை செப உரை வழங்கியத் திருத்தந்தை, தங்களை முக்கியமானவர்கள் என்று கருதிய செல்வந்தர்களையும், பணிவுடன் இறைவனை நாடிவந்த கைம்பெண்ணையும் ஒப்புமைப்படுத்திப் பேசினார்.

இறைவன், அளவுகளையும், எண்ணிக்கைகளையும் கருதுபவர் அல்ல, மாறாக, தரமான வாழ்வைக் கருதுபவர் என்று கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உள்ளத்தின் சிந்தனைகளை நன்கு அறியும் இறைவன், தூய எண்ணங்களுக்கு முக்கியத்துவம் வழங்குகிறார் என்று எடுத்துரைத்தார்.

வறுமையில் வாழ்ந்தாலும், தன்னை இறைவனுக்கு முற்றிலும் அர்ப்பணித்த அன்னை மரியா, நம்மையே இறைவனுக்குக் காணிக்கையாக்குவது எப்படி என்பதை சொல்லித்தருவாராக என்ற விண்ணப்பத்துடன், திருத்தந்தை, தன் மூவேளை செப உரையை நிறைவு செய்தார்.

# இன்றைய சவால்கள் மத்தியில், அன்பின் சாட்சிகளாக...

**முதியோரை பராமரிக்க வேண்டிய இளைய சமுதாயத்தின் கடமைகளையும், இளையோரை வழிநடத்த வேண்டிய முதியோரின் கடமைகளையும் வலியுறுத்துவோம்**



திருஅவை மற்றும், உலகில், பலன் தரும் இருப்பைக் கொண்டிருக்கும் போசே துறவு குழுமத்தின் 50ம் ஆண்டு கொண்டாட்டங்களில், தானும், ஆன்மீக முறையில் பங்குகொள்வதாக, அத்துறவு இல்ல நிறுவனரான, சகோதரர் என்சோ பியாங்கி (Enzo Bianchi) அவர்களுக்கு, வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

துறவு பாரம்பரியத்தில் வாழும் நோக்கத்துடன், துறவு வாழ்வின் புதுப்பித்தலுக்காக ஒரு சிறிய தீப்பொறிபோல் தொடங்கப்பட்ட போசே குழுமம், கிறிஸ்தவ சபைகளை ஒன்றிணைப்பதில் தன்னை அர்ப்பணிப்பதாகவும், செபத்தின் இடமாகவும், கிறிஸ்தவர்களிடையே உரையாடலின் இடமாகவும் மாறியுள்ளது குறித்து, தன் பாராட்டுக்களை, இச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை.

ஆறுதல் தேடி வருவோருக்கும், தங்களுக்குரிய பங்கு குறித்து அறிய முயலும் இளையோருக்கும், மத நம்பிக்கையாளர், நம்பிக்கையற்றோர் என அனைவருக்கும் எவ்வித பாகுபாடுமின்றி தங்கள் இல்லத்தில் வரவேற்பளிக்கும் போசே குழுமத்திற்கு, நன்றியை வெளியிடுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இன்றைய நவீன உலகம் விடுக்கும் சவால்களின் மத்தியில், நற்செய்தி காட்டும் அன்பின் சாட்சிகளாக தொடர்ந்து செயல்படுமாறு அவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

இன்றைய முதியோர் சமுதாயம் இளையோருக்கு ஊக்கமளிப்பதாகவும், இளைய சமுதாயமோ முதியோர் மட்டில் அக்கறையுடன் செயல்படுவதாகவும் இருக்க உதவுவோமாக என, மேலும் தன் செய்தியில் அழைப்பு விடுத்துள்ளார் திருத்தந்தை.





## திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி...

“கடவுள் நம்பிக்கைக்குரியவர். அவரில் நாம் கொண்டுள்ள விசுவாசம், வானுலகில் நிலை நிறுத்தப்பட்டுள்ள நங்கூரம் போன்றது“

“நம் பொது இல்லத்தை பாராமரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில், வன்முறை வார்த்தைகள், மற்றும், செயல்களிலிருந்து நம் இதயங்கள் தூர விலகியிருக்க வேண்டும் என செபிப்பதில் நம்மை அர்ப்பணிப்போம்“

“இயேசு நம்மை எவ்வித நிபந்தனைகளுமின்றி அன்பு கூர்ந்தார். கிறிஸ்தவ வாழ்வு என்பது, இயேசுவின் நிபந்தனைகளற்ற அன்பை பின்பற்றுவதாகும்“

”செபிப்பதன் பொருள் என்னவெனில், நண்பர் ஒருவரின் வீட்டுக்கதவைத் தட்டுவதாகும். இறைவனே நம் நண்பர்”

“ஆயராகப் பொறுப்பேற்றுள்ளவர்கள் பணிவு, மென்மை ஆகிய பண்புகள் கொண்டவராக இருக்க வேண்டும்.”

“நம்மிடையே, நமக்காக இருக்கும் இறைவனின் வாழும் பிரசன்னத்தைக் குறிக்கும் திருநற்கருணைக் கொண்டாட்டத்தால் புனிதமடைந்துள்ள ஞாயிறு, நமக்கு புனிதமான நாளாகும்”

“திருநற்கருணைக் கொண்டாட்டத்தினால் ஞாயிறு தினம் புனிதமடைகின்றது. ஆகவே ஞாயிறு தினமானது நமக்கு ஒரு புனிதமான நாளாகிறது”

“நம் வறிய நிலையையும், நாம் மீட்படைய வேண்டியவர்கள் என்பதையும் ஏற்றுக்கொள்வதே, இயேசுவை அறிந்துகொள்வதற்குத் தேவையான முதல் படி”



## கட்டுப்பாடுகளற்று வளரும் அறிவியல் ஆய்வுகள், ஆபத்தானவை

அறிவியலும், தொழில் நுட்பமும் சமுதாயத்தின் மீது தங்கள் பாதிப்பை உருவாக்கும் அதே வேளையில், உயரிய மதிப்பீடுகளையும் பண்பாடுகளையும் கொண்டிருக்கும் மனிதர்களும், அறிவியல் மீது தங்கள் தாக்கத்தைக் கொண்டுள்ளனர் என்று கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

ஆண்டு நிறையமர்வுக் கூட்டத்தை நடத்திவரும், பாப்பிறை அறிவியல் கழகத்தின் அங்கத்தினர்களை 12ம் திகதி காலையில் திருப்பீடத்தில் சந்தித்து உரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சுயசார்புடையதாகவும், தன்னிறைவு பெற்றதாகவும், தனக்குரிய இடத்தில் இருந்தவண்ணம், மதத்திற்கும் இறைவனுக்கும் எதிரான நம்பிக்கையின்மைகளை கடந்த காலங்களில் வெளியிட்டு வந்த அறிவியல் உலகம், இன்று, இவ்வுலகம், மற்றும், மனித குலம் குறித்த சிக்கல் நிறைந்த உண்மை நிலைகளை உணர்ந்துள்ளதுபோல் தோன்றுகிறது என உரைத்தார்.

எவ்வித கட்டுப்பாடுகளுமற்று வளரும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆய்வுகள், மனித குலத்திற்கு எதிராகக் செல்லும் ஆபத்து குறித்த அச்சமும் சில காலங்களில் எழுந்ததுண்டு என்பதையும், தன் உரையில் குறிப்பிட்டார், திருத்தந்தை பிரான்சிஸ்.

மனிதர்கள், சமூகம், அறிவியல் ஆகியவற்றிற்கிடையே நிலவும் உறவு புரிந்துகொள்ளப்பட்டு, அடிப்படை மதிப்பீடுகளுக்கு உரிய கவனத்துடன், மனித ஏக்கங்களைப் புரிந்துகொண்டதாக, அறிவியல் ஆய்வுகள் இருக்கவேண்டும் என்பதையும் வலியுறுத்திய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், போட்டிகள் நிறைந்த இன்றைய உலகில், அறிவியல் சமுதாயத்தின் ஞானமுள்ள, பொறுப்புணர்வுடன் கூடிய அர்ப்பணத்தின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

மனித குடும்பத்தின் ஒன்றிணைந்த வளர்ச்சிக்கு பணியாற்ற வேண்டிய அழைப்பைப் பெற்றுள்ள அறிவியல் சமுதாயம், மனித குலத்திலிருந்து தனித்து நிற்கும் ஒன்றாக நோக்கப்படாமல், அதன் ஒரு பகுதியாக நோக்கப்பட வேண்டும் என்ற அழைப்பையும் விடுத்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

# தெரிவோம் ... தெளிவோம்!



**ஓடிக்கொண்டிருக்கிற வாழ்க்கையை எப்படி அனுபவித்து வாழ்வது?**

நாளையைப் பற்றிக் கவலைப்படாமல் அந்த நொடியில் வாழவேண்டும். ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட கதாப்பாத்திரம் இருக்கிறது. தந்தையாக, மகனாக, கணவனாக இவை அனைத்தையும் சரிசமமாக மனதிருப்தியோடு வாழ்ந்தால் போதும். எதற்காக, யாருக்காக உழைக்கிறோம் என்று தெளிவு இருக்க வேண்டும். அதுவே வாழ்க்கையைச் சுவையாக்கும்.

**உங்களிடம் இருக்கும் திறமையை எப்படி வெளிக்கொண்டு வருவீர்கள்?**

எல்லா மனிதர்களிடமும் திறமை இருக்கிறது. அந்தத் திறமை எது என்று நாம் முதலில் தீர்மானிக்க வேண்டும். அப்படியே தீர்மானித்தாலும் அது உனக்கு சாப்பாடு போடுமா? திறமையை வைத்து பிழைக்க முடியுமா? என்று யோசிக்கிறோம். டான்ட் நன்றாக வரும். டான்ஸ் நன்றாக வரும் என்றால் அதை எல்லாம் செய்ய வேண்டாம், புத்தகத்தை எடுத்துப் படி என்று பெரியவர்கள் கூறுகிறார்கள். பெரியவர்கள் கூறினால் கேட்க வேண்டும் என்று கூறி வளர்க்கப்படும் குழந்தைகள் அவர்கள் சொல்வது சரி என்று அவர்களின் திறமையைக் கைவிடுவர்கள். சில நேரங்களில் திறமையைப் பின்பற்று என்று மனம் சொல்லும். அப்பா, அம்மா சொல்வதைக் கேட்டுப் படி என்று புத்தி சொல்லும். இவை இரண்டிற்கும் நடக்கும் போராட்டத்தில் சரியான ஆலோசகர் நம்மிடம் இருந்தால் எளிதில் திறமையால் வெற்றி பெறலாம். வாய்ப்புக்கள் பரந்துக் கிடக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொள்வது நமது கையில்தான் இருக்கிறது.

**தோல்வியின் பயத்தை எப்படி எதிர்கொள்வது?**

தோல்வி என்று எதுவுமே கிடையாது. எதிர் மறை எண்ணம், நல்ல எண்ணம் இரண்டுமே தீர்மானிக்கிறது. எடுத்துகாட்டாக: குளிர்ந்த தண்ணீரில் சுடுதண்ணீரை கலந்தால் சில நேரங்களில் அதன் தன்மை மாறுபடும். சரிசமமாக கலந்தால் பயனுள்ளதாக இருக்கும். நமக்குத் தோன்றும் எண்பதாயிரம் எண்ணங்களில், எழுபதாயிரம் எண்ணங்கள் நல்ல எண்ணங்களாக மாறினால் வெற்றி பெறலாம். நமது பலம் என்னவென்று நமக்குத் தெரிய வேண்டும். நமது பலம் என்னவென்று யோசிப்போம். பலவீனம் என்னவென்றால் யோசிக்காமல் பட்டியலிடுவோம். நம்மீது நமக்கு முதலில் நம்பிக்கை வரவேண்டும். அந்த நம்பிக்கையை ஆழ்மனத்தில் பதிய வைக்க வேண்டும். நமது பலத்தின்மீது நம்பிக்கை வைக்க வேண்டும். பலவீனத்தின்மீது அல்ல!



**வெற்றியைத் தீர்மானிக்கும் முக்கிய காரணம் எது?**

அளவற்ற ஆசையே வெற்றியைத் தீர்மானிக்கும். காரணம் தன்னம்பிக்கையுடனும், விடாமுயற்சியுடனும் செய்யும் காரியங்கள் அனைத்துமே வெற்றி பெறும். சைக்கிள் ஓட்ட கற்றுக் கொள்ளும்போது ஆயிரம் முறை கீழே விழுந்தாலும் எப்படியாவது ஓட்டிவிட வேண்டும் என்ற அளவற்ற ஆசையே நம்மை அதை ஓட்டச் செய்யும். எது வேண்டும், எதற்காக வேண்டும் என்ற கேள்வி இருந்தாலே நாம் வெற்றி பெறலாம்.

**நமது நம்பிக்கையே நாம் எப்படி வளர்த்துக் கொள்வது?**

மனதில் ஏற்படும் பயத்தை எதிர்கொண்டால் நம்பிக்கை தானாக வளர்ந்துவிடும். விடாமுயற்சியே நம்பிக்கையை வளர்க்கும். ஒரு குழந்தை தவழ ஆரம்பிக்கும்போது மனதில் பயத்தோடு தவழ ஆரம்பிக்காது. அதன் செயல்பாடுகள் நம்பிக்கையின் அடிப்படையிலேதான் இருக்கும். நம்முடைய இலக்கு என்ன என்பதை நம் ஆழ்மனதில் ஆணித்தரமாக பதிய வைத்தால் செய்யும் செயல்களின்மீது நம்பிக்கை வரும். எண்ணங்கள் தெளிவாகவும், நல்ல எண்ணங்களாகவும் இருக்க வேண்டும். அது நம்மை அடுத்தக் கட்டத்திற்கு நகர்த்தும்.

**காலம் பொன்னானதா?**

மாணவர்களிடம் அதிகம் நாம் பயன்படுத்தும் வாக்கியம் நன்றாகப் படிக்க வேண்டும். தூக்கத்தில் கேட்டால்கூட பதில் சொல்லும் அளவிற்கு நீங்கள் படித்திருக்க வேண்டும். இன்று நீ கஷ்டப்பட்டால்தான் நாளை சந்தோஷமாக இருக்க முடியும். இதைச் சொல்லி, சொல்லியே அவர்களுக்கு விளையாட நேரம் கொடுக்காமல், டான்ஸ் வகுப்பு, யோகா வகுப்பு, கராத்தே வகுப்பு, பாட்டு வகுப்பு... என எல்லாவற்றிற்கும் அனுப்பி விட்டு வாழ்க்கையை இரசிக்க முடியாமல் ஆக்கிவிடுகின்றோம்.

பள்ளிப் பருவத்தில் ஒன்பதாம் வகுப்பு, பத்தாம் வகுப்பில் நன்றாகப் படி, அப்பொழுதுதான் பதினொராம் வகுப்பில் நன்றாக தேர்ச்சி பெற முடியும். பதினொராம் வகுப்பு முடிந்தவுடன் ரிலாக்ஸா இருக்கலாம் என்று சொல்கிறோம். அதன் பிறகு ஒரு டிகிரியை முடித்துவிட்டால் போதும் என்று சொல்கிறோம். பின்பு வேலை தேடி ஓடுகிறோம். திருமணம் முடித்த பிறகு குடும்பத்திற்காக, பிள்ளைகளுக்காக உழைக்க வேண்டியிருக்கின்றது. வாழ்க்கையை இரசிக்கலாம் என்று நினைக்கும் பொழுது அவனுடைய குழந்தை பத்தாம் வகுப்பு படிக்கும் நிலைக்கு வந்துவிடும். ஓடி, ஓடி உழைத்து பணத்தைச் சம்பாதிக்கிறோம். ஆனால், மன நிம்மதியை இழந்து விடுகிறோம். நமது மன நிம்மதிக்காக வாழ்ந்தால் வாழ்க்கை சுவாரஸ்யமாக மாறிவிடும்.



**நம்பிக்கையே வாழ்வு... சரிதானா?**

ஒருவன் அவனுக்குப் பிடித்த துறை சார்ந்ததில் பயணிக்கப் போகிறான் என்றால் அவனை வாழ்த்த வேண்டும். முன்பெல்லாம் ஒரு பாடப் பிரிவு எடுத்துப் படிக்கிறேன், அல்லது ஒரு வேலைக்குப் போகிறேன் என்று சொன்னால் நாம் அவன் வேலை பாதுகாப்பு கருதி பயப்படுவோம். இதற்கு முன்னாடி யாராவது இந்தப் படிப்பு படித்திருக்கிறார்களா? என்று ஆராய்ந்து பார்ப்போம். ஆனால், இப்பொழுது அப்படி இல்லை. நமக்கு நல்வழி சொல்வதற்கு நிறைய முன்னோடிகள் இருப்பார்கள். நம் திறமை நம் வாழ்க்கையை வெற்றியடையச் செய்யும்.

குற்றம் சொல்லாத சுற்றம் இல்லை. நாம் ஜெயித்தால் 'எனக்கு முன்பே தெரியும், நீ ஜெயிப்பாய்' என்று பிறர் சொல்வார்கள். இதுவே நாம் தோற்றால் 'எதற்கு இந்தத் தேவையில்லாத வேலை?' என்று குறை கூற முன்வருவார்கள். நமக்கு மற்றவர்களின் முன்னிலையில் பேச கூச்சமாக இருக்கும். புதிதாக ஒருவரை நண்பராகக் கருதி பழகுவதற்கு தயக்கமாக இருக்கும். நம்மில் ஏற்படும் தயக்கத்தை உடைத்தெறி-ந்தாலே தன்னம்பிக்கை தானாக பிறக்கும். முடியாது என்று யாரோ ஒருவன் சொல்லிக் கொண்டிருந்த விசயத்தை நம்மால் முடியும் என்று சாதித்து விட்டுச் செல்வர். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு திறமை உள்ளது. அதைக் கண்டறிந்து தன்னம்பிக்கையால் இந்த உலகிற்கு வெளிப்படுத்த வேண்டும்.

**உயர்வுக்கு வழி என்ன?**

ஒருவர் சாக்ரடிஸிடம் "ஐயா, நான் வெற்றி-யடைய என்ன செய்ய வேண்டும்?" எனக் கேட்கிறார். சாக்ரடீஸ் "நாளை நம் நதிக்கரைக்கு வந்துவிடு" என்கிறார். அடுத்த நாள் அவனுடைய தலையை தண்ணீருக்குள் மூழ்கச் செய்தார். அவனால் எளிதாகச் சுவாசிகக் முடியவில்லை. தண்ணீருக்குள் தத்தளிக்கிறான், தவிக்கிறான். பல முயற்சிகள் எடுத்தும் அவனால் வெளியே வரமுடியவில்லை. ஒரு கட்டத்தில் வந்துவிடுகிறான். சாக்ரடீஸ் அவனிடம் கேட்கிறார்... "வெளியே வர நீ என்னென்ன முயற்சிகள் எடுத்தாய்?" உடனே அவன் "சுவாசிக்க காற்றுக்காக ஆசைப்பட்டேன்" என்றான். அடுத்த கேள்வி "அதற்கு நீ துடித்தாயா?" "உயிரைக் கொடுத்து துடித்தேன்" என்றான். சாக்ரடீஸ் "அதற்கு ஏங்கினாயா?" என்று கேட்டார். "மனதார ஏங்கினேன்" என்றான். அதற்கு சாக்ரடீஸ் "உனக்குப் பதில் கிடைத்துவிட்டது. ஒரு விசயத்துக்கு உயிர் கொடுத்து உழைக்க வேண்டும். அதற்கு நீ மனதால் ஆசைப்பட வேண்டும். இதுவே உனக்கு வெற்றியைத் தரும்"

# இரத்தினபுரி மறைமாவட்டத்தில் - மலையகத்தில், இப்படியும் வாழ்ந்த ஒரு தாயார்

மாலிபொட பங்கிற்குச் சொந்தமான திகல தோட்டத்தில் பிறந்து வளர்ந்து இன்று இயேசு சபையில் குருவானவராக இயேசு சபையில் இணைந்துக்கொண்டு 'மன்னார் மறைமாவட்டத்தில் சேவை புரிந்து வரும் அருட்பணி பிச்சை ரிச்சட் (இயேசு சபை) அடிகளாரின் பாசமிகு அன்னையார் திருமதி ஞானசவுந்தரி அவர்களின் இறுதி மரணச்சடங்கில் கலந்துகொண்டபோது திருப்பலியின் பின்னர் மறைந்த அன்னைக்கு இரங்கல் உரைகள் ஆற்றினர். அப்போது மரித்த அன்னையின் கொள்ளுப்பேத்தி ஒருவர் இவ்வாறு கூறினார்.


- எமது கொள்ளுப்பாட்டியின் பெயர் ஞானசவுந்தரி.
- எனது அம்மாவின் அப்பாவுடைய அம்மா.
- 84 வயதில் 2017-11-26ல் காலமானார்.
- தமது அன்பு மகன் ரிச்சர்ட் அவர்களை இறையூழியதுக்கு அர்ப்பணித்தார்.
- இறைவேண்டுதலில் அதிகமான ஈடுபாடுடையவர்.
- அமைதியான நடையுடை பாவனையுடையவர்.
- தமது கணவருக்கு பிரமாணிக்கமாய் வாழ்ந்தவர்.
- முன்மாதிரிகையான குடும்ப வாழ்க்கை வாழ்ந்தவர்.
- பொறுமையுடையவர்.
- இரக்க குணமுடையவர்.
- கர்ப்பிணி பெண்களின் பிரசவங்களுக்கு உறுதுணையாக இருந்தவர்.
- சிறுவர்களின் மீது பற்றும் - பாசமும் கொண்டு பராமரித்தவர்.
- அநேகரை திருமணபந்தத்தில் இணைத்தவர்.
- நோயாளருக்கு கைமருந்து-கைவைத்தியம் செய்வதில் வல்லவர்.
- செபமாலை சொல்வதிலும் - எம்மை சொல்ல வைப்பதிலும் ஊக்குவித்தவர்.

மேல் குறித்தவாறு கூறி அனைவரது மனதையும் உருகவைத்தார். இவ்வாறு கூறி ஒருவருட-மாகியும் என் மனதில் இவ்வார்த்தைகள் நிலையாக நிலைத்திருக்கிறது. 2018-11-26ம் திகதி ஒரு வருட பூர்த்தி நினைவில் அன்னையின் ஆத்துமம் நித்திய இளைப்பாற்றியில் இளைப்பாற வேண்டுமென இந்த மரித்த விசுவாசிகளை நினைவுகூறும் மாதத்தில் நினைவு கூறி ஞானசவுந்தரி அன்னைக்கும் யாரும் நினையாத ஆத்துமாக்களுக்காகவும் நினைவு கூறி மன்றாடுகின்றேன். மரித்த சகர ஆத்துமங்களும் நித்திய இளைப்பாற்றியில் இளைப்பாறக்கடவது.



**தொகுப்பு:- மேரி இருதயநாதன் (மறையாசிரியர்)**
**பேராலயம், இரத்தினபுரி**

# விவிலிய வாசிப்பு




**4. சமூக மாற்றத்திற்கு விவிலிய வாசிப்பு.**

விவிலியம் தனிநபர் செபத்திற்கும் மனமாற்றத்திற்கும் மட்டுமல்ல, சமூக மாற்றத்திற்கும் வழிகோலும் ஒன்று. நாம் தனி நபர்களாக அல்ல சமூகமாக, இறைச்சமூகமாக வாழ்கின்றோம். அவ்வாறு நாம் சமூகமாக சேர்ந்து வருகின்றபோது, நாம் எப்படி எல்லாம் விவிலியத்தை வாசித்துப் பொருள் கொள்ளலாம் என இங்கு யோசிப்போம்.

வரலாற்றில் இதுவரை நிகழ்ந்த விவிலிய வாசிப்புக்கள், விளக்க உரைகள் ஆகிய அனைத்தையும் அறிஞர்கள் மூன்று வகையாகப் பிரிக்கின்றனர்.

**1. ஆசிரியர் சொல்ல வந்த பொருள்** - Author Meaning

**2. விவிலியப் பகுதியின் பொருள்** - Text Meaning

**3. வாசகர் காணும் பொருள்** - Reader Meaning

நாம் மேற்சொன்ன தேவைக்கு (சமூக வாசிப்புக்கு) மூன்றாவது பகுதியான வாசகர் காணும் பொருள் வகை மிகவும் பொருந்தும். இன்றைய காலகட்டத்தில் விவிலியப் பகுதி தன்னிலே பொதுவான கருத்தைச் சொல்வதைவிட, அது யாரால் வாசிக்கப்படுகின்றதோ அவர்களின் சமூக, சமய, பொருளாதார, அரசியல் தேவைகளுக்கு ஏற்ப பல்வேறு செய்திகள் சொல்லும். காலனியாதிக்க விவிலியப் பொருள்கோள் முறைக்கும், அடித்தட்டு மக்கள் நிலை பொருள்கோள் முறைக்கும் பாரதூர வித்தியாசம் உண்டு. (சான்று தொழுநோயாளர்கள் குணமாதல் நிகழ்வு, ஒரு தொழுநோயாளருக்குத் தரும் செய்தியும், நடுத்தட்டு மனிதருக்குத் தரும் செய்தியும் வேறுபட்டதாக இருக்கும்)

எனவே, விவிலியத்தை வாசகர் வழிநின்று, அதுவும் குழுமமாக நின்று வாசித்துப் பொருள் கொள்வதும். அத்தகைய வாசிப்பு தரும் செய்திகளின் அடிப்படையில் குடிமைச் சமூகத்தையும், இறைச் சமூகத்தையும், அன்பியம் போன்ற சிறு சமூகங்களையும் மாற்றலாம். மாற்றும் சக்தி விவிலியத்திற்கு உண்டு. எனவே சமூகமாக குறிப்பாக அன்பியங்களில் இறைவார்த்தையை வாசித்துப் பொருள் காண உதவும் நான்கு நிலைகளை இங்கு காணலாம்.

**1. அனுபவம்.**

இந்நிலையில் இறைமக்கள் ஒன்றாய்க் கூடிவந்து தூய ஆவியின் பாடல், செபம் மூலம் இறைப்பிரசன்னத்தை உணர்ந்த பிறகு, இப்போது உடனடியாக பெரும்பான்மையானவர்களின் அனுபவம், பாதிக்கிற பிரச்சனை என்ன? அவர்களின் கவனமெல்லாம் எதன் மீது உள்ளது? அந்த அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டு அவர்களில் பெரும்பான்மையானவர்களின் ஒரு பிரச்சனையை விவாதத்திற்கு, செபத்திற்கு எடுத்துக் கொள்ளலாம்.

**2. ஆய்வு**

இரண்டாம் நிலையில் அந்தப் பிரச்சனையை கொஞ்சம் ஆய்வுக்கு உட்படுத்தலாம். அந்தப் பிரச்சனையின் வரலாறு என்ன? தொடக்கம் என்ன? அதற்கானக் காரணிகள் என்ன? அதனின்று விடுபட வழிகள் யாவை? இவை போன்ற வினாக்களுக்கு விடைகாணலாம்.

**3. இறைவார்த்தை [இலட்சியம்]**

மூன்றாம் நிலையில் விவிலியத்தில், புதிய, பழைய ஏற்பாடுகளில் இது போன்ற நிகழ்வுகள், இதையொத்த வரலாற்று நிகழ்வுகள் நிகழ்ந்துள்ளனவா? இயேசு நேரடியாக, அல்லது மறைமுகமாக இத்தகையதொரு பிரச்சனைக்கு என்ன தீர்வு சொல்லியிருக்கிறார்? திருநூலின் எந்தப் பகுதியில் இன்றைய பிரச்சனையைப் பொருத்திப் பார்க்கலாம். விவிலியம் இதற்குத் தருகிற தீர்வு, தெளிவு, விடை என்ன? திருச்சபையின் வரலாற்றில் போதனையில் இந்தப் பிரச்சனை எப்படி அலசப்பட்டது, ஆராயப்பட்டது? திருச்சபை தரும் படிப்பினை அல்லது போதனை என்ன?

**4. ஈடுபாடு**

இறுதியாக, இன்றைய நமது அரசியல், சமூக, சமய, கலாச்சாரச் சூழலில் நாம் தனி நபராக, குழுவாக என்ன செய்யலாம்? எத்தகைய செயல்பாடுகளில் ஈடுபடலாம்? அதற்கான செயல்திட்டங்களைத் தீட்டலாம். அதற்கான பணிப்பகிர்வு செய்யலாம். இறுதியாக இன்றைய வெளிப்பாடுகளுக்கு நன்றிகூறி, செயல்திட்டங்களைச் செயல்படுத்த அருள்வேண்டி, அல்லது பிற கருத்துக்களுக்காகச் செபித்து முடிக்கலாம்.

**இறுதியாக**

மாறாக இவ்வாறெல்லாம் வரலாற்றில், தனி நபர்களால், குழுக்களால், அறிஞர்களால் விவிலியம் வாசிக்கப்பட்டு வந்துள்ளது என்பதை இப்பகுதி சுட்டிக்காட்டுகிறது. இதை வாசிப்பவருக்கு எந்த அளவுக்குப் பயன்படுமோ அந்த அளவுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். அல்லது இவற்றில் ஆரம்பித்து இதையும் தாண்டி ஒரு புதிய முறையைக் கண்டடையலாம். உண்மையில் சொல்லப்போனால் விவிலியத்தை நமது நாட்டின், கலாச்சாரத்தின் பின்னணியில் மண்வாசனையோடு வாசிக்கும் புதிய முறைகளை நாம் வளர்த்தெடுக்கவும் தயங்கக்கூடாது.

தொடரும்



# ஒரு நாள்

உலகப் புகழ்பெற்ற உத்தமரோ! கலகம் செய்து காலம் கடந்தவரோ! மலர்களின் மன்னர் என்ற அன்பரோ! குலவிளக்கோ, கற்பின் தளிரோ உலகில் மனிதனாகப் பிறந்த எல்லோரும் கடைசியில் அடைக்கலமாக அடக்கமாகும் இடம் இந்த விண்ணக வாசல் கல்லறை!

குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் என்பது டார்வின் தத்துவம் என்றாலும், இறை வார்த்தையின்படி ஆதியிலே ஆறாம் நாள் மனிதனைப் படைத்தார். ஏழாம் நாள் ஓய்ந்திருந்தார்.

இன்று மனிதனுக்கு ஓய்வில்லை, ஒழிச்சலில்லை, நிம்மதியில்லை, மனிதன் என்ற நிலையை அடைந்த 18 வயது முதல் சாகும்வரை போராட்டம்!

ஓடி ஓடி உழைத்தவன் ஓய்வெடுக்க கிடைத்த இடம் கல்லறை....!

கல்லறையில் புதைத்ததாகக் கூறப்படுவது உண்மை அல்ல. எல்லோருமே மண்ணுக்குள்ளேதான் புதைக்கப்படுகிறார்கள்.

மாண்ட மனிதரெல்லாம் ஒரு நாள் இயேசுவின் மறு வருகையின்போது மண்ணிலிருந்து எழும்பி வருவார்கள் என்பது கிறிஸ்தவ நம்பிக்கை. உலகின் மனிதன் தோன்றியது முதல் இன்று வரை வாழ்ந்து மடிந்தவர்களைக் கணக்கெடுக்க இயலாது.

இறந்த மனிதரை மண்ணில் புதைக்கும்போது அந்த இடத்தின் அடியில் எத்தனை மனிதர்கள் அடக்கம் என்று கணக்குப் பார்க்க இயலாது.

ஆனந்து தன் மனைவி மக்களுடன் கல்லறைத் தோட்டத்தில் இருந்தார்கள். ஆனந்தின் தந்தை அடைக்கலசாமி, தாயார் சந்தோசம் அம்மாள் புதைக்கப்பட்ட கல்லறையில்தான் அவனது தாத்தா - பாட்டி வகையறாக்கள் வம்ச வாரியாக அடக்கப்பட்டார்கள்.

உலகம் உருண்டை எனச் சொன்ன விஞ்ஞானி கலிலியோ சிறையில் அடைக்கப்பட்ட எட்டு ஆண்டுகளில் கண் பார்வை இழந்து சிறையிலேயே மாண்டு போனார். அஞ்ஞானம் அகன்று மெய் ஞானமான விஞ்ஞான அறிவால் உலகம் உருண்டை வடிவம் தான் என்று திருச்சபை ஏற்றுக்கொண்டபோது தண்டிக்கப்பட்ட கலிலியோ கல்லறைக்குள் புதையுண்டார்.

ஆனந்துவின் தந்தை அடைக்கலம் சிறுவயதில் படிக்கும்போது படிப்பு ஏறவில்லை. அதனால் வீட்டை விட்டு ஓடிப்போய் இராணுவத்தில் சேர்ந்து கொண்டார். பள்ளிக்கூடத்தில் படிப்பைப் கூடப் படித்து விடலாம், ஆனால் மிலிட்டிரியில் பயிற்சி காலத்தில் மேற்கொண்ட பயிற்சிகள், அடைந்த தோல்விகள், தாங்க முடியாத வேதனை.... எப்படியோ பயிற்சி முடிந்த பிறகு வாகனம் ஓட்டும் பணி கிடைத்தது. ஒப்பந்த காலம் முடிந்தபோது அடைக்கலத்துக்கு 35 வயது. திருமணம் நடந்தது. சந்தோசத்தோடு சந்தோசமாக ஆனந்து பிறந்தான்.

இருபது ஆண்டுகள் இராணுவத்தில் கடைப்பிடித்த கெடுபிடியான வாழ்க்கை முறையிலேயே அடைக்கலம் வாழ்ந்தார். தன் மகனையும் அதுபோல கண்டிப்புடன் வளர்த்தார். மிலிட்டரி எக்ஸ் சர்வீஸ் மேன் கோட்டாவில் போக்குவரத்து துறையில் வாகன ஓட்டுநராகப் பணி கிடைத்தது. இடம், பொருள், ஏவல் அறிந்து அடைக்கலம் நடந்துகொள்வார்.

ஆனந்து பள்ளியில் சேர்ந்தது முதல் தினமும் காலையில் பள்ளியில் விடுவதும், மதிய உணவு கொடுப்பதும், மாலையில் கூட்டி வருவதும் எல்லாம் அம்மாதான்.

எந்த கெட்ட பழக்கமும் இல்லாத மிலிட்டரி அடைக்கலம் ஹார்ட் அட்டாக்கில் இறந்தார். அவரது நினைவிலேயே காலமெல்லாம் சந்தோசமாக வாழ்ந்த ஆனந்தின் தாய் சந்தோசம், கணவனை இழந்த பின்பு அதே மனக்கவலையில் அவரும் இறந்தார்.

அப்பா, அம்மா இருவரையும் புதைத்த "மண்ணறை" மேடையில்தான் ஆனந்து முகம் சோர தேம்பி அழுதுகொண்டிருந்தான். இன்னும் எத்தனை நாளோ, இதோ இதே இடத்தில்தான் நாம் இறந்த பிறகு இங்கே கொண்டு வந்து புதைப்பார்கள். அப்போது எனது மனைவியும் மக்களும் ஒரு நாள் பூ, சாம்பிராணி போட்டு கொஞ்சநேரம் அழுதுவிட்டு போவார்கள்.

மனிதன் வாழும்போது இந்த நிலையற்ற வாழ்வை சதமென நம்பி எப்படி எப்படியோ வாழ்கிறான்! கடைசியில் ஒரு நாள் நல்லோர்க்கும், தீயோர்க்கும், எல்லோர்க்கும் நிலையான இடம் இங்கேதான் என்பதை நினைத்துப் பார்க்க மறந்துவிடுகிறான்.

உலகே மாயம், வாழ்வே மாயம், இந்த உலக வாழ்வே சதம் என்று நினைப்போர்க்கு ஒரு நாள் எல்லாம் மாயையாய் மறைந்துபோகும்.

இறைவீடான மோட்சமே நம் நித்திய முடிவில்லா பேரின்ப வீடு! இவ்வுலக வாழ்க்கை மறுவுலக வாழ்க்கைப் புத்தகத்தின் முன்னுரை என்பதை உணர்ந்து வாழ்வோர்க்கு ஒரு நாள் என்பது ஆனந்தமாகவே இருக்கும். அங்கே அழுகையில்லை, ஒப்பாரியில்லை, சங்கடமில்லை, சாத்திரமில்லை.

**ஏ.... மனிதா மண்ணிலிருந்து பிறந்தாய்!**

**மீண்டும் மண்ணுக்கே போவாய்...!**

இதையறிந்து கொண்டு, அந்த ஒரு நாள் தனக்கும் வரும் எனக் காத்திருப்போர்க்கு என்றும் சந்தோசமே!

"நீ என்னை மகிமைப்படுத்த, மகிமைப்படுத்த நான் உன்னை மென்மேலும் ஆசீர்வதிப்பேன்"

## புதுச்செட்டித்தெரு, புனித வியாகுல அன்னை பங்கில்

# கிறிஸ்து அரசர் பெருவிழா



உமது இராட்சியம் வருக

25.11.2018 (ஞாயிற்றுக்கிழமை) கொண்டாடப்படவுள்ளது. பங்கு மக்கள் அனைவரும் தவறாமல் ஒன்றிணைந்து கிறிஸ்து அரசர் புகழை பறைசாற்றுவோம்.

**ஆயத்த வழிபாடுகள்.**

23.11.2018 – வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு செபமாலை, பிரார்த்தனை, திருப்பலி

24.11.2018 – சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு செபமாலை, பிரார்த்தனை, மாலை ஆராதனை (வெஸ்பர்)

**வழிநடத்துபவர்**

அருட்தந்தை V. G. குணநாயகம் O.M.I (குணம்)



அருட்தந்தை.
A.F. மார்சிலியார்
(அ.ம.தி)
ஆன்மீக இயக்குனர்
பங்குத் தந்தை


**25.11.2018 திருவிழா**

ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு திருவிழாக் கூட்டுத் திருப்பலியைத் தொடர்ந்து ஆலயத்தின் உள்ளே திருச்சுரூப பவனியும், ஆசீரும் நடைபெறும்.

ஒருங்கிணைப்பு
கிறிஸ்து அரசர் சபையினர்
புதுச்செட்டித்தெரு பங்கு, கொழும்பு 13.

(N3971)

---



# லசாலியன் ஆங்கிலப் பயிற்சி நிலையம்

- கல்விக்காகத் தம்மை அர்ப்பணித்துள்ள டிலாசால் துறவற சபைச் சகோதரர்களால் க.பொ.த சா/த, க.பொ.த உ/த முடித்தவர்கள், இளைஞர்கள், பெற்றோர், முதியோருக்காக நடாத்தப்படும் ஆங்கில பயிற்சி நெறி.
- கண்கவரும் ஓவியத்தைப் பார்ப்பது போன்று, இந்து சமுத்திரத்தைப் பார்த்தபடி மகிழ்ச்சியாக இலகுவாகக் கற்றுக்கொள்ள வந்து அனுபவித்துப் பாருங்கள்.

**பயிற்சியின் முடிவில் டிப்ளோமாச் சான்றிதழ் வழங்கப்படும்.**

தொழில்புரிவோர், மற்றும் வீட்டில் உள்ளவர்கள் அனைவருக்கும் ஆங்கில வகுப்புக்கள் வைகாசி மாதம் 5ந் திகதி காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகும்

**பயிற்சி நெறியில் உள்ளடக்கப்படும் விடயங்கள்**

| | | |
|---|---|---|
| 1. செவிமடுத்தல் | 2. கதைத்தல் | 3. வாசித்தல் |
| 4. இலக்கணம் | 5. சொல்லகராதி | 6. வாக்கிய அமைப்பு |
| 7. மரபுத்தொடர் | 8. நேர்த்தியான ஆங்கிலம் | 9. சொல்லிலக்கணம் |
| 10. வார்த்தை விளையாட்டு | 11. கலாச்சார வாழ்க்கை மதிப்பீடு | 12. ஆங்கில பாடல்கள் |
| 13. ஆளுமை வளர்ச்சி | 14. உணவுக் கருவிகளின் பாவனை முறை | |

**பயிற்சிக் காலம் – 3 மாதங்கள்**

தை மாதம் 4ந் திகதி தொடக்கம் சித்திரை மாதம் 5ந் திகதி 2019 வரை திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை

(N3892)

தங்குமிட வசதிகள் இருபாலருக்கும் செய்துகொடுக்கப்படும்

- விண்ணப்பப் படிவங்களைத் தபால் மூலம் பெற்றுக் கொள்ள பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.
  அருட்சகோ. அகஸ்ரின் ஜெயந்த சில்வா, 071 – 2188551
- பதிவு செய்தலும், தரப்படுத்தலுக்குமான பரீட்சையும் 2019, தை மாதம் 4ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு 130, டிலாசால் வீதியில் அமைந்துள்ள டிலாசால் இல்லத்தில் நடைபெறும்.

அருட்சகோதரர். அகஸ்ரின் ஜெயந்த சில்வா F.S.C, இயக்குனர், லசாலியன் ஆங்கிலப் பயிற்சி நிலையம், 130, டிலாசால் வீதி, முகத்துவாரம், கொழும்பு – 15. தொ.பேசி.இல 071–2188551

---




உரோமை உர்பானிய பல்கலைக்கழகத்தின் அனுசரணையுடன் கொழும்பு புனித யோசேவ்வாஸ் தமிழ் இறையியல் கல்லூரியினால் தற்பொழுது உங்களுக்கும்...

# டிப்ளோமாவும் பட்டப்படிப்பும்

வயது 18 இற்கு மேற்பட்டவராகவும், 50 இற்கு குறைந்தவராகவும் இருப்பின், கீழே தரப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவராயின், இதோ! ஓர் அரிய சந்தர்ப்பம்.

## எங்கள் இலக்கு

1. பொதுநிலை, துறவற கத்தோலிக்கருக்கு, கத்தோலிக்க திருமறையினை தமிழ்மொழியில் ஆழமாக பயிலுவதற்கு சந்தர்ப்பத்தினை வழங்கல்.
2. இதன் வழி அவர்களை விசுவாசத்தில் உறுதி பெறச்செய்தல்.
3. அவர்கள் ஆழமான அறிவினைப் பெறவும், மறைபரப்புப் பணியில் ஆர்வம் கொள்ளவும் செய்தல்.
4. மூன்று வருட பாடநெறியில் சித்தியெய்தியவர்களுக்கு 'டிப்ளோமா" சான்றிதழ் வழங்கல்.
5. டிப்ளோமா சான்றிதழோடு இறுதி ஆண்டு கற்கை நெறியினை பூர்த்தி செய்து பட்டப்படிப்பில் சித்தியெய்தியவர்களுக்கு உரோமை உர்பானிய பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற கிறிஸ்தவ கற்கைநெறி தொடர்பான கலைமானி பட்டத்தை வழங்கல்.

## கல்வித் தகமைகள்

**டிப்ளோமா**

- ☆ க.பொ.த (சா/த) அல்லது மறையாசிரியர் இரண்டாம் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

**பட்டப்படிப்பு**

- ☆ க.பொ. த (சா/த) பரீட்சையில் (தமிழ் மொழி மற்றும் கணிதம் உட்பட சித்தியடைந்திருத்தல்)
- ☆ க.பொ.த (உ/த) பரீட்சையில் (3 பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல்)
- ☆ அருளாளர் யோசேவ் வாஸ் இறையியல் கல்லூரியின் டிப்ளோமா பாடநெறியில் சித்தியடைந்திருத்தல்

**சான்றிதழ்**

மேலே குறிப்பிடப்பட்ட தகைமைகள் இல்லாதவர்களும், மறையியலில் ஆழமான அறிவினைப் பெற்றுக் கொள்ள விரும்பின் கற்கை நெறியில் முற்று முழுதாக கலந்து கொண்டு சான்றிதழ் பெறும் வாய்ப்பும் உண்டு.

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.**

☆ அருட்தந்தை றெஜினோல்ட் லூசியன் (OMI)
தொலைபேசி : 011 – 2446123, 071 – 8299151
: 077 – 7134775, 077 – 1227773

**நேர்முகப் பரீட்சை விபரம்**

திகதி : 01 – 12 – 2018
நேரம் : பி.ப 4.00மணி முதல் 6.30மணி வரை
இடம் : கொழும்பு அக்குவைனஸ் கல்லூரி தமிழ் இறையியல் விரிவுரை மண்டபம் இல 49

**விரிவுரை விபரம்**

நாள் : சனிக்கிழமைகளில் காலை தொடக்கம் மாலை வரை
இடம் : கொழும்பு அக்குவைனஸ் கல்லூரி தமிழ் இறையியல் விரிவுரை மண்டபம்.
கட்டணம் : அனுமதிக் கட்டணம் – 500/=
மாத கட்டணம் – 300/=
அல்லது
ஆறு மாத காலத்திற்கு – 1500/=

(Q18N5727)

**வாருங்கள், சேருங்கள் மறைபரப்பாளராக மாறிடுங்கள்**


அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம், இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்